**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம் மட்டுமல்ல. Added villages என்று சொல்லக்கூடிய கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள் முழுவதிலும் உள்ள மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்ற வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசினுடைய நோக்கமாகும். அந்த வகையிலேதான், பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ‘அந்தப் பகுதியில் சந்துகள் குறுகலாக இருக்கின்றன; அங்கு வீடுகள் கட்டி விடுகின்றார்கள்; மேலே செல்கின்ற மின் கம்பிகள் வீட்டிற்கு அருகிலேயே செல்வதால், உயிரிழப்புகள் ஏற்படுகின்றன’ என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் பலமுறை சட்டமன்றத்தில் இதுகுறித்து சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே, H.T. line ஆக இருந்தாலும் சரி, L.T. line ஆக இருந்தாலும் சரி, மேலே மின் கம்பிகள் சென்று கொண்டிருக்கின்றன. அவற்றின் கீழே வீடுகளைக் கட்டி விடுகின்றார்கள். வீடுகளைக் கட்டியதற்குப் பின்னால், அவர்கள் எங்களிடத்திலே வந்து ‘மேலே மின் கம்பிகள் செல்கின்றன; அதனால் அவற்றை மாற்றிக் கொடுங்கள்’ என்று சொல்கிறார்கள். வீடுகள் கட்டுகின்றபோதே, மேலே மின் கம்பிகள் செல்வது தெரிந்தும் அங்கே வீடுகளைக் கட்டினால் ஆபத்து வரும் என்பதை உணராமல் வீடுகளைக் கட்டி விடுகின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ‘pillar box இன்னும் வரவில்லை, அதனால் பணிகள் தடைபட்டுக் கொண்டிருக்கின்றன, என்று சொன்னார்கள். பொதுவாக ஒரு பணிக்காக tender கோரப்படும்போது, அந்த tender

[*2019 பிப்ரவரி 13*

*கிடைக்காதவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் செல்கின்றார்கள். உயர் நீதிமன்றத்தில் அதற்குத் தடையாணையும் பெற்றுவிடுகின்றார்கள். தடையாணை பெற்றதற்குப் பின்னால், அந்தத் தடையாணையை நீக்குவதற்கு காலதாமதம் ஆகிவிடுகின்றது. அதுதான் இதற்குக் காரணமேயொழிய, வேறொன்றும் இல்லை. தற்போதுகூட,* Technical Assistant *பணியிடங்களுக்கு மின்சார வாரியத்தில் ஆட்களை எடுக்க முடியாமல் இரண்டு ஆண்டு காலமாக உயர் நீதிமன்றத்தில் தடையாணை இருந்தது. இப்பொழுதுதான், அந்தத் தடையாணை நீக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றபோதுதான், இதுபோன்ற காலதாமதம் ஆகின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.*

*பொதுவாக, சோழிங்கநல்லூர் பகுதியைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதி அடையாறு* division-*ல் வருகிறது. கிட்டத்தட்ட ரூ.100 கோடி செலவில் 526 கிலோ மீட்டர்* L.T. *பாதையையும், 88 கிலோ மீட்டர்* H.T. *பாதையையும் புதைவடத் தடமாக மாற்றுவதற்குண்டான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. விரைந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

*முற்பகல் 10-15*

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற* O.M.R. *பகுதியில் குடியிருப்புக் கட்டடங்களும், பல வணிக வளாகங்களும், பல தொழிற்சாலைகளும் உருவாக்கப்பட்டு, வேகமாக வளர்ந்து வரும் ஒரு பகுதியாக அது இருக்கிறது. அதே சமயத்தில், வேளச்சேரி பகுதி, அந்தப் பகுதியை ஒட்டியிருக்கின்ற மேடவாக்கம் ஊராட்சி மற்றும் அதனைச் சார்ந்திருக்கின்ற ஊராட்சிகளிலும் மிக அதிக அளவில் குடியிருப்புக் கட்டடங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பகுதிகளிலெல்லாம் தற்போது மின்னழுத்தக் குறைபாடு ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. ஆகவே, இந்தப் பகுதிகளிலெல்லாம் துணை மின் நிலையம் வேண்டும். குறிப்பாக, உள்ளகரம், புழுதிவாக்கம் பகுதிகளில், நான் தொடர்ந்து இந்த*



*2019 பிப்ரவரி 13*]

*அவையில் வலியுறுத்தி வருவதுபோல், அப்பகுதி குடியிருப்பு நல சங்கத்தினர், பொதுமக்கள் ஆகியோர் அப்பகுதிகளில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அப்பகுதிகளில் மின்னழுத்தம் மிகவும் குறைவாகக் காணப்படுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அங்கு ஓரிடத்தை உடனடியாகத் தேர்வு செய்து, துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி விரைவில் துவங்கப்படும் என்று சென்ற முறை உத்தரவு அளித்திருக்கின்றார்கள். அதேபோல், சித்தேரி என்ற பகுதியிலும் சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தமான இடத்தை கழிவுநீரகற்று வாரியம் பயன்படுத்தி வருகின்றது. அந்தப் பகுதி பொதுமக்கள் அப்பகுதியில் துணை மின் நிலையம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.* OMR *சாலை, வேளச்சேரி* Main Road, *உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் போன்ற பகுதிகளிலெல்லாம் நிச்சயமாக கூடுதலாக ஒரு துணை மின் நிலையத்தினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அதேசமயம், சென்னையில் வாழ்கின்ற அடித்தட்டு மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் சென்னை அருகேயுள்ள பெரும்பாக்கம் பகுதியிலும், கண்ணகி நகர், எழில் நகர் பகுதிகளிலும் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அங்கு ஏழை எளிய மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். மின்சார வாரிய ஊழியர்கள் அங்கு சென்று குறிப்பிட்ட கால வரையறைக்குள் அப்பகுதி மக்கள் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏதுவாக மின் கட்டணத்தை அளவிட்டு அத்தொகையை மக்களிடம் தெரிவிப்பதில்லை. அதனால், இன்றைக்கு ஒரே நேரத்தில் 20,000, 30,000 ரூபாய் மின் கட்டணமாக கட்ட வேண்டிய நிலைக்கு அந்த ஏழை எளிய குடும்பங்கள் தள்ளப்பட்டிருக்கின்றன. நேற்றுகூட, அப்பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கி மூலமாக, வாகனத்தின் மூலமாக மின்சார வாரியம். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ், கேள்வியை கேட்டு முடியுங்கள்.*

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை விரைவில் முடித்துவிடுகிறேன்.*

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ், விரைவில் கேள்வியை முடியுங்கள். ஒரு கேள்விக்கு இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால் நான் எப்படி மற்ற உறுப்பினர்களை அழைப்பது?

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் கட்ட வேண்டுமென்று ஒலி பெருக்கிமூலம் எச்சரித்திருக்கின்றார்கள். ஆகவே, மக்கள் அக்கட்டணத்தைத் தவணை முறையில் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். இல்லையென்றால், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அரசே அந்த மின்சாரக் கட்டணத்தை இலவசமாக வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். முதலாவதாக, அவர் சார்ந்த பகுதிகளில் புதைவடக் கம்பிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், அப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விரைவில் அந்தப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற நீங்கள், அப்பகுதியில் HT line செல்கின்றபோது, அதனடியில் வீட்டைக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டுமென்று மக்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். ஏனென்றால், ஒரு வீட்டைக் கட்டிய பின்பு அந்த வீட்டிற்கான HT line-ஐ மாற்றுவது என்பது, மிகவும் அரிது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுபோன்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றபோது, விபத்து ஏற்படுவது உண்மைதான். ஏற்கெனவே செல்கின்ற மின்பாதைக்கு அடியில் வீட்டைக் கட்டுவதால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அப்பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அதிகமாக வேண்டும். அப்பகுதிகளில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மின் தேவை அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, இடம் கிடைப்பது என்பது மிகவும் அரிதாக இருக்கின்றது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். பல்லாவரம், நங்கநல்லூர் பகுதிகளில்கூட, துணை மின் நிலையங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், அப்பகுதியில் அரசு நிலமோ அல்லது தனியார் நிலமோ இருந்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தை வாங்கிக் கொடுப்பதற்கு முன்வந்தார்களானால், உடனடியாக மின்சார வாரியம் அந்த இடத்தை எடுத்து துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு தயாராக இருக்கின்றது. இந்த 8 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 494 துணை மின் நிலையங்கள் அமைத்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், துணை மின் நிலையங்கள் தேவை என்பதையும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். அதற்கு இடம் கிடைப்பதுதான் மிகவும் அரிதாக இருக்கின்றது. அதிலும் சென்னை மாநகரைப் பற்றி உங்களுக்கே நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட நாங்கள் துணை மின் நிலையங்கள் அமைக்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால், இடம் தேர்வு செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தினால், காலதாமதமாகிக்கொண்டிருக்கின்றது.



2019 பிப்ரவரி 13]

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியது, கண்ணகி நகர், குடிசைப் பகுதி மாற்று வாரியம் போன்ற பகுதிகளிலெல்லாம் மின் கட்டணத்தைக் கணக்கெடுப்பதற்கு மின் வாரிய அதிகாரிகள் அந்தப் பகுதிகளுக்குச் செல்வதில்லையென்று சொன்னார். ஓர் உண்மையை இந்த நேரத்தில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். கண்ணகி நகரைப் பொறுத்தவரை, மின்சார வாரியத்தின் அதிகாரிகள் உள்ளே சென்று கணக்கே எடுக்க முடியாத நிலைமைதான் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோன்ற ஒரு சூழ்நிலையை அங்கே உருவாக்கிவிட்டார்கள். கண்ணகி நகரைப் பொறுத்தவரை, முழுமையாகக் கணக்கெடுத்து மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்ய முடியவில்லை. காரணம், உங்களுக்கெல்லாம் தெரியும். அங்கு மக்கள் ஒரு group ஆகச் சேர்ந்துகொண்டு கணக்கெடுக்கும் அலுவலர்களை உள்ளே விடுவதற்கு மறுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் அங்கு கணக்கெடுப்பதற்குச் செல்ல முடியாத

சூழ்நிலை இருக்கின்றது. இப்படி இருக்கின்றபோதுதான் மின்சார வாரியம் பல பணிகளைச் செய்ய முடியாமல் தடைபட்டுப் போகின்றது. கண்ணகி நகரைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அலுவலர்கள்மீது இவ்வளவு குறை சொல்கின்றீர்கள். ஆனால், மக்கள் ஒத்துழைப்பார்கள் என்றால், மாதா மாதம் அதிகாரிகள் கணக்கெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டு மாதங்களுக்கொருமுறை அம்மக்கள் அந்த மின் கட்டணத்தைக் கட்டுவதற்கு சௌகரியமாக இருக்கும். ஆனால், அதிகாரிகளை அப்பகுதி மக்கள் ஊருக்குள்ளே அனுமதிக்க மறுத்துவிடுகின்றார்கள். அதையும் மீறி உள்ளே செல்லும் அதிகாரிகளை விரட்டிவிடுகின்றார்கள். இதுபோன்ற ஒரு சூழ்நிலை வரும்போதுதான், ஒரு வருடம், ஆறு மாதங்கள் என்று மின் கட்டணம் கணக்கெடுக்கப்படாமல் இருப்பதனால்தான் மின் கட்டணம் அதிகமாகச் சேர்ந்துவிடுகின்றது. உங்கள் தொகுதியாக இருந்தால், நீங்களும் கண்ணகி நகர் மக்களிடம் சொல்லுங்கள். நாங்கள் 2 மாதத்திற்கொருமுறைதான் அதிகாரிகளை அனுப்ப வேண்டும் என்றால், அப்படியே அனுப்புகிறோம். அப்பகுதி மக்களுக்கு மின் கட்டணம் அதிகமாக வருகிறது என்று நீங்கள்தான் சொன்னீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு, முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாகக் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தில்தான் முதலில் கையெழுத்திட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அந்தப் பகுதி மக்கள் 100 யூனிட் போக, எவ்வளவு மின் கட்டணம் கட்ட வேண்டும் என்பதைக் கணக்கெடுப்பதற்குகூட அதிகாரிகளை உள்ளே அனுமதிக்க மறுக்கிறார்கள் என்றால், நாங்கள் எப்படி அரசை நடத்த முடியும். இதெல்லாம் உங்களுக்கே நன்றாகத் தெரியும். உங்கள் காலத்திலும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தது. ஆக, இதுபோன்ற ஒரு சூழ்நிலையில்தான் இதற்கு காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றது.

*முற்பகல் 10-20*

சென்னை மாநகரைப் பொறுத்தவரை, முன்னுரிமை அடிப்படையில்தான் புதைவடங்களாக மாற்றிக் கொண்டு வருகிறோம். உங்களுக்கு நன்றாகத் தெரியும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தொகுதியில்கூட புதைவடங்களாக மாற்ற வேண்டுமென்று ஏற்கெனவே அவர்



பலமுறை கேட்டிருக்கின்றார்கள். முதலில் 8 கிலோ மீட்டர் வரை போட்டிருந்தோம்; அதற்குப் பின்னர் 12 கிலோ மீட்டர் வரை போட்டிருந்தோம். அதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், Corporation road ஆக இருந்தால் அதை வெட்டுவதற்கு அனுமதி கேட்டால் அதற்குப் பல தடைகள் வருகின்றன. நெடுஞ்சாலையாக இருந்தால் அதை வெட்டுவதற்கும் பல தடைகள் வருகின்றன. அதற்குண்டான தொகையைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், பல மடங்கு கேட்கின்றார்கள். ஆக, அதிலேதான் காலதாமதம் ஆகின்றது.

இப்போது புதிதாக ஒரு டெண்டர் போடப்பட்டிருக்கின்றது. அதாவது, சாலைகளைத் தோண்டியெடுப்பதற்குப் பதிலாக Trenchless முறையில் இப்போது அவருடைய தொகுதியில் முதற்கட்டமாக அந்தப் பணியை எடுக்க இருக்கின்றோம். Tender open செய்யப்பட்டிருக்கின்றது. ஆக, கிட்டத்தட்ட சென்னை மாநகரத்தில் 13,500 கிலோ மீட்டர் அளவிற்கு புதைவடங்களாக மாற்றப்பட வேண்டியிருக்கிறது. இப்போது 6,500 கிலோ மீட்டருக்கு புதைவடங்களாகப் போட்டிருக்கின்றோம். இன்னும் 6,500 கிலோ மீட்டருக்கு போட வேண்டியிருக்கிறது. அந்தப் பணிகளெல்லாம் விரைந்து நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகரம் என்பது சென்னையை ஒட்டியிருக்கின்ற, சென்னையின் நுழைவு வாயிலாக இருக்கின்ற மிகப் பெரிய நகரம். இன்றைக்கு பெரிய வியாபார ஸ்தலம் மட்டுமல்ல, மிகப் பெரிய அளவில் கல்விக் கூடங்கள், கல்லூரிகள் ஆகியவை அங்கே அதிக அளவில் இயங்கி வருகின்றன. MEPZ போன்ற தொழிற்சாலைகளெல்லாம் அங்கு இருக்கின்றன. Railway station, Bus stand-க்கு ஒரு நாளைக்கு 7 இலட்சம், 8 இலட்சம் பேர் வந்து போகக்கூடிய Floating population கொண்ட பகுதி. இப்போது தாம்பரம் Third terminal ஆகிவிட்டது. அங்கு underground cable இல்லாத காரணத்தால்--எங்கள் ஆட்சிக் காலத்தில் 2006-ல் முதன்முதலில் முயற்சி எடுத்து estimate தயார் செய்தோம். இன்னும் அதை நடைமுறைப்படுத்தாத ஒரு

சூழ்நிலை இருக்கிறது. தாம்பரம் இப்போது நகராட்சிதான். ஆனால், மாநகராட்சி அளவிற்கு population அதிகம் உள்ளது. அங்கு வந்து செல்கின்றவர்களும் அதிகம். வியாபாரிகளும் அதிகம். அங்கு புதைவடங்கள் இல்லாததால் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, உடனடியாக தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் underground cable ஆக மாற்றித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதியில் main சாலைகளில் எல்லாம் புதைவடங்களாகத்தான் இருக்கின்றன. குறுக்குச் சாலைகளிலும் புதைவடங்களாக மாற்ற வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார். தாம்பரம் டிவிஷனில் மட்டும் கிட்டத்தட்ட 1,230 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதைவடங்களாகப் போடவேண்டியிருக்கிறது. அதற்கு இப்போது 443 கோடி ரூபாய் அளவிற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. அந்த டெண்டர் வேலைகள் முடிவடைந்தவுடன் அந்தப் பணிகள் முடிக்கப்படும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, சென்னை மாநகராட்சியுடன் கூடுதலாக இணைக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதைவடங்களாக மாற்ற வேண்டும். ஏனென்று சொன்னால், 2015-லே வெள்ளம் வந்த பிறகு, கிட்டத்தட்ட 3½ மணி நேரத்திலிருந்து 6 மணி நேரத்திற்குள் மின்சாரம் கொடுத்தோமென்று சொன்னால், புதைவடங்களாக இருந்த காரணத்தால்தான். புதைவடங்களாக இருந்த காரணத்தால்தான் அரசு மருத்துவமனைக்கு, உயர் நீதிமன்றம் போன்ற முக்கிய துறைகளுக்கு உடனடியாக மின்சாரம் அளிக்க முடிந்தது. இதே கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பூமிக்குமேல் உள்ள மின் கம்பிகளின் வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்ததால் மின்சாரம் வழங்க கிட்டத்தட்ட பத்து நாட்களிலிருந்து இரண்டு மாதங்கள் வரை காலதாமதமானது. அதற்கு செலவு அதிகமாக இருக்கிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, இந்த அரசு செலவைப் பார்க்கவில்லை. ஏனென்றால், இங்கு முழுமையாக புதைவடங்களாகத்தான் மாற்ற வேண்டும். ஏனென்றால், மக்கள் தொகை அதிகமாகிவிட்டது, வீடுகள் அதிகமாகிவிட்டன. பாதுகாப்பு குறைவாக இருக்கின்ற





காரணத்தினால் புதைவடங்களாகப் போட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் எண்ணம். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தாம்பரம் நகராட்சிக்கும் இப்போது டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுவதற்கும் அந்தப் பணிகளில் இருக்கக்கூடிய சில சிக்கல்களையெல்லாம்கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் என்னுடைய கொளத்தூர் தொகுதியில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை பல முறை இந்த அவையிலே எடுத்துச் சொன்னபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போதுகூட அதை நினைவுபடுத்திய காரணத்தால்தான் நான் மீண்டும் எழுந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதை நினைவுபடுத்த விரும்புகிறேன். LT and HT எனப்படும் தாழ்வழுத்த மற்றும் உயர் மின்னழுத்த கம்பிகளில், மின் கசிவு மற்றும் மின் கம்பிகள் அறுந்து விழுவதால் ஏற்படக்கூடிய விபத்துக்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆக, மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்ற வேண்டி 5-8-2016 அன்று இதே அவையிலே நான் கேள்வி எழுப்பியபோது, அந்தப் பணிகள் மழைக் காலம் முடிந்ததற்குப் பிறகு, விரைவிலே முடித்துத் தரப்படும் என்ற ஒரு செய்தியை, ஓர் அறிவிப்பை இதே அவையிலே வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் 23-3-2017 அன்று இதே அவையில் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அப்போது நீங்கள் பதில் சொல்கிறபோது, மத்திய அரசிடமிருந்து 2,567 கோடி ரூபாய் பெற்றுவிட்டதாகவும், உடனடியாக அந்தப் பணிகள் தொடங்கப்படும் எனவும் தெரிவித்திருக்கிறீர்கள். அந்தப் பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு 19-7-2017 அன்று இதே அவையில் நான் மீண்டும் உங்களின் கவனத்திற்குக் கொண்டு

வந்தபோது, விரைவிலே அந்தப் பணிகள் முடிந்துவிடும் என்று அறிவித்திருக்கிறீர்கள். எனவே, இதுகுறித்து இந்த அவையிலே நான் பேசுவதற்கு மீண்டும் ஒரு சூழ்நிலை ஏற்படாதவகையில், அந்தப் பணிகளை விரைவிலே முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அதையொட்டி அதிலே பல்வேறு துறைகளால் ஏற்படக்கூடிய சில சங்கடங்களை, பிரச்சினைகளையெல்லாம் சொன்னீர்கள்.

*முற்பகல் 10-25*

உதாரணமாக, சாலையை வெட்ட வேண்டுமென்று சொன்னால், மாநகராட்சியின் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அதேபோல், டெலிபோன் வயர்கள் அங்கே செல்கின்றன. அவர்களிடமும் அனுமதி பெற வேண்டுமென்று சொன்னீர்கள். நான் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது, Co-ordination Committee-ஒருங்கிணைப்பு குழு-என்ற ஒரு குழுவை அமைத்து, அனைத்துத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளையும் 15 நாட்களுக்கு ஒரு முறை அல்லது ஒரு மாதத்திற்கு ஒருமுறை அழைத்து விவாதித்து, பல பிரச்சினைகளை முடிந்த அளவிற்கு தீர்த்து வைத்திருக்கிறோம். அந்த முறை இப்பொழுது கடைப்பிடிக்கப்படவில்லை. அதை இந்த அரசு கடைப்பிடித்தால் சிறப்பாக இருக்கும். அதை கடைப்பிடிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். ஏனென்று சொன்னால், அவர் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையைச் சொல்லியிருந்தார். அவர் தொகுதியிலே மின்சாரம் தாக்கி இரண்டு பேர் இறந்துபோய்விட்டார்கள். அந்த அடிப்படையில் அவர் கோரிக்கை வைத்திருந்தார். கணேஷ் நகர், நேர்மை நகரில் 12 கிலோ மீட்டருக்கு புதைவடமாகப் போட்டபோது, Corporation அந்தச் சாலையை வெட்டுவதற்கு நஷ்ட ஈடாக அதிகமான தொகையைக் கேட்டார்கள் நாங்கள் போட்ட estimate-க்குமேல் தொகை அதிகமாகி விடுகின்றது. அதனால் அதிலே சில சிக்கல்கள் வந்த காரணத்தினால்தான்





அந்த tender-ஐயே நாங்கள் cancel செய்துவிட்டு, இப்பொழுது Trenchless என்று சொல்லக்கூடிய முறையில் சாலையை வெட்டாமல் அடியிலேயே போட்டுக்கொண்டு செல்கின்ற அந்தத் திட்டத்திற்கு tender கோரப்பட்டிருக்கின்றது. Tender முடிகிற தருவாயில் இருக்கின்றது. முடிந்துவிட்டால், உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

துணை மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேர்மை நகரிலே போய் அடிக்கல் நாட்டிவிட்டு வந்திருக்கின்றார்கள். அந்த அளவிற்கு பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில பணிகளை மேற்கொள்கின்றபோது சில சட்ட சிக்கல்களால் பணியிலே காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் Co-ordination Committee போட்டால் சரியாக இருக்குமென்று சொன்னார்கள். Co-ordination Committee போட்டிருந்தாலும்கூட நஷ்ட ஈடு அதிகமாகத் தர வேண்டி வருகின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தற்போது contractor, பள்ளம் தோண்டும்போது, தெரியாமல் telephone wire-ன்மேல் பட்டுவிட்டது என்றால், அதற்கு B.S.N.L.-லிருந்து 65 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டிருக்கின்றார்கள். சேதமடைந்தது ஒரே ஒரு மீட்டர் மட்டும்தான். ஆனால், 65 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு, notice அனுப்பியிருக்கின்றார்கள். வழக்கு இருக்கின்றது. இதுபோன்ற பல சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால்தான், இனி எதிர்காலத்தில் இதுபோன்ற நடைமுறை சரியாக இருக்காது என்ற காரணத்தினால், இந்த Trenchless முறையை முன்மாதிரியாக முதலில் கொளத்தூர் தொகுதியிலே கொண்டுவருவதற்கு tender விடப்பட்டிருக்கின்றது. இன்னும் ஓரிரு நாட்களில் அந்த tender பணிகள் முடிந்துவிட்டால் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அந்தப் பணிகளை ஆரம்பித்துவிட்டோம் என்றால், விரைந்து அந்தப் பணிகளை முடித்துவிடுவோம். கொளத்தூர் தொகுதி மட்டுமல்ல, சென்னை மாநகர் முழுவதும் செய்யவிருக்கின்றோம். முதலில் கொளத்தூர் தொகுதியை நாங்கள் எடுத்திருக்கின்றோம். ஏனென்றால், பல முறை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அதனால் அந்தத் தொகுதியில் நடைபெற்ற பணியை நிறுத்திவிட்டு, முதலில் இந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக டெண்டர் கோரப்பட்டு முடிகின்ற தருவாயில் இருக்கின்றது என்பதையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்

[2019 பிப்ரவரி 13

இந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்பாத அளவிற்கு Trenchless முறைக்கான பணிகள் நடைபெற்றுவிடும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## உயர்மின் கோபுர விளக்குகள்

***7875—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சின்னூர் தெற்கு மற்றும் வடக்கு ஆகிய கிராமங்களில் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சின்னூர் தெற்கு மற்றும் வடக்கு ஆகிய கிராமங்களில் போக்குவரத்து வளர்ச்சி மற்றும் மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத்தின் தேவைக்கேற்ப உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.



2019 பிப்ரவரி 13]

**திரு. கே.ஏ. பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல் யாரென்று ஊர் சொல்ல வேண்டும்’ என்ற (மேசையைத் தட்டும் ஒலி) வரிகளுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டி, மண்ணைவிட்டு மறைந்தாலும், தமிழ் பேசும் மக்களின் மனதில் என்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.100/-ஐ ரூ.1,000/- ஆக்கி, தமிழர்களின் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழ் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் வகையில் செய்து, தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள 60 இலட்சம் ஏழையெளிய தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசின் சிறப்பு நிதியாக ரூ.2,000/- வழங்கப்படும் என்று அறிவித்து, கிராமப்புறங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாமானிய மக்களுக்காகவும், காட்டிலேயும், மேட்டிலேயும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைப்பதற்காகவும் அல்லும், பகலும் அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கும் நம்முடைய குடிமராமத்து நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10-30

எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள மீனவக் கிராமமான சின்னூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் சுமார் 2025-க்கும் அதிகமான மக்கள் வசித்துவருகிறார்கள். அவர்கள் அனைவருமே மீன்பிடித் தொழிலை நம்பியே வாழ்ந்துவருகிறார்கள். இந்தச் சின்னூர் பகுதியானது கடற்கரையை ஒட்டிய கிராமப் பகுதியாகும். எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் 20-க்கும் அதிகமான மீனவக் கிராமங்கள் உள்ளன. அதில் சின்னூர் கிராமமும் ஒன்று. இரவு, பகல் பாராமல் கடலுக்குச் சென்று, மீன்பிடித் தொழிலையே

[2019 பிப்ரவரி 13

நம்பி இப்பகுதி மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் நலனைக் கருதி சின்னூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உயர்மின் கோபுர விளக்குகளை உடனடியாக அமைத்துதர அருமை அண்ணன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அதற்கு ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சின்னூர் புதுப்பேட்டை ஊராட்சிக்குட்பட்ட, சின்னூர் வடக்கு கிராமம் மிகச் சிறிய கிராமம் ஆகும். இக்கிராமத்தில் 182 வீடுகள் உள்ளன. இப்பகுதியில் 16 LED விளக்குகளும், 21 CFL விளக்குகளும் அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சின்னூர் தெற்கு கிராமமும் மிகச் சிறிய குக்கிராமம் ஆகும். இக்கிராமத்தில் 187 வீடுகள் உள்ளன. இப்பகுதியில் 21 LED விளக்குகளும், 43 CFL விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேலும், ஓர் உயர்மின் கோபுர விளக்கும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு கிராமப் பகுதிகளிலும் பெருமளவில் மக்கள் கூடும் பகுதிகளோ அல்லது கடைத் தெருவோ இல்லை. எனவே, இக்கிராமங்களில் தற்போது அமைக்கப்பட்டுள்ள விளக்குகளே போதுமானதாக உள்ளன. இக்கிராமத்தின் வளர்ச்சி மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன என நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்களின்மேல் உள்ள அக்கறையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார். ஆகவே, எதிர்காலத்தில் தேவைக்கேற்ப, உயர்மின் கோபுர விளக்குகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.



2019 பிப்ரவரி 13]

**திரு. கே.ஏ. பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இல்லை, அந்தக் கேள்வியைக் கேட்கவே வேண்டாம். (குறுக்கீடு) மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று தெரிகின்றபோது ஏன் கேட்கிறீர்கள்?

**திரு. கே.ஏ. பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய கேள்விதான். சிதம்பரம் நகரம், சிவயோகமும், செந்தமிழும் மணக்கின்ற ஒரு புண்ணியதலம். தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற, உலகப் புகழ் பெற்ற நடராஜர் ஆலயமும், புகழ் பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகமும் அமைந்துள்ள நகரமாகும். சிதம்பரம் நகராட்சியில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பேருந்து நிலையம் தற்போது பழுதடைந்து, அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றது. தமிழகத்திலுள்ள பழமை வாய்ந்த நகராட்சிகளில், சிதம்பரம் நகராட்சியும் ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், தனிக் கேள்வியாகக் கேட்கவும். மாண்புமிகு அமைச்சர் எப்படி இதற்கு பதில் சொல்வார்? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திருச்சி நகரத்தில் இருக்கிற பிரச்சினைகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள், அதனை கவனத்தில் கொண்டு, அதிகாரிகளிடம் சொல்லி, அதை விரைவிலே நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி நகரம் என்பது திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியின் ஒரு பகுதி, ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியின் ஒரு பகுதி என 15 இலட்சம் வாக்காளர்களைக் கொண்டிருக்கிற ஒரு மிகப் பெரிய நகரமாகும். ஆனால், திருச்சி நகரத்தின் பிரதான நுழைவாயில் எப்படி இருக்கிறது என்று சொன்னால், திருச்சிக்குள்ளே வர வேண்டுமென்று சொன்னால், ½ மணி நேரம் காத்திருந்தால்தான் திருச்சிக்குள் வர முடியும். சாலைகள் அவ்வளவு குறுகலாக

[2019 பிப்ரவரி 13

இருக்கின்றன. சாலைகளை விரிவுபடுத்த வேண்டுமென்று மாநகராட்சி ஆணையரிடம் கேட்டோம். அதற்கென்று Smart City திட்டத்தின்கீழ் 3 கோடி ரூபாய் வந்திருக்கிறது. ஆனால், அதனைச் செயல்படுத்துவதற்கு தாமதமாகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அந்தச் சாலையை விரிவுபடுத்தி, பாலத்தையும் விரிவுபடுத்தினால்தான் திருச்சி நகரத்திற்குள் வருகின்றவர்கள் விரைவாக வரமுடியும், இது ஒன்று.

இரண்டாவதாக, இவ்வளவு நெருக்கடி இருக்கின்ற நேரத்தில் கோட்டை மேம்பாலம், கோட்டை Station Road மேம்பாலத்தை அகலப்படுத்த வேண்டுமென்று சொல்லி, அந்தச் சாலையை மூட இருக்கின்றார்கள். நாங்கள், உடனே மாநகராட்சி பொறியாளர் அவர்களைக் கூப்பிட்டு, வேறு பாதையை உருவாக்காமல், இதை மூடினால் மிகவும் சிரமமாக இருக்குமென்று சொல்லி, அதை நிறுத்தியிருக்கிறோம்.

உறையூரிலிருந்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார்?

**திரு. கே.என். நேரு:** உறுப்பினர் ஏன் லேட்டாக வருகிறார் என்பதைக் கேளுங்கள். உறையூரிலிருந்து நேராக குடமுருட்டிக்கு வருகின்ற ஒரு சாலை, மிகப் பெரிய சாலை, 30 அடி சாலை இருக்கிறது. ஆனால், அந்தச் சாலை மிகவும் பழுதடைந்த சாலையாக இருக்கின்றது. அதற்கு ஒரு மாற்றுச் சாலையை உருவாக்கிவிட்டு பிறகு, இந்தச் சாலையை மூடினால், போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கும். அந்த விவரமும் மாநகராட்சியிடம் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பலமுறை உங்களிடம் நாங்கள் இது குறித்து தெரிவித்திருக்கிறோம்.

குடி தண்ணீர் மிகவும் கலங்கலாக வந்து கொண்டிருக்கிறது. அதைச் சரி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இஸ்லாமியர் அதிகமாக இருக்கிற பகுதி, அண்டகொண்டான் ஆழ்வார்தோப்பு என்கின்ற பகுதி. 10,000 வாக்காளர் பெருமக்கள் இருக்கக்கூடிய பகுதி. அங்கு பேருந்து வசதி இல்லை. பேருந்தில் மருத்துவமனைக்குச் சென்று வருகிற வசதியும் இல்லை. சாலை குறுகலாக இருக்கிறது. ஆட்டோவில் சென்று வந்தால், 100 ரூபாய்,



2019 பிப்ரவரி 13]

200 ரூபாய் என்று அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அங்கு ஒரு மாநகராட்சி மருத்துவமனை வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராகப் பொறுப்பு வகித்தவர். அதுமட்டுமல்லாமல், இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலுள்ள முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி அண்ணன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு துணை முதலமைச்சர் உள்பட நாங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, எங்களுடைய தொகுதிகளுக்கு பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, அதை உடனடியாகச் செய்து கொடுத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே அமைச்சராகப் பொறுப்பு வகித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மிகவும் அவசியமான கோரிக்கை. ஆகவே, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியைச் சுற்றியுள்ள பல

[2019 பிப்ரவரி 13

கிராமங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம், பேருந்து நிலையம் ஆகியவை இருக்கின்ற இடத்தில் ஓர் உயர்மின் கோபுரம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால், அதற்கு மின்சார இணைப்புதான் கொடுக்கப்படாமல் உள்ளது. பஞ்சாயத்து அலுவலகத்தில் கேட்டால் அதற்கான நிதி இல்லை என்று பதில் தெரிவிக்கிறார்கள். நீதிமன்ற வளாகமும் அங்கே இருப்பதால் அரசாங்கமே மின்சார இணைப்பு வழங்கி, ஒளியேற்றச் செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாங்குநேரியில் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்ற ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்டி, மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார். அதுகுறித்து, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 433 உயர்மின் கோபுர விளக்குகளும்; பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 1,844 உயர்மின் கோபுர விளக்குகளும்; பேரூராட்சிகளில் 1,725 உயர்மின் கோபுர விளக்குகளும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 2,409 உயர்மின் கோபுர விளக்குகளும் என மொத்தம் தமிழகத்தில் மட்டும் 6,411 உயர்மின் கோபுர விளக்குகள் இருக்கின்றன. மின் தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் அந்த மாதிரியான பிரச்சினைகள் இருக்கும். நிறைய பஞ்சாயத்துகள் நலிவடைந்த பஞ்சாயத்துக்களாக இருக்கின்ற காரணத்தால், மின்சாரக் கட்டணமே செலுத்த முடியாத சூழ்நிலையும் அங்கே இருக்கிறது. உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டதால் கண்டிப்பாக மின்சார இணைப்பும் கொடுத்துதான் ஆக வேண்டும். உயர்மின் கோபுர விளக்குகளை அமைப்பதற்கு முன்னால் வேண்டுமென்றால்; அந்தக் கருத்துகளைத் தெரிவிக்கலாம்; மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்



2019 பிப்ரவரி 13]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**64—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***13829—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**65—**

## தொழில் பூங்கா

***7103—திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியத்தில் தொழில் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*[2019 பிப்ரவரி 13*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சிப்காட் வளாகம் அமைப்பதற்கான உத்தேசம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி நூற்றுக்கணக்கான கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். அங்கே பல இளைஞர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். எங்களுடைய கழகத்தின் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய தளபதி அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, கிராம சபைக் கூட்டங்கள் தொடர்பாக பல்வேறு ஊர்களுக்குச் செல்லும்போது இளைஞர்கள் பலர் விண்ணப்பம் கொடுக்கிறார்கள்.

பல்வேறுவிதமான கோரிக்கைகளைக் கொண்ட விண்ணப்பங்களைக் கொடுக்கும்போது அதில் வேலைவாய்ப்பு கேட்டும் விண்ணப்பங்களைக் கொடுக்கிறார்கள். 10-வது படித்தவர்கள், 8-வது படித்தவர்கள் விவரம் தெரியாமல் வேலைவாய்ப்பு கேட்டால்கூட பரவாயில்லை. B.E. முடித்தவர்கள், Degree முடித்தவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி படிப்பை முடித்தவர்கள், எப்படியாவது வேலைவாய்ப்பு பெற்றுத்தர, ஏற்பாடு செய்துதர முடியுமா என்று என்னிடம் கேட்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், 86 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள் என்று பதிவிலே இருக்கிறது.

*முற்பகல் 10-40*

பல்லாயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான கோடிகளை முதலீடுகளாகக் கொண்டுவந்து, அதனை இங்கே ஈர்ப்பதன்மூலம் தொழில் துறையில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை தர



*2019 பிப்ரவரி 13]*

முடியும் என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் என்னுடைய மதுராந்தகம் தொகுதி சென்னைக்கு அருகில் இருக்கக்கூடிய தொகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். இன்னும் 5 கேள்விகள் உள்ளன. நீங்கள் இப்படி பேசிக்கொண்டே இருந்தால் எப்படி?

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். தற்போது எந்த இடத்தினைப் பார்த்தாலும் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கு வடநாட்டுக்காரர்கள் புகுந்துவிட்டார்கள். இங்குள்ள இளைஞர்களுக்கு படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்கவில்லை. காலை 6 மணிக்கு, 6-30 மணிக்கு மதுராந்தகம் இரயில்வே நிலையத்திற்குச் சென்றால், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் படிப்பிற்குத் தொடர்பில்லாத வேலைக்குச் செல்வதைக் காண முடிகிறது. அதுவும், Degree முடித்தவர்கள் என்ன வேலைக்குச் செல்கிறார்கள் என்றால், paint அடிக்கப் போகிறேன், centring வேலைக்குச் செல்கிறேன் என்கின்றனர். இது மிகவும் கொடுமையாக இருக்கின்றது. ‘சாலையோரத்தில் வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளங்களில் விபரீத எண்ணங்கள்; வேந்தே இதுதான் காலக்கொடுமை’ என்று காஞ்சித் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு அங்கு சிப்காட் தொழில் பூங்காவை உருவாக்கி, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னைக்கு அருகில் இருக்கின்ற மதுராந்தகம் தொகுதி என்று குறிப்பிட்டார்கள். சென்னைக்கு அருகில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட மதுராந்தகம் தொகுதி. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5 சிப்காட் வளாகங்கள் இருக்கின்றன. 40 கி.மீ., தூரத்தில், 60 கி.மீ. தூரத்தில், 58 கி.மீ. தூரத்தில் சிப்காட் வளாகங்கள் உள்ளன. மேலும்

மதுராந்தகம் தொகுதியில் 51 கி.மீ. தூரத்தில் செய்யாற்றில் ஒரு சிப்காட் வளாகம் உள்ளது. அதற்கடுத்து விழுப்புரம் மாவட்டத்தில், திண்டிவனம் பக்கத்தில் பெலாக்குப்பம் என்ற ஊரில் ஒரு சிப்காட் வளாகம் உள்ளது. (குறுக்கீடு) இல்லை. Ready ஆகிவிட்டது. 571 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியிருக்கிறோம். EIA Clearance வாங்கப்போகிறோம். உடனடியாக அந்த சிப்காட் வளாகம் தொடங்கப்படவிருக்கின்றது. அங்கு Food Processing Unit கூட கொண்டுவர உள்ளோம். அதனால் problem இல்லை. அதனால் nearby area-வில் maximum 5 சிப்காட் வளாகங்கள் உள்ளன. ஒரகடத்தில் ஒரு தொழில்பூங்கா, வல்லம் வடகாலில் ஒரு தொழிற்பூங்கா, ஸ்ரீபெரும்புதூரில் ஒரு தொழிற்பூங்கா, பிள்ளைப்பாக்கத்தில் ஒரு தொழிற்பூங்கா, மதுராந்தகத்திலிருந்து 64 கி.மீ. தூரத்தில் சிறுசேரியில் ஒரு தொழிற்பூங்காவும், பக்கத்தில் நிறைய தொழிற்சாலைகளும் உள்ளன. அவர் தொகுதியில் உள்ள படித்த இளைஞர்கள், வேலைவாய்ப்புப் பெற அங்கு சென்றால், வேலை பெறுவதற்குண்டான வசதி வாய்ப்புகள் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நெல்லிக்குப்பம் புகழேந்தி, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி நீங்கள் நல்ல பேச்சாளர். அதிக நேரம் பேச வேண்டாம். நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடித்துவிடுகிறேன். நான் கேட்டது மதுராந்தகம் தொகுதிக்கு. அவர்கள் செய்யாறு மற்றும் இதர இடங்களில் உள்ளது என்று சொன்னார்கள். ஒரு விஷயம், அவர் தன்னை மறந்து நெல்லிக்குப்பம் என்று வாய் விட்டுவிட்டார்கள். அவரும் நெல்லிக்குப்பம், நானும் நெல்லிக்குப்பம். (சிரிப்பு) இரண்டு பேரும் கடலூர் மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்கள் சொந்த ஊரை சொல்லியிருக்கிறார். அதை விட்டுவிடுங்கள்.

**திரு. சு. புகழேந்தி:** அங்கிருக்கின்ற என்னை உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்று அண்ணாவுக்கு அருகிலே உறங்கிக்கொண்டிருக்கின்ற தலைவர் கலைஞரும், எங்கள் கழகத்தின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், வருங்கால தமிழகத்தின் முதல்வர் அண்ணன் தளபதி அவர்களும், (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லிக்குப்பத்தில் பிறந்த என்னை அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தொகுதியில் தேர்தலில் நிற்க வைத்தார்கள். தொகுதி மக்களும் எங்களுடைய தலைவரின் வாக்கினை ஏற்று எனக்கு ஓட்டு போட்டார்கள். அமைச்சர் அண்ணன் அவர்கள், நீங்கள் என்னை பள்ளிப் பாலகப் பருவத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அமைச்சர் ஆவதற்கு முன்பு நீங்கள் காரில் சென்றாலும், நான் two wheeler-ல் போனாலும் வணக்கம் வைப்பேன். நீங்களும் வணக்கம் வைப்பீர்கள். அமைச்சராகி இப்போதும் ஏதேனும் விசேஷம் என்று ஊருக்கு வந்தால்கூட தற்போதும் நான் two wheeler-ல்தான் போகிறேன். அமைச்சர் அவர்களைப் பார்த்தது இல்லை. அமைச்சர் அவர்களின் escort வேகமாகப் போகும். (குறுக்கீடு) இருங்கள். (சிரிப்பு) அதாவது தற்போது அமைச்சராக இருக்கும்போதுகூட நான் personal ஆக எதுவும் கேட்டதில்லை. அவர் காரில் செல்வார். நான் two wheeler-ல் போவேன். Accelerator-ஐ விட்டால் வண்டியின் வேகம் கம்மியானாலும் பரவாயில்லை என்று அமைச்சருக்கு வணக்கம் வைத்துவிட்டுத்தான் போகிறேன். நான் பிறந்த ஊர் அது. எங்கள் தளபதியும், தலைவரும் சேர்ந்து புகுந்த வீடு போல மதுராந்தகத்தினைக் கொடுத்திருக்கிறார்கள். பிறந்த வீட்டிலிருந்து ஏதேனும் சீதனம் வந்தால்தான் புகுந்த வீட்டுக்குப் பெருமை. ஆக, நெல்லிக்குப்பத்தில் பிறந்து அமைச்சராக இருக்கின்ற நீங்கள், நான் புகுந்த வீடாக இருக்கின்ற மதுராந்தகத்திற்கு தயவுசெய்து ஒரு தொழிற்பூங்காவை உருவாக்கி என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். தற்போது toll gate-ல் பார்த்தீர்களென்று சொன்னால்கூட Hindi-காரன்தான் வேலை செய்கிறான்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, அவ்வளவுதான் கேள்வியை முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில்தான் மதுராந்தகம்

[2019 பிப்ரவரி 13

சட்டமன்றத் தொகுதி இருக்கிறது. அதைச் சுற்றிலும் தொழில் பூங்காக்கள் 40 கி.மீ., 50 கி.மீ., distance-ல் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி கேட்கிறார். மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 700 ஏக்கர், 1,000 ஏக்கர், 1,500 ஏக்கர் பரப்பளவுகளில் Revenue land ஏதாவது கண்டறியப்பட்டு, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், நிச்சயமாக சிப்காட் வளாகம் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர், நெல்லிக்குப்பம் புகழேந்தி அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஊர் என்பதால் பாசம். வேறு எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

**திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உயர் கல்வித் துறையில் பேசுவதற்காகக் கையை உயர்த்தினேன். நீங்கள் தொழில் பூங்கா குறித்துப் பேச வாய்ப்பளித்திருக்கிறீர்கள். (சிரிப்பு) ஏதோ ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அந்தவகையில் நான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் இருக்கிற தொழில் பூங்காவில் பல்வேறு வகையான தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, திருமங்கலம் அருகில் ஒரு தொழில் பூங்காவை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு வரையறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதை மிக விரைவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உயர் கல்வித் துறையில் இன்றைக்கு மிகப் பெரிய சாதனையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், இராமேஸ்வரத்தில் மதிப்பிற்குரிய அப்துல் கலாம் அவர்கள் பெயரில் ஒரு கல்லூரியை உருவாக்கி, மிகச் சிறப்பான பணியினைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, இந்த அரசு, பல்வேறு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்றியமைத்திருக்கிறது. மதுரையில் மிக முக்கியமான பகுதியில் இருக்கக்கூடிய மதுரை பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, அரசுக்



2019 பிப்ரவரி 13]

கல்லூரியாக மாற்றப்படாமல் உள்ளது. 4,500 மாணவர்களைக் கொண்டிருக்கிற அந்த உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே பரிசீலனை செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மிகப் பெரிய வெற்றிகரமான மாநாட்டை நடத்தி, இன்றைக்கு தொழில் கல்வியை உருவாக்கியிருக்கிறார்கள். வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். அவரும், மதுரையில் தொழில் வளரச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை, கலாச்சார நகர், இறையனூர் நகர் போன்ற பெயர்களைப் பெற்றிருக்கிறது. ஆனால், தொழில் நகர் என்ற பெயரைப் பெறவில்லை. அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டு, அதற்கான வழிவகை ஏதும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதுரை-தூத்துக்குடி industrial தொழில் பெருவழிச் சாலை இருக்கிறது. Asian Development Bank-ல் வாங்கிய நிதியுதவியுடன் சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழிச் சாலைத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் கிழக்குக் கடற்கரை பொருளாதார பெருவளர்ச்சி சாலைத் திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். இத்திட்டத்தின்கீழ் சாலை வசதி, மின்சாரம், குடிநீர், வடிகால் வசதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இதற்கு விரிவான மேம்பாட்டுத் திட்டம், comprehensive development plan தயாரிக்கப்பட்டுள்ளது. மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி first Node ஆகவும், தூத்துக்குடி, திருநெல்வேலி second Node ஆகவும், கடலூர், நாகப்பட்டினம் third Node ஆகவும், இராமநாதபுரம் fourth Node ஆகவும், 5-வது Node அரியலூர்-பெரம்பலூர் சாலை, திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை ஆகியன 6-வது முனையமாக, Nodes ஆக செயல்படுத்தப்படவுள்ளன.

[2019 பிப்ரவரி 13

*இத்திட்டம் வரும்போது, நிச்சயமாக மதுரைக்கு புதிய தொழில் பூங்கா அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**66—**

## நியாய விலைக் கடை

***28006—திரு. மா. சுப்பிரமணியன்:***

*மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சைதாப்பேட்டை தொகுதி, 142 வது வார்டு, கொத்தவால்சாவடி தெருவில் உள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதி, 142-வது வார்டில் அமுதம் நியாய விலை அங்காடி 969 குடும்ப அட்டைகளுடன் கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவில் இயங்கி வருகிறது. இதில் கொத்தவால்சாவடித் தெருவைச் சேர்ந்த 375 குடும்ப அட்டைகளும் அடங்கும். எனவே, கொத்தவால்சாவடித் தெருவில் 375 குடும்ப அட்டைகளுக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை தொகுதிக்குட்பட்ட 142-வது வட்டத்தில் கொத்தவால்சாவடி தெரு, கொத்தவால்சாவடி தெரு குடிசைப் பகுதி, விளாமர குடிசைகள், சாஸ்திரி தெரு போன்ற பல்வேறு பகுதிகளுக்கு 969 குடும்ப அட்டைகளுடன் ஒரு கடை கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவில் இயங்கிக்கொண்டிருக்கிறது. கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவும், ஒத்தவாடைத் தெருவும் இணைகின்ற சந்திப்பில் அந்தக் கடை இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், அதே கடையை ஒட்டியே இன்னொரு சிறிய நியாய விலைக் கடையும் இருக்கிறது. அந்தக் கடையில், விநாயகபுரம், இரத்தினத் தோட்டம், வ.உ.சி. தெரு, துரைசாமி தோட்டம், கருணாகரன் தெரு மற்றும் சின்னம்மாள் தெரு போன்ற பகுதிகளைச் சேர்ந்த 963 குடும்ப அட்டைகள் இருக்கின்றன.*

*முற்பகல் 10-50*

*இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரே கடையில் இரண்டு ஊழியர்கள் அருகருகில் அமர்ந்து கொண்டு, ஒரு பக்கத்தில் ஓர் ஊழியர் 969 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்களை வழங்குகிறார். இன்னொரு பக்கத்தில் மற்றொரு ஊழியர் 963 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்களை வழங்குகிறார். ஆனால், அது கிட்டத்தட்ட 15' x 18' அல்லது 19' அளவுடன்கூடிய ஒரே கடைதான். அதற்கு பக்கத்தில் இன்னொரு நியாய விலைக் கடையும் இருக்கிறது. மொத்தம் 3,000 குடும்ப அட்டைகளுடன் ஒரே campus-க்குள் இரண்டு கடைகள் இருக்கின்றன. ஆகவே, அங்கு மக்கள் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அதனால், குடிசை மாற்று வாரிய குடிசைப் பகுதியில் கண்டிப்பாக ஒரு புதிய கடை அமைக்க வேண்டியது அவசியமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, குடிசை மாற்று வாரிய குடிசைப் பகுதியைப் பொறுத்தவரையில் 464 குடியிருப்புகள், அதற்குப் பக்கத்தில் சாஸ்திரி நகரில் 50 குடியிருப்புகள், விளாமர குடிசைகளில் 63 குடியிருப்புகள் மற்றும் கொத்தவால்சாவடி தெரு குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 969 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இந்த 969 குடும்ப அட்டைகளையும் ஒருங்கிணைத்து ஒரு புதிய கடையை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கை*

[2019 பிப்ரவரி 13

வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் ஒரு நியாய விலைக் கடையைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால், குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு தாய்க் கடையில் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், 375 குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு தாய்க் கடையில் 594 குடும்ப அட்டைகள்தான் மீதம் இருக்கும். எனவே, 594 குடும்ப அட்டைகளுக்காக ஒரு முழுநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கு வாய்ப்பில்லை. அதே நேரத்தில், இந்த வார்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நாராயணசாமி தெரு 1, நாராயணசாமி தெரு 2, பாரதியார் சாலை, எஸ்.எம். தெரு ஆகிய நான்கு இடங்களில் 2 கி.மீ. சுற்றளவிலேயே நான்கு நியாய விலைக் கடைகள் இயங்கிவருகின்றன. அந்தப் பகுதி மக்கள் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் கிடைக்கும் பொருட்களை சீரான முறையில் வாங்கிச் செல்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, அந்தப் பகுதியில் ஒரே இடத்தில் இரண்டு கடைகள் அமைந்திருக்கின்றன என்றும், அதில் இந்தப் பக்கத்தில் ஒருவர் அமர்ந்துகொண்டு பொருட்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்றும், அந்தப் பக்கத்தில் ஒருவர் அமர்ந்துகொண்டு பொருட்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்றும் சொன்னார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் இடம் கிடைப்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நியாய விலைக் கடை அமைக்க இடம் எளிதாகக் கிடைப்பதில்லை. அந்த இடத்திற்கு அருகிலேயே நியாய விலைக் கடையை அமைப்பதற்கான வேறு இடம் கண்டறியப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அந்த இடத்தில் ஒரு கடையை மாற்றியமைப்பது குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவைப் பெற்று



2019 பிப்ரவரி 13]

நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றித் தரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பல்வேறு பகுதிகள் குடிசைப் பகுதி மாற்று வாரிய இடங்களாக இருப்பதால், சிறு, சிறு தொலைவுகளில் அந்தப் பகுதியின் குடியிருப்புகள் அமைந்திருக்கின்றன, ஆனால், நியாய விலைக் கடை ஒரே இடத்தில் 3,000 குடும்ப அட்டைகளுடன் இருப்பதாக இங்கே சொன்னார்கள். நியாய விலைக் கடைக்கான இடம் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்து, குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடம் இருப்பது தெரிந்தால், அந்த இடத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கடையிலிருந்து குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளைத் தனியாகப் பிரித்து மற்றொரு கடை வேண்டுமென்று கேட்கவில்லை. ஒரே கடையில் 969 குடும்ப அட்டைகளும், இன்னொரு கடையில் 963 குடும்ப அட்டைகளும், ஆக மொத்தம் 1,932 குடும்ப அட்டைகள் ஒரே இடத்தில் இருக்கின்றன. அதனால் அந்த இடம் நெருக்கடியாக இருப்பதால், அந்த சிறிய கடை இயங்க முடியாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாகக் கடைகள் கட்டுவதற்கான இடம் இல்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே, கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் உணவுத் துறையின்கீழ் நியாய விலைக் கடைகளுக்கான கட்டடம் கட்டுவதற்கும், அலுவலகங்களை அமைப்பதற்கும் மாநகராட்சியில்

*[2019 பிப்ரவரி 13*

*மட்டுமல்ல, வேறு எந்தத் துறையில் இடம் இருந்தாலும், அந்தத் துறைகளிடமிருந்து அந்த இடத்தைக் கேட்டுப் பெற்று, மாநகராட்சியில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அந்த இடங்கள் உணவுத் துறைக்கு வழங்கப்பட்டன. அந்த வகையில்தான் இன்றைக்கு சென்னையில் இருக்கின்ற 22 சட்டமன்றத் தொகுதிகளிலும், தொகுதிக்கு ஒரு உணவுப் பொருள் பங்கீட்டு அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. 200-க்கும் மேற்பட்ட புதிய கடைகளுக்கும் அப்போது இடங்கள் வழங்கப்பட்டன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தருவதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே, 969 குடும்ப அட்டைகளைக் கொண்ட ஒரு புதிய நியாய விலைக் கடையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-55*

*காரணம், குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில், 1980 ஆம் ஆண்டு அடையாறு ஆற்றங்கரை ஓரம் ஆற்று மாநகர் என்கின்ற ஊராக இருந்தபோது, அங்குள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் அவர்கள் குடியமர்த்தப்பட்டார்கள். பிறகு அவர்களுக்காக அப்பொழுது பாரதியார் தெருவில் ஒரு நியாய விலைக் கடை ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கடை தனியாருக்குச் சொந்தமான இடத்தில் இருந்ததால் அதைக் காலிசெய்துவிட்டார்கள். பிறகு வி.ஜி.பி. சாலையில் இருந்த நியாய விலைக் கடைக்கு இங்கிருந்த குடும்ப அட்டைகள் மாற்றப்பட்டன. அதுவும் தனியார் கட்டடம் என்பதால் அதையும் காலிசெய்துவிட்டார்கள். கடைசியாக கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இங்கே கடை கட்டப்பட்டு, அந்தக் குடும்ப அட்டைகள் அனைத்தும் இங்கே மாற்றப்பட்டன. ஏறத்தாழ 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்கிற அந்தக் கடையை குடியிருப்புப் பகுதியிலேயே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



*2019 பிப்ரவரி 13]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் குறிப்பிட்டேன். அதற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அந்தக் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான பகுதியிலேயே ஒரு இடத்தைக் கண்டறிந்து, ஆய்வு செய்து, உடனடியாக நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையில் குறிப்பிட்டார்கள். அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்குத் துறையின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடத்தில் இடம் கண்டறியப்பட்டால், அந்தக் கடையை அந்த இடத்திற்கு மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தயாராக இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது எல்லா ஆட்சிக் காலங்களிலும் சேர்த்து 2011 ஆம் ஆண்டு வரை சென்னை மாநகராட்சியில் 72 நியாய விலைக் கடைகளுக்குத்தான் சொந்தக் கட்டடங்கள் இருந்தன. ஆனால், 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட 8 ஆண்டு காலத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு காலத்தில் 84 நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தற்போது 43 கடைகளுக்கு கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கடைகள் எல்லாம் கட்டி முடிக்கப்படும்போது மாநகராட்சியின் தேவைகளை நிறைவேற்றுகிற அளவில், பொது விநியோகத் திட்டத்திற்கான தேவைகளை நிறைவேற்றும் வகையில் கட்டடங்கள் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத்தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2019 பிப்ரவரி 13

**67—**

**கால்நடை மருந்தகம்**

***41780—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணச்சநல்லூர் தொகுதி, சணமங்கலம் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சணமங்கலம் ஊராட்சியில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதால் கால்நடை மருந்தகம் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்குமேல் இருந்தால் முதலில் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்க இயலும். பின்னர் கால்நடை அலகுகள் 5,000-க்குமேல் ஆகும்போது அந்தக் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள சணமங்கலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான திருப்பத்தூர், மணியாங்குறிச்சி, வாழையூர் ஆகியவற்றில் மொத்தம் 1,137 பசு இனங்களும், 4,700 ஆட்டு இனங்களும் மற்றும் 1,300 கோழி இனங்களும், ஆக மொத்தம் 1,600 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

**திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் காவல் தெய்வம் அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் எங்கள் அண்ணன், இந்த நாட்டின் மன்னன் கொங்கு மண்டலம் தந்த தங்கம், கொங்கு நாடு கண்டெடுத்த சிங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் அண்ணன் அவர்களை வணங்குகின்றேன். தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக ஒருங்கிணைப்பாளர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சணமங்கலம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் ஏராளமான மேய்ச்சல் நிலங்கள் உள்ளதால் அங்குள்ள மக்கள் கால்நடை வளர்ப்பை முதன்மைத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிறுகனூர் அல்லது எதுமலைக்குச் செல்லவேண்டியதுள்ளது. அந்தச் சுற்றுவட்டாரத்தில் சுமார் 1,500 ஆடுகளும் 5,000 கறவை மாடுகளும் உள்ளன. இங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுவதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சணமங்கலம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் தொகுதியில் சுமார் 42,000 மாட்டினங்கள், 68,000 ஆட்டினங்கள் மற்றும் 2,75,000 கோழியினங்கள் உள்ளன. இவற்றுக்கு மருத்துவ வசதிகள், சேவைகள் வழங்கிட 15 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 3 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மேலும் அரசாணை எண் 200, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 10-10-2018-ன்படி, மணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட திருப்பஞ்சீலி கிராமத்தில் இயங்கி வந்த கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம்

[2019 பிப்ரவரி 13

உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சணமங்கலம் கிராமத்தில் அதிகளவிலே கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கருத்திலேகொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் முதலிலே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

**திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூரில் 1970-ல் ஆரம்பிக்கப்பட்ட கால்நடை மருந்தகம் இன்றளவும் தரம் உயர்த்தப்படாமல் அப்படியே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மணச்சநல்லூர் கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தரமுயர்த்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

## தென்னை ஆராய்ச்சி மையம்

***27161—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2019 பிப்ரவரி 13]

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை விவசாயம் செய்யப்பட்டு, ஆண்டுதோறும் சுமார் 53 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகள் மூலமாக தென்னை நார்க் கழிவுகள் மதிப்புக் கூட்டப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இம்மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிராக தென்னை இருக்கிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

நிலமற்ற ஏழைப் பெண்கள் மறைமுகமாக தென்னைப் பயிரை நம்பியுள்ளனர். அதாவது, இம்மாவட்டப் பெண்கள், தென்னை ஓலையைப் பின்னி விற்றும், ஈர்க்குகளை விற்றும் வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்நிலையில், இம்மாவட்டத்தில் தற்போது தென்னைப் பயிரை பல்வேறு நோய்கள் மற்றும் பூச்சிகள் தாக்கி மகசூல் இழப்பு ஏற்படுகிறது. முக்கியமாக வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில், பக்கத்து மாநிலமான கேரளாவிலிருந்து வாடல் நோய் என்னும் கொடிய நோய் பரவி, தென்னை மரங்களைத் தீவிரமாகத் தாக்கி வருகிறது. இதனால் தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது. இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும்

[2019 பிப்ரவரி 13

தேங்காய் கொப்பரைகள் உலகத் தரம் வாய்ந்தவை. ஆனால், தற்போது தென்னைப் பயிர், பல்வேறு நோய்த் தாக்குதல்களுக்கு உள்ளாவதால், இம்மாவட்டத்தில் விளையும் தேங்காய்களின் தரம் கெட்டுவிடுமோ என்ற ஐயம் உள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் இருந்தாலும், இம்மாவட்ட சீதோஷ்ண நிலை, மற்ற மாவட்டங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. சீதோஷ்ண நிலைக்கேற்ப தென்னையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து விவசாயிகளுக்கு வழங்கினால் மட்டுமே இம்மாவட்டத்தில் தென்னை மரங்களையும், தென்னை விவசாயிகளையும் காப்பாற்ற முடியும். புதிய ஆராய்ச்சிகள்மூலம் தென்னை பயிரிடப்படும் பரப்பை அதிகரிக்கச் செய்ய வாய்ப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல், உற்பத்தியை இரு மடங்காகப் பெருக்கி, மதிப்புக் கூட்டுதலில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக உயர்த்துவதற்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தென்னை ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 39 ஆராய்ச்சி நிலையங்களில், அப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கென ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 14 வேளாண் அறிவியல் நிலையங்கள்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் தேவைக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில் தரமான தென்னங்கன்றுகள் மற்றும் வேளாண்மை பற்றிய ஆலோசனைகளுக்கு தோவாளை கிராமத்தில் மலரியல் ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரத்தில் நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்



2019 பிப்ரவரி 13]

அறிவியல் நிலையம் ஆகியவை வேளாண் பெருமக்களுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகின்றன. மேலும், வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கன்னியாகுமரிக்கு அருகில் புத்தளம் கிராமத்தில், அரசு தென்னை நாற்றுப் பண்ணையும், தென்தாமரைக்குளம் கிராமத்தில் தென்னை ஒட்டு சேர்க்கும் மையமும் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஆண்டிற்கு சுமார் 45 ஆயிரம் தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் பொள்ளாச்சிக்கு அருகிலுள்ள ஆழியார் நகர் மற்றும் தஞ்சை மாவட்டம், வேப்பங்குளம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி மையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் என்பது சென்னைக்கு அடுத்தபடியாக 92 விழுக்காடு படித்த மக்களைக் கொண்ட மாவட்டம். இங்கே விவசாயிகள் அதிகப்படியாக இருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை ஆராய்ச்சி மையம், நெல் ஆராய்ச்சி மையம், மலர் வணிக ஆராய்ச்சி மையம், Krishi Vigyan Kendra நிலையம் (KVK) ஆகியவை மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. இவை எல்லாம் இருக்கின்ற காலக்கட்டத்தில், இவை அனைத்தையும் ஒருங்கிணைக்கக்கூடிய அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்புக் கல்லூரிகள், அதாவது அரசுக் கல்லூரிகள் மொத்தம் 14 கல்லூரிகளும், அதனுடைய இணைப்புக் கல்லூரிகளாக 27 கல்லூரிகளும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இவை அதிகமான அளவில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டமான கன்னியாகுமரிக்கு வேளாண்மைக் கல்லூரி தேவை என்று அவர் கேட்டிருக்கிறார். தேவை இருக்கிறதா என்பதை அறிந்து அதன்மூலம் பக்கத்து மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் பயன்படுமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் சட்டப் பேரவைத் தொகுதி மற்றும் வேதாரண்யம் பகுதிகளிலே கஜா புயலால் பாதிக்கப்பட்டு, தென்னை மரங்கள் எல்லாம் அடியோடு அழிந்துவிட்டன. அங்குள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலமாக இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடூரமான கஜா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் விவசாயிகளுக்குத் தேவையான தென்னங்கன்றுகளை அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.



2019 பிப்ரவரி 13]

**69**—

## மணிமண்டபம்

***39999—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழகத்தின் பொற்கால முதல்வராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு, தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையில், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று தியாகங்கள் பல புரிந்த தியாகிகளைப் பெருமைப்படுத்தும் வகையில் 69 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுச் சின்னம் ஆகியவை உருவாக்கப்பட்டு, செய்தி மற்றும் விளம்பரத் துறையால் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தளி பேரூராட்சி, சுற்றுலாத் தலமாக விளங்குகின்ற திருமூர்த்தி அணை மற்றும் அமரலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள பகுதி. இதில் கி.பி. 1800 ஆம் ஆண்டில் தென் கொங்கு நாடு என்றழைக்கப்பட்ட, பழனி, விருப்பாட்சி, ஆயக்குடி, இடையக்கோட்டை, ஊத்துக்குளி, தளி ஆகிய ஆறு பாளையக்கட்டுகள் ஆட்சி செய்து வந்தனர் என்று எத்தலப்ப

*[2019 பிப்ரவரி 13*

*நாயக்கர் வரலாற்றுத் தொகுப்புகள் கூறுகின்றன. அதேபோல திருமூர்த்தி அணைப் பகுதியில் தளி பாளையத்தை எத்தலப்ப நாயக்கர் வம்சாவழிகள் 16 பேர்கள் ஆண்டுள்ளனர் என்பதற்கான கல்வெட்டுகள் இன்றும் உள்ளன. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னர், ஊமைத்துரை, விருப்பாச்சி பாளையக்காரர் கோபால் நாயக்கர், தீரன் சின்னமலை, திப்புசுல்தான், மணப்பாறை லட்சுமி நாயக்கர், ஆகியோரோடு தென்னிந்திய தீபகற்பத்தில் கூட்டணி அமைத்து ஆங்கிலேயர்களை கதிகலங்க வைத்த பெருமை எத்தலப்ப நாயக்கருக்கு உள்ளது என்பது வரலாறு.*

*அதேபோல, சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட இந்தியர்களை ஆங்கிலேயர்கள் தூக்கிலிட்ட வரலாறு உண்டு. ஆனால், ஆங்கிலேயர் ஒருவரைத் தூக்கிலிட்ட பெருமை எத்தலப்ப நாயக்கருக்கு உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. அந்தவகையில், தளி எத்தலப்ப நாயக்கர் சம காலங்களில் தேச விடுதலைக்காகப் போரிட்டவர்களில் வீரபாண்டிய கட்டபொம்மன், விருப்பாச்சி கோபால் நாயக்கர், தீரன் சின்னமலை, மருது பாண்டிய சகோதரர்கள் ஆகியவர்களுக்குத் தமிழக அரசு மணிமண்டபம் அமைத்ததைப் போல, தளி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக மணிமண்டபம் அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி எத்தலப்பர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தளி முதல் தழிஞ்சி மலைப் பகுதி வரை தலைமையிடமாகக் கொண்டு மக்களை ஆட்சி செய்த அரசர். தென் கொங்கு பாளையங்களின் தலைமை பாளையக்காரர். பண்டைய விஜய நகர மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். மராட்டிய விடுதலை வீரர் துண்டாஜிவாக், திப்புசுல்தானுடனும், கொங்குநாட்டு விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை மற்றும் மலபார் பகுதி விடுதலை வீரர் கேரளவர் மதுவுடனும் தொடர்பில் இருந்தவர். மலைவாழ் மக்களை அரவணைத்து*



*2019 பிப்ரவரி 13]*

*வாழ்ந்தவர். மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தவர். இந்தியாவுக்கு வணிகம் செய்ய வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி மண்ணாசை கொண்டு ஆற்காடு நவாபையும் திப்புசுல்தானையும் தந்திரத்தால் வென்று, சமூகத்தைத் துண்டாடி பாளையங்களின் குடியாட்சியை குலைத்து ஊடுருவிய நேரத்தில், மண்ணின் மானத்தைக் காக்க கம்பெனி ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக வெகுண்டெழுந்து போரிட்டு மடிந்த மாவீரர்களில் எத்தலப்பரும் ஒருவர். தாழ்த்தப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து ஆங்கிலேய கம்பெனியின் சுரண்டல்களை எதிர்த்து போர்புரிந்தவர்.*

*அமராவதி காடுகளில் பெண்களுக்கு படைப் பயிற்சி அளித்து ஆங்கிலேயரை எதிர்க்க தற்கொலைப் படையை உருவாக்கியவர். மேலும், வேலு நாச்சியாரின் பணிப்பெண் குயிலி என்பவர் இவரிடம் போர்ப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர, பாஞ்சாலங்குறிச்சி போரில் ஊமைத்துரை சிறைப்பட்டவுடன், சிறை மீட்பு செய்ததும், கட்டபொம்மனுக்கு பிறகு இரண்டாம் பாஞ்சாலங்குறிச்சி போரில் தளியிலிருந்து படைவீரர்களை அனுப்பி போரிட்டவர், தளி எத்தலப்ப நாயக்கர் ஆவார். எத்தலப்ப நாயக்கர் அவர்கள், ஆங்கிலேயர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில், தளி பாளையத்தை உளவு பார்த்த ஆங்கிலேயர்* Andre Katis *(ஆண்ட்ரூ கேதிஸ்)-ஐ 1801 ஏப்ரல் 23 ஆம் நாள் தளிபாளையம் திணைக்குளம் பகுதியில் தூக்கிலிட்டார். இவ்வளவு சிறப்புமிக்க அவருக்கு சமீபத்தில் உடுமலைப்பேட்டையில் அவருடைய வரலாற்றை மக்களுக்கு எடுத்துரைக்கும் வண்ணமாக, புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. அந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் நானும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவருமான மாண்புமிகு திரு. உடுமலை* K. *ராதாகிருஷ்ணன் அவர்களும், அந்தப் பகுதியிலே உள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் கலந்துகொண்டு, அந்த விழாவைச் சிறப்பித்தோம். அப்போது அந்தப் பகுதி மக்கள், அந்த வரலாற்று ஆராய்ச்சி நூலை தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களும், இளைய தலைமுறை பிறகும் வருங்கால சந்ததியினரும் அறிந்துகொள்ளும் வண்ணமாக, நூலகத்திலே வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆசியோடு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுடைய ஆதரவோடு விரைவிலே அந்த நூலை அனைத்து நூலகங்களிலும்*

வைப்பதற்குண்டான ஏற்பாட்டை அரசு செய்து வருகின்றது என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையபட்டு என்கின்ற தளி பேரூராட்சி, திருமூர்த்தி அணை அருகிலுள்ள சுற்றுலாத் தலப் பகுதியில் அமைந்துள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, தளி எத்தலப்ப நாயக்கர் குறித்த பல்வேறு வரலாறுகளை நீங்களும் பதிவு செய்துள்ளீர்கள். அந்தவகையில் அவர் சுதந்திரப் போராட்ட வீரர் மட்டுமல்லாமல், அந்தப் பகுதி மக்களுக்கு விவசாயம் செய்ய குளம், குட்டைகள் அமைப்பது மற்றும் கோயில்கள் அமைப்பது போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகளை எல்லாம் செய்து கொடுத்து, மக்களிடையே நல்ல மதிப்பைப் பெற்றவர். ஆகவே, தொடர்ந்து பல ஆண்டுகளாக அந்தப் பகுதியினுடைய மக்கள் மட்டுமல்லாமல், வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகத்தின் சார்பாகவும், தமிழக அரசிற்கு பல்வேறு நிலைகளில் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆகவே, அவருக்கு கண்டிப்பாக தமிழக அரசின் சார்பாக ஒரு மணிமண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

அதேபோல, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விருப்பாச்சியில் கோபால் நாயக்கருக்கு மணிமண்டபம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் கட்டப்பட்டது. அவருக்கு மேலும் புகழ் சேர்க்கின்றவகையில் அவருடைய உருவம் பொறித்த தபால் தலையை மத்திய அரசு வெளியிடுகின்றவகையில், தமிழக அரசு அதற்கான முன்னேற்பாட்டைச் செய்யுமா என்பதை தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி எத்தலப்ப நாயக்கரின் பெருமைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இங்கே எடுத்துரைத்தார். நானும் அவருடைய வரலாற்றை இங்கே பதிவு செய்திருக்கின்றேன்.





மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மரியாதைக்குரிய தலைவர்களைப் பெருமைப்படுத்துவதிலே தன்னிகரற்ற அரசாக இருக்கின்றது, செய்தித் துறையிலே புதிய வரலாறைப் படைத்துக் கொண்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

## இராஜகோபுரம்

***35433—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டுவதற்கு மண்ணின் தன்மை ஏற்றதாக இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்ட வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

*[2019 பிப்ரவரி 13*

*முற்பகல் 11-15*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகரத்தில் பவானி ஆற்றங்கரையிலே மிகச் சிறப்பாக அமைந்திருக்கிற திருக்கோயில்தான் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். இந்தத் திருக்கோயில் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு மேலான ஒரு பழமைவாய்ந்த திருக்கோயிலாகும். தற்போது, இந்தத் திருக்கோயில் முழுவதும் சிதிலமடைந்துவிட்ட காரணத்தினாலே, கடந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதற்குத் திருப்பணிகளைச் செய்ய உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையில், பல்வேறு திருப்பணிகள் இன்றைக்கு செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. அம்மன் சன்னதி, சிவன் சன்னதி, நவக்கிரக சன்னதி, கருவறையுடன்கூடிய விமானம், மகா மண்டபம், தியான மண்டபம், சுற்றுச்சுவர் பிரகாரம், சுற்றுச் சுவர் போன்ற பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்கள், இதற்கு ஓர் இராஜகோபுரம் கட்டப்பட வேண்டுமென்று நீண்டநாட்களாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே இராஜகோபுரம் கட்டுவதற்கு தரச் சான்றிதழ் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கே மண்ணினுடைய உறுதித் தன்மையைப் பூர்த்தி செய்யாத காரணத்தினாலே அந்த இராஜகோபுரம் கட்ட முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த இராஜகோபுரம் கட்டப்பட வேண்டிய இடத்திற்கு முன்புறத்திலே மிகப் பெரிய கோபுரம் உள்ளது. அந்தக் கோபுரத்தை அப்புறப்படுத்திவிட்டு அல்லது வேறு இடங்களிலாவது மண் பரிசோதனை செய்து, அங்கே இராஜகோபுரம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியில்லையென்றால், இன்றைக்கு இருக்கிற நவீன யுத்தியைப் பயன்படுத்தி, தொழில்நுட்பங்கள் வளர்ந்து வருகிற இந்தத் தருணத்தில், தொழில்நுட்ப வல்லுநர்களை வைத்து, அதை ஆய்வு செய்து, அந்த இராஜகோபுரத்தைக் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



*2019 பிப்ரவரி 13]*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டும் திருப்பணிக்காக, முதல்கட்டமாக இராஜகோபுரம் கட்டப்படவுள்ள இடத்தின் மண்ணின் தன்மைக் குறித்து அறிய, கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அலுவலர்களால் மண் பரிசோதனை செய்யப்பட்டது. அவர்களின் அறிக்கையில் அவ்விடத்தில் மண்ணின் தாங்கும் சக்தி மிகவும் குறைவாக உள்ளதால், இத்திருக்கோயிலில் இராஜகோபுரம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இப்பொருள் தொடர்பாக மீண்டும் மண் பரிசோதனை செய்ய, உயர்மட்ட வல்லுநர்கள் குழுவினைக் கொண்டு மறு ஆய்வு செய்து, இராஜகோபுரம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன தொழில்நுட்ப யுத்தி கொண்டு, மீண்டும் மண் பரிசோதனை செய்து, இராஜகோபுரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, அந்தத் திருக்கோயிலில் கடந்த காலங்களில் மிகப் பெரிய திருமண மண்டபம் ஒன்று இருந்தது. காலப்போக்கில், அந்தத் திருமண மண்டபம் சிதிலமடைந்துவிட்ட காரணத்தினால், அந்த மண்டபம் மீண்டும் கட்டப்பட வேண்டுமென்று கடந்த முறை, இந்த அவையிலே நான் தெரிவித்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திருமண மண்டபத்தைக் கட்டுவதற்காக இன்றைக்கு ஒப்புதல் வழங்கி, மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே, அந்தத் திருமண மண்டபத்தை உடனடியாகக் கட்டித் தருவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கின்ற, அந்தத்

[2019 பிப்ரவரி 13

திருப்பணிகளில் எஞ்சியிருக்கின்ற சோபன மண்டபத்தையும் கட்டி, முழுமையாக, இந்தத் திருக்கோயிலுக்கான திருப்பணிகளை முடித்து, இராஜகோபுரத்தையும் கட்டி முடித்து, குடமுழுக்கு நிகழ்ச்சியை வெகுவிரைவிலே நடத்திக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திருக்கல்யாண மண்டபம் கட்டுவதற்கு ரூபாய் ஒரு கோடியே 69 இலட்சத்துக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு விரைவில் இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்கான பணிகளை விரைவில் தொடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-20

## 2. தகவல் கோரல்

### (அ) தமிழகத்தில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசால் அறிவிக்கப்பட்ட குடிநீர்த் திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகக் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் உருவாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. சென்னைக் குடிநீர்



2019 பிப்ரவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

வடிகால் வாரியத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பூண்டி ஏரி, சோழவரம் ஏரி, ரெட்ஹில்ஸ் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய அனைத்து ஏரிகளினுடைய நீர்மட்டமும் படுபாதாளத்திற்குப் போயிருக்கிறது. 12-2-2019 நிலவரப்படி 855 மில்லியன் கன அடி நீர் இருப்பு மட்டுமே இருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் 976 மில்லியன் கன அடி நீர் இருப்பு கடந்த வருடம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் இருக்கக்கூடிய 33 மாவட்டங்களில், குறைந்தது 20 மாவட்டங்களில் நிலத்தடி நீர் படுமோசமாகக் குறைந்துவிட்டதாக ஆய்வறிக்கைகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சென்னை மாநகர மக்களுக்குக் கிடைக்க வேண்டிய மழை அளவு 55 சதவிகிதம் குறைந்திருக்கிற காரணத்தால் குடிநீருக்குப் பெரும் அவதி ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

ஏற்கெனவே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தடையின்றி தண்ணீர் வழங்க வேண்டுமென்பதற்காக 157 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, 'யானைப் பசிக்கு சோளப் பொரி' என்ற பழமொழியைத்தான் இது நினைவுக்குக் கொண்டு வருகிறது. 2016-2017, 2017-2018 மற்றும் 2018-2019 ஆண்டுகளினுடைய நிதிநிலை அறிக்கைகளில் மட்டும் ஏறக்குறைய 15,000 கோடி ரூபாய்க்கு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆட்சியிலே, ஏற்கெனவே கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய 5 திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன; விதி 110-ஐப் பயன்படுத்தியும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 16-4-2013 அன்று விதி 110-ன்கீழ், 150 மில்லியன் லிட்டர் நெம்மேலி-கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், அதேபோல், அதே விதி 110 அறிவிப்பிலே சென்னைக்கு அருகிலே, பேரூரிலே 400 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், 10-4-2013 தேதியிட்ட விதி 110-ன்கீழ் அறிவிப்பிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குதிரைமொழியில் 60 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், தூத்துக்குடி மாவட்டம், அலந்தலையிலே 60 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், 9-8-2017 அன்று விழுப்புரத்திலே நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே அறிவிக்கப்பட்ட விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் இருக்கக்கூடிய நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர்

*தண்ணீர் வழங்கும் வகையில், கடல் நீரை நன்னீராக்கக்கூடிய திட்டம், ஆக இப்படி பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அறிவிக்கப்பட்ட அந்த 5 திட்டங்களுடைய மதிப்பு மட்டும் எவ்வளவு என்று கேட்டீர்களென்றால், 9,692 கோடி ரூபாய். ஆக, உங்களுடைய ஆட்சியிலே மொத்தமாக அறிவிக்கப்பட்ட 25,000 கோடி ரூபாய்க்கான குடிநீர்த் திட்டங்களுடைய நிலை என்ன என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து இந்த அரசு உடனடியாக ஒரு வெள்ளை அறிக்கையை இந்த மன்றத்திலே தாக்கல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*குடிநீர்ப் பஞ்சத்தினுடைய கொடுமை, மக்களுடைய நிலைமை, அதனால் மக்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த அவல நிலையை எல்லாம் மனதில் வைத்து, வருகின்ற கோடைக் காலத்தில் மக்களுக்கு ஏற்படக்கூடிய அவதியைப் புரிந்துகொண்டு, அறிவித்த திட்டங்களையெல்லாம் உடனடியாகச் செயல்படுத்துகிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று, இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பட்ஜெட் விவாதத்தில் இன்று உரையாற்றுகிறீர்கள். அப்போதுகூட நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

*முற்பகல் 11-25*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ஆண்டு பெய்திருக்கக்கூடிய மழையின் அளவு ஏறத்தாழ 60 சதவிகிதம் குறைவாக இருக்கிறது. சென்னையிலே இப்பொழுதே தண்ணீர் கிடைப்பதிலே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் கீழே சென்றிருக்கிறது. அதேபோல, தமிழகத்திலே பல மாவட்டங்களிலே குடிதண்ணீர்ப் பிரச்சினை இப்பொழுதே ஏற்பட்டிருக்கிறது. ஒரு குடம் தண்ணீர் 10 ரூபாய்க்கு வாங்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில், நான் இந்த அரசுக்குச் சொல்லக்கூடிய தகவல், கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டத்தை நீங்கள்*





*சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அந்தத் திட்டத்திலிருந்து நீங்கள் மாறுபட்டிருக்கிறீர்கள். திட்டங்களைச் செயல்படுத்தவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலே நரிப்பையூர் திட்டம் என்பது பெரிய திட்டம். அது என்ன ஆனது என்று தெரியவில்லை. இதுபோன்ற பெரிய திட்டங்களெல்லாம் இன்றைக்கு நடைபெறாமல் இருக்கின்றன. (குறுக்கீடு) முடித்துவிட்டேன், அவ்வளவுதான். அதனால், குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நீங்கள் முன்னுரிமை கொடுத்து, இன்றைக்கு தமிழகத்திலே வரக்கூடிய வறட்சியைத் தாக்குப்பிடிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும் குடிநீர்ப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல், பல்வேறு இடர்ப்பாடுகளிலே, குறிப்பாக, 142 வருடங்களில் இல்லாத வறட்சி வந்தபோதும்கூட நாம் அதைச் சமாளித்திருக்கிறோம். இப்பொழுதுகூட சென்னையில் இருக்கக்கூடிய சூழ்நிலை, இன்றைக்கு பருவ மழை பெய்யவில்லை என்பதுதான். அதேபோல, 142 வருடங்களில் இல்லாத வறட்சியைச் சமாளித்தோம். மற்ற மாவட்டங்களிலெல்லாம் அந்த அளவுக்கு இல்லை. ஓரளவுக்கு மழை பெய்திருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் மழை சிறிது குறைவாகப் பெய்திருக்கிறது. அதற்கும் தேவையான திட்டங்களைத் தந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக மூத்த I.A.S. அதிகாரிகளை நியமனம் செய்து, குடிநீர்ப் பிரச்சினை வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி பல்வேறு கேள்விகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய காரணத்தினால் விளக்கமாகக் கூற வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 பிப்ரவரி 13

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, 2011 முதல் 2016 வரையிலான 5 ஆண்டுகளில், குடிநீர்த் திட்டப் பணிகளுக்கென அதிக நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு முன்னர் 2006-2011 ஆம் ஆண்டு வரை இருந்த முந்தைய தி.மு.க. ஆட்சியில்கூட 7,280 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்னால், அம்மா அவர்களுடைய ஆட்சியில் 21,988 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, 2016-2017 ஆம் ஆண்டிலும், அதைத் தொடர்ந்து மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, கடந்த 2019 ஜனவரி மாதம் வரையும் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக 14,219 கோடியே 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் 1 இலட்சத்து 23 ஆயிரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிநீர்த் திட்டப் பணிகளுக்குத் தந்த முக்கியத்துவத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் தந்து தொடர்ந்து அவற்றைச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

2016-2017 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2019 வரையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியிலே 2,464 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் 4,092 குடிநீர்ப் பணிகளுக்கும், பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 4,409 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில், 6,834 குடிநீர்ப் பணிகளுக்கும்; பேரூராட்சிகளிலே 77 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில், 3,561 குடிநீர்ப் பணிகளுக்கும்; தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் 5,339 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில், 267 குடிநீர்ப் பணிகளுக்கும்; ஊரகப் பகுதிகளில் 1,928 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பில், 1 இலட்சத்து 8 ஆயிரத்து 171 குடிநீர்ப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து, அவை செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மே மற்றும் ஜுன் 2019 மாதங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க, pumping motor திறனை அதிகரித்தல், ஆழ்துளைக் குழாய் கிணறுகளைச் சுத்தம் செய்தல் மற்றும் ஆழப்படுத்துதல், புதிய ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட 39,257 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1,015.34 கோடி ரூபாய்க்கு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் சென்னை குடிநீர் வாரியத்திற்கு 280.38 கோடி ரூபாய், நகராட்சி நிருவாகத்திற்கு 103.79 கோடி ரூபாய், பேரூராட்சிகள் துறைக்கு 118.36 கோடி ரூபாய், ஊரக வளர்ச்சித் துறைக்கு 448.92 கோடி ரூபாய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 63.89 கோடி ரூபாய், ஆக மொத்தம் 1,015.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2019 ஆம் ஆண்டு கோடைக்கால குடிநீர்ப் பற்றாக்குறையை சமாளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதற்கட்டமாக 31-1-2019 அன்று சென்னை குடிநீர் வாரியத்திற்கு ரூ.122 கோடியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ.36 கோடியும், ஆக மொத்தம் 158 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். மொத்தமாக 158 கோடி ரூபாயினை முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.



2019 பிப்ரவரி 13] [திரு. எஸ்.பி. வேலுமணி]

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டுள்ளார்கள். கடந்த உங்களது ஆட்சிக் காலத்தில் 8 குடிநீர்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அந்த 8 குடிநீர்த் திட்டங்களுக்குக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நிதி ஒதுக்கீடு செய்து, விருதுநகர், சேலம், வேலூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 74 இலட்சத்து 82 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை 2,936 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். மீதமுள்ள 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் தற்போது முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மத்திய, மாநில அரசு நிதி உதவியின்கீழ் செயல்படுத்தப்படும் அம்ருத் திட்டத்தின்கீழ், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர், தஞ்சாவூர், வேலூர் ஆகிய 6 மாநகராட்சிகளிலும், கும்பகோணம், ஆம்பூர், ஒசூர், இராஜபாளையம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 நகராட்சிகளிலும் 60 இலட்சத்து 46 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 5,506 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 14 குடிநீர்த் திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசாணை

வெளியிடப்பட்டிருக்கின்றது. அவற்றில் 12 திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. மீதமுள்ள 2 பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அதேபோல் அம்ரூத், Smart City திட்டத்தின்கீழ் மற்ற மாநிலங்களில் பல்வேறு பணிகளை எடுத்திருக்கிறார்கள். 2015 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது, அம்ரூத் Smart City திட்டத்தை, 5 வருடங்களில் அதாவது 2020-க்குள் முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதில் தொடர்ந்து குடிநீர்த் திட்டத்திற்காகத்தான் நாம் அதிகமான பணிகளை மேற்கொண்டுள்ளோம். உதாரணத்திற்கு, கோவை மாவட்டத்திற்குக்கூட இன்றைக்கு மூன்றாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை எடுத்து, அதனை அமல்படுத்த இப்போது tender வரை சென்றுவிட்டோம். அது வரும்போது 50 ஆண்டு காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினையே இருக்காது. உதாரணத்திற்காக ஒன்றை சொல்கின்றேன். தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 14 குடிநீர்த் திட்டங்களை எடுத்திருக்கின்றோம். மதுரை குடிநீர்த் தேவையை நிரந்தரமாகப் பூர்த்தி செய்ய திட்டத்தினை மேற்கொண்டுள்ளோம். அதேபோன்று 50-60 ஆண்டு காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினை வராத அளவிற்கு ஒரு திட்டத்தினை நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் அறிவித்தார்கள். இன்றைக்கு அதற்கும் tender கொண்டு வந்துவிட்டோம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது 50 ஆண்டு காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினையே வராது. இவ்வாறாக பல்வேறு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 14 திட்டங்களில், 12 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. மீதமுள்ள 2 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதேபோன்று சீர்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ், மதுரை, தஞ்சாவூர் மற்றும் சேலம் மாநகராட்சிகளில் ரூ.337.56 கோடியில் பெரிய குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கடந்த 142 வருடங்களில் இல்லாத வகையில், 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரலாறு காணாத கடும் வறட்சியாலும், 62 சதவிகித மழை குறைவாலும் ஏற்பட்ட பிரச்சினையை சமாளிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சி





அமைப்புகளில் 1,083 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 42,128 குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, தமிழகத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 5,891 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 2016-2017 மற்றும் 2017-2018 ஆகிய 2 ஆண்டுகளில், சென்னை மாநகரின் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக, 2,464 கோடியே 80 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, 4,092 பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2017 ஆம் ஆண்டில், 142 ஆண்டுகளில் இல்லாத வறட்சி ஏற்பட்ட காலத்திலும், இயற்கை ஏற்படுத்திய இடரை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு திறம்பட எதிர்கொண்டு சமாளித்தது. மக்களுக்கு, சிரமங்கள் ஏதும் ஏற்படாத வகையில், போர்க்கால அடிப்படையில் 112 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 4,090 வறட்சி நிவாரணப் பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டு, சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 550 மில்லியன் லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டது.

முற்பகல் 11-35

இந்தக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, சில புதிய முயற்சிகளாக, குன்றத்தூர் அருகில் சிக்கராயபுரத்தில், பயன்பாட்டில் இல்லாத 22 குவாரிகளில் தேங்கியிருந்த மழைநீரை சுத்திகரித்து வழங்கியிருக்கிறோம். இது நீண்ட நாளாகச் செயல்படுத்த முடியாத பிரச்சினை. அதை முடித்து செயல்படுத்தியிருக்கிறோம். குன்றத்தூர் அருகில் சிக்கராயபுரத்தில், பயன்பாட்டில் இல்லாத 22 குவாரிகளில் தேங்கியிருந்த மழைநீரை சுத்திகரித்து, நாள் ஒன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகருக்கு 24-10-2017 வரை, விநியோகம் செய்யப்பட்டது.

அதேபோல, கூடுதல் முயற்சியாக, 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மின்மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைக்கப்பட்டு, இஸ்ரேல் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட வடிகட்டி துகள்கள்மூலம், போரூர் ஏரியிலிருந்து நீரை சுத்திகரிப்பு செய்து, நாள்தோறும் 40 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது.

இம்முயற்சிகளால், கடந்த 142 வருடங்களில் இல்லாத அளவுக்கு வறட்சி நிலவிய போதும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திறம்பட செயல்பட்டு, சென்னை மாநகர மக்களுக்கு நாளொன்றுக்கு 550 மில்லியன் லிட்டர் குடிநீரை விநியோகம் செய்தது.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் இந்த நடவடிக்கையை, அனைத்துத் தரப்பு மக்களும் வரவேற்றனர். 2018 ஆம் ஆண்டில் 54 சதவீதம் பருவ மழை குறைவாகப் பெய்தாலும், 2017-ல் கையாளப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகள் போன்றே இந்த ஆண்டும் குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை குடிநீர் வாரியத்தால் இந்த ஆண்டு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்: ரூ.11 கோடியில், சிக்கராயபுரம் கல்குவாரி நீரினை சுத்திகரித்து, தினமும் 30 MLD குடிநீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.19.17 கோடியில், எருமையூர் கல்குவாரியிலிருந்து நாளொன்றுக்கு 10 MLD குடிநீர் பெற, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மேட்டூர் அணையிலிருந்து, வீராணம் ஏரிக்கு மீண்டும் ஒரு முறை நீர் நிரப்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ரூ.6.67 கோடியில், நெய்வேலி நீர்ப்படுகையில், கூடுதலாக 9 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, 10 MLD குடிநீர் வழங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. நெய்வேலி சுரங்கத்திலிருந்து 25 MLD மற்றும் பரவனாறு ஆற்றிலிருந்து 40 MLD மற்றும் கெடிலம் ஆற்றுப்படுகையில் 25 MLD, ஆக மொத்தம் 90 MLD குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.47 கோடியில், பூண்டி, தாமரைப்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 350 விவசாயக் கிணறுகள்மூலம் 90 MLD குடிநீர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.53 கோடியில், இரட்டைஏரி, பெரும்பாக்கம், அயனம்பாக்கம் ஆகிய 3 ஏரிகளிலிருந்து நாளொன்றுக்கு 30 MLD நீரை சுத்திகரித்து குடிநீர் வழங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ரூ.42.78 கோடியில், பெருங்குடியிலும், ரூ.41 கோடியில், நெசப்பாக்கத்திலும், நாளொன்றுக்கு 10 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட தலா ஒரு 3 ஆம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு கிடைக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீரை வணிக மற்றும் தொழில்





நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ.8 கோடியில் நிலத்தடி நீர் பெற புதிதாக 423 இந்தியா மார்க் 2 பம்புகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ.9 கோடியில், 171 எண்ணிக்கையில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.4.71 கோடியில், 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 1,294 HDPE குடிநீர்த் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ.39.60 கோடியில் கூடுதலாக லாரிகளை வாடகைக்கு அமர்த்தி குடிநீர் செல்ல முடியாத பகுதிகளுக்கு குழாய்மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் பெற வேண்டிய, கிருஷ்ணா நதிநீரைப் பெறும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு 4-1-2019 ஆம் தேதியில் ஆந்திர அரசுக்கு கடிதம்மூலம் கோரிக்கை விடுத்ததன் காரணமாக, 9-1-2019 அன்று கிருஷ்ணா நதி நீர் ஒழுங்குமுறை ஆணையக் கூட்டத்தில் குடிநீர் வழங்க உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்தில், சென்னைக்கு குடிநீர் வழங்க முடிவு செய்ததன் அடிப்படையில், 10-2-2019 முதல் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்கு கிருஷ்ணா நதி நீர் பெறப்படுகிறது. 13-2-2019 முடிய 10 மில்லியன் கன அடி கிருஷ்ணா நதி நீர் வரப்பெற்றுள்ளது. ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை 4 டி.எம்.சி. நீர் கிடைக்கப் பெற வேண்டும். இதில் 2 டி.எம்.சி. நீர் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் கடுமையான வறட்சி ஏற்பட்டாலும், இந்தப் பணிகளால், சென்னை மாநகருக்கு டிசம்பர் 2019 முடிய தினமும் 550 MLD குடிநீர் வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னைக்கு எந்தச் சூழ்நிலை வந்தாலும், குடிநீர்ப் பிரச்சினையை சமாளித்துவிடுவோம். எந்தப் பிரச்சினையும் கிடையாது. அதுபோல, சென்னை நீங்கலாக பிற மாநகராட்சிகள், 12 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சி, சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதமும், மதுரை, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளிலே நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 முதல் 109 லிட்டர் வீதமும், 66 நகராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும், 58 நகராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 முதல் 89 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [*2019 பிப்ரவரி 13*

*முற்பகல் 11-40*

*கோடைக்காலக் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், ஆழ்துளைக் கிணறுகளைத் தூர் வாருதல்/புனரமைத்தல், நீர் ஆதாரங்களில் நீருறிஞ்சிக் கிணறுகள் அமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், விவசாயக் கிணறுகளை வாடகைக்கு அமர்த்துதல் உள்ளிட்ட 2,782 வறட்சி நிவாரணப் பணிகள் ரூ.103.79 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*528 பேரூராட்சிகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்கு மேல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 524 பேரூராட்சிகளில் நாள்தோறும், 4 பேரூராட்சிகளில், 2 நாட்களுக்கு ஒரு முறையும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில், மாநிலப் பேரிடர் மேலாண்மை நிவாரண நிதி, பொது நிதி உள்ளிட்ட பல்வேறு நிதிகளின்கீழ் 91 பணிகள் ரூ.93.53 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், வறட்சியை எதிர்நோக்கும் 86 பேரூராட்சிகளில், 232 பணிகளை ரூ.24.83 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

*ஊரகப் பகுதிகளில், 5,175 ஊரக, உள்ளாட்சி அமைப்புகளில், 548 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனி குடிநீர்த் திட்டங்கள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஊரக, உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்க, 1.15 இலட்சம் விசைப் பம்புகள், 1.23 இலட்சம் சிறு மின் விசைப் பம்புகள், 1.96 இலட்சம் கைப்பம்புகள், 7,381 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 1.01 இலட்சம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவை பயன்பாட்டில் உள்ளன.*

*ஊரகப் பகுதிகளில், மொத்தமுள்ள 79,394 குக்கிராமங்களில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 4,070 குக்கிராமங்களில், 40 லிட்டருக்குக் குறைவாகவும், 12,845 குக்கிராமங்களில் 40 முதல் 55 லிட்டர் வரையிலும், 62,479 குக்கிராமங்களில், 55 லிட்டருக்கு மேலும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*கோடைக்கால குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க, கிராமவாரியாகச் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் 30,951 வறட்சி நிவாரணப் பணிகள் ரூ.448.92 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*



*2019 பிப்ரவரி 13*] [திரு. எஸ்.பி. வேலுமணி]

*தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக (குறுக்கீடு) விளக்கமாகப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதனால், விளக்கமாகப் பதில் சொல்கிறேன். பதில் முடியப் போகிறது. அதனால் முடித்துவிடுகிறேன். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 556 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் (குறுக்கீடு) குடிநீர்ப் பிரச்சினை முக்கியமான பிரச்சினைதானே! அதனால்தான் விளக்கமாகச் சொல்கிறேன். 4.23 கோடி மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 1,835 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*அடுத்த மூன்று மாதங்களில், சேலம், நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 1,134 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் 4 பெரிய குடிநீர்த் திட்டங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன. இதன்மூலம் நாளொன்றுக்கு 107.50 மில்லியன் லிட்டர் குடிநீர் இந்த மாவட்ட மக்களுக்குக் கூடுதலாகவே வழங்கப்படும்.*

*மேலும், எதிர்வரும் கோடையினைச் சமாளிக்க ரூ.63.89 கோடி மதிப்பீட்டில், புதிய நீராதாரங்கள் அமைத்தல், பழுதடைந்த மின் மோட்டார்களை மாற்றியமைத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட நீருந்துக் குழாய்களை மாற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன.*

*அதுபோல், இன்னொரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 2011 ஆம் ஆண்டு வரை, முந்தைய தி.மு.க. ஆட்சியின் முடிவில், தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக நாளொன்றுக்கு 4,945 மில்லியன் லிட்டர் குடிநீர்தான் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 2001-லிருந்து 2006 வரையிலும், மேலும் 2011 வரையிலும் 4,945 மில்லியன் லிட்டர் குடிநீர்தான் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகவும் குடிநீரின் அளவானது கிட்டத்தட்ட 2,450 மில்லியன் லிட்டர் கூடுதலாக வழங்கப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு 7,395 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது மிகப் பெரிய சாதனை. இந்தியாவிலேயே எந்த மாநிலமும் நிகழ்த்தாத சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில், தற்போது 99.11 விழுக்காடு மக்களுக்கு குழாய்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். இதுவும் இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. பிரச்சினைகள் எல்லா பக்கங்களிலும் இருக்கும். ஆனால், கூடுதலாக இவ்வளவு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, குடிநீர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற பிரச்சினைகளையும் சமாளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இயற்கையால் பிரச்சினை வந்திருக்கிறது. 142 வருடங்களாக இல்லாத பிரச்சினையை நாம் சமாளித்திருக்கிறோம். இப்பொழுது இருக்கிற பிரச்சினையையே நாம் சமாளித்திருக்கிறோம். அதனால், இதனையும் சமாளிப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் 5 meetings நடத்தினார்கள். நாங்களும் தொடர்ந்து meeting நடத்திக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு பகுதிக்கும், senior I.A.S. officers, Monitoring Officers ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா பகுதிகளிலும் day to day அடிப்படையில் நாங்கள் follow-up செய்துகொண்டிருக்கிறோம். எந்தப் பகுதியிலும் குடிநீர் பிரச்சினை வராது. இது இயற்கையால் வந்த பிரச்சினை. அவர்களுடைய ஆட்சியாக இருந்தாலும், நம்முடைய ஆட்சியாக இருந்தாலும், மழை பெய்யாதபோது பிரச்சினை வரும். அதனை அரசாங்கம் எப்படி சமாளிக்கிறது என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-45

அதேபோல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினைப் பற்றியும், அந்தத் திட்டத்தில் உள்ள 5 திட்டங்களைப் பற்றியும் பேசினார்கள். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒரு மிகப் பெரிய திட்டம். எப்போதுமே அத்திட்டத்தை எடுக்கும்போது, காலதாமதம் அதிகமாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த 150 MLD மற்றும் 400 MLD, கிட்டத்தட்ட 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், இவற்றிற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே அவற்றிற்குத் தேவையான வழிவகைகள் அனைத்தையும் செய்துள்ளார்கள். 150 MLD-ஐப் பொறுத்தவரையில், 2013-2014 ஆம் ஆண்டில் மாண்புமிகு



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டத்தைத் தொடர்ந்து follow செய்து, இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசால், KfW என்ற German அரசின் நிதி நிறுவனம் மூலமாக நிதி பெறப்பட்டது. குறிப்பிட்ட அளவில்தான் இதற்கு நிதி கிடைத்தது. AMRUT திட்டத்திலும் சேர்த்து, அந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு ஒப்பந்தம் கோரியாகிவிட்டது. ஒப்பந்தம் கோரிய பிறகு ஒப்பந்ததாரர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டார்கள். 31-10-2018-ல் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவமாற்றத்திற்கான அமைச்சகத்தின் வாயிலாக அதற்கான சான்றிதழும் பெற்றுவிட்டோம். 150 MLD-ஐப் பொறுத்தவரையில் 31-1-2019 அன்று வழக்கு எடுக்கப்பட்டு, மீண்டும் 18-2-2019 ஆம் தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இது அனைவருக்கும் தெரியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் இதுகுறித்துப் பலமுறை கேட்டிருக்கிறார்கள். நானும் பலமுறை இதுகுறித்துப் பதில் சொல்லியிருக்கிறேன். வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, 400 MLD-ஐப் பொறுத்தவரையில், மிகப் பெரிய தொகை வருகிறது. கிட்டத்தட்ட ரூ.6,078 கோடி வருகிறது. இதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மிகப் பெரிய சாதனையாக இத்திட்டம் follow செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தொடர்ந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வலியுறுத்தியதன் காரணமாக, இன்றைக்கு Japan பன்னாட்டு முகமை, JICA மூலமாகவும், தமிழ்நாடு அரசின் பங்களிப்பை சேர்த்தும், இத்திட்டத்திலும் நமது அரசு அடுத்த step-க்கு வந்துவிட்டது. இத்திட்டமும் வேகமாக முடிக்கப்பட்டு, இன்றைக்கு 150 MLD ஆக இருந்தாலும் சரி, 400 MLD ஆக இருந்தாலும் சரி, இன்றைக்கு KfW, German வங்கி மூலமாகவும், Japan பன்னாட்டு முகமை மூலமாகவும் நிதி பெற்றுள்ளோம். Tender போடுவதானாலும் சரி, tender document open செய்வதானாலும் சரி, அதன் பிறகுள்ள அனைத்துப் பணிகள் ஒவ்வொன்றிற்கும் அவர்கள் அனுமதி கொடுத்த பிறகுதான் நாம் செய்ய வேண்டும். அவர்களிடம் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். அதனால் சிறிது காலதாமதம் ஆகின்றது. அதேபோன்று, எவ்வாறு காலதாமதம் ஏற்படுகிறதென்று உங்களுக்கும் தெரியும். இதற்கு முன்னால், 100 MLD திட்டத்தை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள். அத்திட்டத்தைப் பொறுத்தவரையில், இதேபோன்றுதான் காலதாமதம் ஆகியிருக்கிறது. காலதாமதம்

ஆகிறது என்று சொன்னீர்கள். நீங்கள் 2006-2007-ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்றைக்கு ஆளுநர் உரையில், நெம்மேலியில் 100 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். அதன் பிறகு உங்கள் ஆட்சி 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பின்னர், ரூ.914 கோடியில் மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ.861 கோடி தொகையை, 3 ஆண்டுகள் கழித்து, அதாவது 17-3-2009 அன்றுதான் உங்கள் அரசு அந்தத் தொகையைப் பெற்றது. அதன் பின்னர், கிட்டத்தட்ட 1 வருடம், 9 மாதங்கள் கழித்துதான் அதற்கான process எல்லாம் முடிந்து, அந்தப் பணி துவங்கப்பட்டிருக்கிறது. அந்த fund-ஐ வாங்கி, கிட்டத்தட்ட 1 வருடம், 9 மாதங்கள் கழித்துதான் நீங்கள் அதை process செய்திருக்கிறீர்கள். ஆகவே, இத்திட்டங்களைப் பொறுத்தவரையில், பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. எனவே, நாம் நிதியினை வாங்கிய முகமையிடம் ஒவ்வொரு பணிக்கும் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதேபோன்று நீதிமன்றத்திற்கெல்லாம் செல்கிறார்கள். அவ்வாறுதான் காலதாமதம் ஆகிறது.

அதேபோன்று இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் முதலில் 3 திட்டங்களை அறிவித்தோம். பிறகு இரண்டையும் combine செய்துதான் அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். குதிரைமொழியிலும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அலந்தலையிலும். அதற்கும் மத்திய அரசின் அனுமதி எல்லாம் உள்ளது. இரண்டையும் combine செய்து மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதற்குரிய நிதியைப் பெறுவதற்காகக் காத்திருக்கிறோம்.

அதேபோன்று விழுப்புரம் மாவட்டத்தில், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்ததைத் தொடர்ந்து, அடுத்த process நடந்துகொண்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரையில், கண்டிப்பாக மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. அதற்கு நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து daily follow up செய்து அதனை கண்டிப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் செய்ய வேண்டும் என்பதற்காகதான் அதனை அறிவித்தார்கள். அதனடிப்படையில் மக்களின் தேவைக்கேற்ப, அத்திட்டமும் கூடிய விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 11-50

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு)

(திரு. மு. திராவிடமணி நின்று கொண்டிருந்தார்.)

உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் என்றால் நீங்கள் உட்கார வேண்டும். இப்படி நின்று கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் உட்கார்ந்தால்தான் அடுத்த அலுவலுக்குப் போக முடியும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. உ. மதிவாணன் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகக் கேளுங்கள்.

## (ஆ) நாகப்பட்டினம், வடக்குப்பொய்கை நல்லூர், மின்சாரம் தாக்கி உயிரிழந்த சரவணன் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

***திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, நாகப்பட்டினம் தாலுகா, வடக்குப்பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய சரவணன், தகப்பனார் பெயர் மாரிமுத்து என்பவர் 15-1-2019 அன்று 11-45 மணியளவில் மின்சாரம் தாக்கி மரணம் அடைந்துவிட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவரின் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்கும்படி இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வடக்குப்பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காத்தலிங்கம் என்பவர், மின் கம்பம் நடும் பணிக்கு, அவ்வழியே சென்று கொண்டிருந்த, திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவரை அழைத்து, அப்பணியினை மேற்கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியதில், திரு. சரவணன்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைகின்றேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. சரவணன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சரவணன் அவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) நெல்லை மாவட்டம், பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். அதில் 80 சதவிகிதம் பேர் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலங்குளம் தொகுதியில் ஒரு இலட்சத்து 10,000 பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். முக்கியமாக அவர்கள் 1,000 பீடி சுற்றினால் 204 ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். வருங்கால வைப்பு நிதியாக ரூபாய் 20-ஐ பிடித்துவிட்டுத்தான் அந்தக் கூலியை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதில் பெரிய பிரச்சினை என்னவென்றால், கடந்த நான்கு வருடங்களாக, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு 750 ரூபாய், நடுநிலைப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு 900 ரூபாய், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 1,750 ரூபாய், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 2,000 ரூபாய், கலைக் கல்லூரி மாணவர்களுக்கு 3,000 ரூபாய், தொழிற்சார் கல்லூரி Professional Colleges-ல் படிப்பவர்களுக்கு ரூ.8,000/- உதவித் தொகையை ஒரு வருடம் அல்ல, இரண்டு வருடங்கள் அல்ல, கடந்த



2019 பிப்ரவரி 13] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

நான்கு வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட பெரிய பெரிய பீடி கம்பெனிகளான சையது பீடி, காஜா பீடி, கணேஷ் பீடி போன்ற கம்பெனிகள் கொடுக்கவில்லை. அவர்களின் வைப்பு நிதியிலிருந்து வரும் வட்டியிலிருந்து தரவேண்டிய அந்த உதவித் தொகையை நான்கு வருடங்களாக என்னுடைய தொகுதியில் யாரும் பெறவில்லை. நான் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு ஆதாரத்தை வழங்குகிறேன். தயவுசெய்து இந்தத் தனியார் கம்பெனியினரை அழைத்துப் பேசி, துரிதமாக இந்தக் கல்வி உதவித் தொகையை, விடுபட்ட அந்த நான்கு வருடங்களுக்கும் மொத்தமாகச் சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின்கீழ் செயல்படும் திருநெல்வேலி பீடித் தொழிலாளர் நல ஆணையர்மூலம் தமிழ்நாட்டில் உள்ள பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை உட்பட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2015-2016 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் 2,60,413 பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.39,54,53,630 (ரூபாய் முப்பத்தொன்பது கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று முப்பது மட்டும்) மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2018-2019 ஆம் ஆண்டுக்கு 24,319 பீடித் தொழிலாளர்களுக்கு ரூ.4,00,49,820 (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசிடமிருந்து ஏப்ரல் மாதம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மே மாத இறுதிக்குள் இத்தொகை வழங்கப்படும். கல்வி உதவித் தொகை தொடர்பாக தகுதியுடைய பயனாளிகளுக்கு புகார் ஏதும் இருப்பின் திருநெல்வேலி, மத்திய தொழிலாளர் நல ஆணையர் (பீடி) அவர்களிடம் மனு அளித்து நிவாரணம் பெறலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 பிப்ரவரி 13

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, ஒருங்கிணைந்த நவீன கால்நடை பூங்கா நிறுவுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி தொடர விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும், கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை ஏற்றமடையச் செய்ய, விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும்வண்ணம், "அசீல்" இனக் கோழிகளை கிராமப்புற மக்களுக்கு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், வேளாண் தொழிலின் உபதொழிலான கால்நடைத் தொழிலை மேன்மைப்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரும் வகையில், கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்புகளையும், தொழில்நுட்பங்களையும் மேம்படுத்த போதுமான நிதி ஆதாரங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண் 79-ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான 900 ஏக்கர் பரப்பில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன்கூடிய நவீன கால்நடை பூங்கா ஒன்று சுமார் 396 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



2019 பிப்ரவரி 13] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*மூன்று பிரிவுகளாக அமைய உள்ள இப்பூங்காவின் முதலாவது பிரிவில், நவீன வசதிகளைக்கொண்ட கால்நடை மருத்துவமனை, நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக்காட்டும் வகையில் கறவை மாட்டுப் பண்ணை, உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம் மற்றும் பர்கூர் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கப் பண்ணை, செம்மறி மற்றும் வெள்ளாட்டின் பண்ணை, பன்றிகள், கோழியினப் பிரிவுகள் மற்றும் நாட்டின நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகியவற்றிற்கான இனப்பெருக்கப் பிரிவுகளைக்கொண்ட கால்நடைப் பண்ணை வளாகம் அமைக்கவும், இரண்டாம் பிரிவில் பால், இறைச்சி, மீன் மற்றும் முட்டை போன்ற உணவுப்பொருட்களைப் பாதுகாத்து பதப்படுத்தவும், அவற்றிலிருந்து பல்வேறு மதிப்புக்கூட்டிய உபப்பொருட்களைத் தயார் செய்யவும், அவற்றை சந்தைப்படுத்த வசதி ஏற்படுத்தவும், மூன்றாவது பிரிவில் பயிற்சி, விரிவாக்கம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவோருக்கான பயிலரங்கத்துடன் பல்வேறு அம்சங்களைக் கொண்ட வளாகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்த நவீன பூங்கா தமிழகத்தில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் பயிற்சி மேற்கொள்ளவும், உலக நாடுகளில் உள்ள கால்நடை மருத்துவம் படிக்கின்ற மாணவர்களும் அங்கே வந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். உலகத்தரம் வாய்ந்த இவ்வளாகம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில், அனைத்து அடிப்படை வசதிகளையும்கொண்ட வளாகமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். "மரபுத் திறன்மிக்க நாட்டின மற்றும் கலப்பின காளைகளைக்கொண்டு 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்" என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019-2020 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த உறைவிந்து உற்பத்தி நிலையம் இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மிகப்பெரிய அளவில் இப்பூங்கா அமைக்கப்படுவதால், இதனை நிருவகிப்பதற்கு தொடர்புடைய துறை இயக்குநர்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு கால்நடை*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மாண்புமிகு அம்மாவின் பெயரால் அமைந்துள்ள மீன் வள பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஆகியோரை செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்களாகக்கொண்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்படும். இத்திட்டத்தை ஒருங்கிணைத்து சிறப்பாகச் செயல்படுத்திட கால்நடை பராமரிப்பு கூடுதல் இயக்குநர் பதவி உருவாக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. விதி 110–ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12-00

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவில் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றுவேன் என்று சபதமிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை இன்று செயல்வடிவாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இத்திட்டங்களினால், தமிழகம் வளம் பெறும், தமிழக மக்கள் நலம் பெறுவார்கள். கால்நடை பராமரிப்புத் துறையானது கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு பக்கபலமாக உள்ளது. கால்நடைகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முக்கிய வருமானம் ஈட்டும் முகமைகளாக விளங்குகின்றன. இத்துறையில், தமிழக அரசு எடுத்து வரும் சீரிய முயற்சியின் தொடர்ச்சியாக, கடந்த ஆண்டு 1,74,161 முட்டைகள் உற்பத்தியுடன், இந்திய அளவில் முதல் இடத்திலும், 6 கோடியே 34 ஆயிரம் கிலோ இறைச்சி உற்பத்தியுடன், இந்திய அளவில் 5-வது இடத்திலும், அதிக பால் உற்பத்தித் திறனுடைய கலப்பினக் கறவைகள் உள்ள மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குவதுடன், வருடத்திற்கு சுமார் 77 இலட்சத்து, 14 ஆயிரம் மெட்ரிக் டன் பால் உற்பத்தி செய்து, இந்திய அளவில் 9-வது இடத்திலும் உள்ளது என்பதை முதலில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2019 பிப்ரவரி 13] [திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்]

இன்றைக்கு ஆசியாவிலேயே, அதிக முதலீட்டில் சுமார் 496 கோடி ரூபாய் செலவில், அதி நவீன வசதிகளுடன் ஒருங்கிணைந்த கால்நடை பூங்கா அமைப்பதற்கான அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிட்டதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

**திரு. அ. மருதமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். குடிமராமத்து மன்னர், காவேரி மீட்பு நாயகர், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எனது கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி. கூட்ரோடு பகுதியில் கால்நடை பூங்கா மற்றும் கால்நடைப் பண்ணை வளாகம் திறப்பதற்கு உத்தரவிட்டதற்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிவிப்பு

### “காகிதமில்லா சட்டமன்றம்” எனும் இலக்கினை எய்திடும் வகையில் குழுக்களின் அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. “காகிதம் இல்லா சட்டமன்றம்” என்ற நிலையினை உருவாக்க, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 2018-2019 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்று முதல் அறுபத்து ஆறு வரையிலான 4 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்று மற்றும் எழுபத்து நான்கு ஆகிய 2 அறிக்கைகள், அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பது முதல் ஐம்பத்து ஆறாவது வரையிலான 17 அறிக்கைகள், மனுக்கள் குழுவின் மூன்று முதல் ஆறு வரையிலான 4 அறிக்கைகள் மற்றும் பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை, ஆகியவற்றின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [2019 பிப்ரவரி 13

உறுப்பினர்களின் பார்வைக்காக, சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதென்பதையும், இவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதனையும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்று முதல் அறுபத்து ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய எழுபத்து மூன்று மற்றும் எழுபத்து நான்கு ஆகிய இரண்டு அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பில் தங்கள் அனுமதியோடு பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.



2019 பிப்ரவரி 13]

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பது முதல் ஐம்பத்து ஆறு வரையிலான 17 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு பேருவகையோடு அளிக்கிறேன்.

### (ஈ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு கொறடா திரு. சு. ராஜேந்திரன், மனுக்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

**திரு. சு. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்குவதாக விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, எனது அரியலூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்று முதல் ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (உ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-05

**திரு. ப. சத்திய நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி, உழவர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு, விவசாயிகள் மற்றும் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வழங்கியும், இந்தியாவே வியக்கின்ற அளவிற்கு தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுமூலம் புதிய ஒப்பந்தங்களை உருவாக்கி, 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்தும், பேரவை விதி 110-ன்கீழ், தமிழக வரலாற்றில் முதன்முறையாக

[திரு. ப. சத்திய நாராயணன்] [2019 பிப்ரவரி 13

வறுமைக்கோட்டிற்குக்கீழுள்ள, குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழைகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 60 இலட்சம் குடும்பங்களுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும் என அறிவித்த, (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையின் சிகரம், ஏழைப் பங்காளன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பண்பின் சிகரம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018-2019 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) ஓசூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2019 பிப்ரவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) நாகர்கோவில் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2019 பிப்ரவரி 13

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2019 பிப்ரவரி 13]

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (உ) தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

***திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவில், தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்களில் படித்து வெளியே வருகின்ற மாணவர்களுடைய பட்டம், பட்டயப் படிப்புகளுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் சட்டப் பாதுகாப்பு இல்லாத காரணத்தால், அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய எதிர்ப்பை நான் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2019 பிப்ரவரி 13]

பிற்பகல் 12-10

## (ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2019 பிப்ரவரி 13

## 8. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தினை தொடங்கி வைப்பவர் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையினைப் பொறுத்தமட்டில், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது பற்றாக்குறை பட்ஜெட், ஆண்டுக்காண்டு பற்றாக்குறை அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நான் இந்தப் புத்தகத்தினை முழுமையாகப் படித்துவிட்டேன். இதில் இருக்கக்கூடிய புள்ளிவிவரங்களை நான் நன்கு அறிந்திருக்கிறேன். இதை வைத்துப் பார்க்கும்போது. . .

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

இந்தப் பட்ஜெட்டை எப்படித் தயார் செய்கிறார்கள் என்று எனக்கு ஒரு கேள்வி தோன்றியது. ஆண்டுக்காண்டு நீங்கள் இந்த துண்டு பட்ஜெட்டை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நிதியைப் பொறுத்தமட்டில் பற்றாக்குறை. அதை அதிகப்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? அதை ஏன் நீங்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்லவில்லை என்பது என்னுடைய கேள்வி. நிதிநிலைமையை நாம் பலப்படுத்துவதற்கு பல வழிகள் இருக்கின்றன. அந்த வழிகளை ஏன் நீங்கள் நாடவில்லை என்பது என்னுடைய கேள்வி. இதுபோன்று நாம் செய்துகொண்டிருந்தால் (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். இதுபோன்ற ஒரு நிதிநிலை அறிக்கையை நாம் தொடர்ந்து அளித்துக்கொண்டிருந்தோம் என்றால், தமிழகத்தினுடைய நிதிநிலைமை மிக மிக மோசமான நிலைமைக்குத் தள்ளப்படும். பொதுவாக கிராமங்களில் பேசுவார்கள், ஒரு தந்தை ஒரு மகனுக்கு செய்ய வேண்டியது என்னவென்றால், அவனுடைய பிற்காலத்தில் மகனை கடன்காரனாக ஆக்காமல் இருக்க வேண்டும் என்று. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையினைப் பார்க்கும்போது தமிழக மக்களை கடன்காரர்களாக நீங்கள் ஆக்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்று. . . (மணியடிக்கப்பெற்றது)



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அவர்கள் பொதுவான கருத்தையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏதேனும் ஒரு கருத்தைப் பற்றி, புள்ளிவிவரங்களைப் பற்றிச் சொன்னால் அதற்கான விவரங்கள் தரப்படும். பொதுவாக பற்றாக்குறை பட்ஜெட் எதனால் வருகின்றது என்று நான் பலமுறை இந்த அவையில் விளக்கியிருக்கிறேன். மாநிலத்தின் சொந்த வருவாய், மத்திய அரசின் நிதிப் பகிர்வு, மத்திய அரசினுடைய மானியம் இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்துதான் இங்கே நிதியாகக் குவிக்கப்படுகின்றது. அதுவும் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், மத்திய அரசு, GST-யிலிருந்து வரக்கூடியதில் பெரும்பகுதியை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். நமக்கு இருப்பது இரண்டே இரண்டுதான். ஒன்று கலால் வரி. இரண்டாவது Petrol மற்றும் Diesel மீதான வரி. பாக்கி அனைத்தையும் அங்கே கொண்டுசென்றுவிட்டனர். வரி போட முடியாது. வரி போட்டால் இவ்வளவு வரி போட்டிருக்கிறீர்கள், இவ்வளவு வரி போட்டிருக்கிறீர்கள் என்று சொல்வீர்கள்.

*பிற்பகல் 12-15*

பல வழிகள் இருக்கின்றன என்று சொன்னீர்கள் இல்லையா, பல வழிகள் என்பது வரி போடுவதுதான். மீதி அனைத்தும் மத்திய அரசிடமிருந்து வரும் மானியம். மத்திய அரசால் பல்வேறு மாநிலங்களுக்கு அளிக்கப்படுகின்ற நிதிப் பகிர்வு. அந்த நிதிப் பகிர்வு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, 9-வது நிதிக் குழுவிலிருந்து இப்பொழுது முடிந்திருக்கிற 14-வது நிதிக் குழு வரை, இனி வரப்போகிற 15-வது நிதிக் குழு வரை தொடர்ந்து நமக்கு குறைக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. நாம் எதிர்பார்ப்பது ஒன்று, அவர்கள் தருவது ஒன்று. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படுகிறதே தவிர, நிதி மேலாண்மையை முழுமையாக நாம் கடைப்பிடித்து வருகிறோம். சென்ற வருடம் நம்முடைய திருத்த மதிப்பீட்டில் கிட்டத்தட்ட 21 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறை வருமென்று கணித்திருந்தோம். ஆனால், இப்பொழுது அது குறைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற வருடம் 19 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னேன்; இந்த வருடம் 21 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்குமென்று கணித்திருந்தோம்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] *[2019 பிப்ரவரி 13*

*இப்பொழுது 16 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்குமென்று கணித்து, குறைத்திருக்கிறோம். வருவாய்ப் பற்றாக்குறை கூடவில்லை என்பதை மாண்புமிகு அண்ணன் திரு. கரி. இராமசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். புள்ளிவிவரங்களின்படி வருவாய்ப் பற்றாக்குறை இவ்வளவு தொகை இருந்தது, நாங்கள் தந்துள்ள விவரங்கள் தவறு என்று நீங்கள் சொன்னீர்களென்றால், அதில் ஏன் வருவாய்ப் பற்றாக்குறை இருந்தது என்று நாங்கள் பதில் சொல்லலாம். நிதிப் பற்றாக்குறை பற்றிச் சொன்னீர்களென்றால், கடன் அளவு பற்றிச் சொன்னீர்களென்றால் அதற்குரிய விளக்கம் தரப்படும். காரைக்குடியில் பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல் பேசிக் கொண்டிருந்தீர்களென்றால், இதற்கு நாங்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும்?*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது, 'பொதுக் கூட்டத்தில் பேசுவது போன்று பேசுகிறீர்கள்' என்று சொன்னார்கள். இல்லை, அது அல்ல. . .*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மற்ற பிரச்சினைகளிலே நீங்கள் பொதுவாகப் பேசினால் ஒன்றும் பிரச்சினையில்லை. நிதிநிலை அறிக்கையில் புள்ளிவிவரங்களைச் சொல்ல வேண்டும். புள்ளிவிவரங்களில் ஏதாவது ஏற்ற, இறக்கங்கள், தவறுகள், அரசின் சார்பான தவறுகள் நடந்திருக்கின்றன என்று நீங்கள் சொன்னால், அதற்குரிய விளக்கங்களை நாங்கள் முழுமையாகத் தருவதற்குக் காத்திருக்கிறோம்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களிடமிருந்து எந்தப் பதிலை எதிர்பார்க்க வேண்டுமோ, அந்தப் பதிலை இப்பொழுது நான் பெற்றிருக்கிறேன். என்னவென்றால், மத்திய அரசு தமிழக அரசுக்குத் தர வேண்டிய தொகையை முழுமையாகத் தரவில்லை என்பதை நீங்கள் இப்பொழுது சொல்லியிருக்கிறீர்கள்.*



*2019 பிப்ரவரி 13]*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணன் இப்பொழுது ஒரு நல்ல கேள்வியைக் கேட்டார்கள். இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருப்பது பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி. அதற்கு முன்பு யார் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது? காங்கிரஸ் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுதிலிருந்து குறைக்கப்பட்ட அளவுதான் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது காங்கிரஸ் கட்சியிலிருந்து நீங்கள் எல்லோரும் அங்கு சென்று ஏதாவது ஒரு வார்த்தையாவது சொன்னீர்களா? நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான் அங்கு நிதி அமைச்சராக இருந்தார். ஒரு பிரயோஜனமும் இல்லையே. (குறுக்கீடு)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *இப்பொழுது இந்த ஆண்டு பட்ஜெட். . .*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் நிதி அமைச்சர் அவர்கள், அண்ணன் திரு. இராமசாமி அவர்களுக்கு ரொம்ப, ரொம்ப வேண்டியவர். நீங்கள் சொன்னால்தான் அவர் கேட்பார். வேறு எதையும் கேட்கமாட்டார்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நீங்கள் தாக்கல் செய்திருக்கிறீர்கள். இதைப்பற்றிப் பேசுகிறோம். நீங்கள் இன்னும் 10 ஆண்டுகளுக்கு முன்னால் போகிறீர்களே! இப்பொழுது என்ன நடைமுறை? நீங்கள் இப்போதைய விவகாரத்திற்கு வாருங்கள். இதை விட்டுவிட்டு 10 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ளதை நீங்கள் பேசுகிறீர்கள். நீங்களே பட்ஜெட் புத்தகத்தில், 'மத்திய அரசு, நிதிகளை நமக்கு ஒழுங்காகத் தரவில்லை' என்று*

*சொல்லியிருக்கிறீர்கள். அவர்களை வற்புறுத்தி அந்த நிதியை ஏன் பெறவில்லை? என்ன காரணம்? வேண்டுமென்றால் அதற்கு எங்களையும் உறுதுணையாகச் சேர்த்துக்கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்காக நாங்களும் போராட வருகிறோம். ஆனால் அதற்கு நீங்கள் தயாராக இல்லை. நீங்கள் வேறொன்றை மனதில் வைத்து. . .*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 9-வது நிதிக் குழுவில் 9 சதவிகிதம் நம்முடைய நிதிப் பகிர்வு இருந்தது. அது இந்த 10 ஆண்டுகளில் படிப்படியாக 4 சதவிகிதமாக ஆகிவிட்டது. இது மிகப் பெரிய இழப்பு. ஜனத்தொகையின் அடிப்படையில், வளர்ந்த மாநிலங்கள் என்ற கருத்தை அவர்கள் வைத்துக்கொண்டதால், நமக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டு வருகிறது. இந்த அநீதி நீக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களும், அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களும் நேரில் சந்திக்கும்போது தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். கடிதம் வாயிலாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறோம். அதைத்தான் நாம் செய்ய முடியும். கத்தி எடுத்துக்கொண்டு போய் சண்டை போட முடியாது.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

*பிற்பகல் 12-20*

**திரு. கரி. இராமசாமி:** *நீங்கள் கத்தியை எடுத்து சண்டை போடுங்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் இப்போது என்ன நிலைமையிலே இருக்கிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் நிலைமையிலிருந்து நீங்கள் விடுபட முடியாது. விடுபட முடியாத சூழ்நிலையில் நீங்கள் மாட்டிக்கொண்டீர்கள். அதனால், நீங்கள் இப்படித்தான் இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தைச்*





*சேர்ந்தவர்தான் மத்திய நிதி அமைச்சராக இருந்தார். அவருக்கே கொடுக்க மனம் இல்லையென்றால் மற்றவர்களிடம் நாம் எப்படி வாதாடிப் பெற முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் எப்போதுமே சிக்கிக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எது தேவையோ, அதைக் கேட்டுப் பெறுவோம். இப்பொழுதுகூட, எங்களுக்கு வர வேண்டியதை தைரியமாக இடம்பெறச் செய்திருக்கின்றோம். ஆகவே, தமிழ்நாட்டுக்கு எதில் நன்மை கிடைக்குமோ, அதை நிச்சயம், எங்கேயும், எப்பொழுதும், எந்த இடத்திலும் கேட்டுப் பெறுகின்ற துணிச்சலான கட்சியும், ஆட்சியும்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *இன்னும் ஐந்து மாதங்களுக்குப் பிறகு, யாரை நீங்கள் முன்னாள் நிதி அமைச்சராக இருந்தவர் என்று சொல்கிறீர்களோ, அவரே மீண்டும் நிதி அமைச்சராக வரப்போகிறார். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடம் சொன்னால், நான் அவரிடம் சொல்லி அந்த நிதியைப் பெற்றுத் தருகிறேன். அரசு செய்ய வேண்டிய வேலையை என்னை ஏன் செய்யச் சொல்கிறீர்கள்? அதுதான் எனக்குப் புரியவில்லை.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது நாங்கள் சிக்கிக் கொண்டோம் என்று சொன்னார்கள். அதற்கு நான் ஓர் உதாரணத்தை மட்டும் சொல்கின்றேன். யார், யாரிடம் சிக்கிக் கொண்டார்கள், யார், யாரையெல்லாம் மிரட்டி கூட்டணி வைத்தீர்கள் என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்கின்றேன். தி.மு.க.-வின் முன்னாள் தலைவர் அவர்கள் அக்கட்சியின் தலைவராக இருந்தபோது, கலைஞர் டி.வி. அலுவலகத்தில் கூட்டணி பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள். மேலே CBI raid நடந்தது. யார், யாரை மிரட்டியது? இன்னொன்று,*

[திரு. பி. தங்கமணி] [2019 பிப்ரவரி 13

காங்கிரசுடனான கூட்டணியிலிருந்து அவர்கள் விலகினார்கள். விலகிய அடுத்த நாளே, இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவருடைய வீட்டில் raid செய்தீர்களே! அப்போது யார், யாரை மிரட்டினார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு என்ன காரணம் என்று சொல்லுங்கள், யார், யாரை மிரட்டியது? யார் காரணம்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாங்கள் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை; தமிழகத்தின் உரிமையைக் கேட்டுப் பெறுகிறோம் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் அந்தப் பழக்கத்தை வைத்திருக்கின்றீர்கள் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவரை, முன்னாள் முதலமைச்சர் திரு. கலைஞர் கருணாநிதி அவர்கள்கூட "கூடா நட்பு கேடில் முடியும்" என்று யாரைப் பார்த்துச் சொன்னார்? உங்களைப் பார்த்துத்தான் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், raid நடத்திய கதையைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவரும் கொஞ்சம் திரும்பிப் பார்க்க வேண்டும். 'குட்கா' சம்பந்தமாக யார் வீட்டில் raid நடந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) 89 கோடி ரூபாய் ஆர்.கே. நகர் தேர்தல் என்ற முறையில் யார் வீட்டில் raid நடந்தது? ஏன், இதே தலைமைச் செயலகத்தில் raid நடக்கவில்லையா? ஆக, அதெல்லாம் மிரட்டுவதற்காக நடந்ததா? முதலமைச்சர் அவர்களின் அறைக்குப் பக்கத்து அறையில் இருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் அலுவலகத்திலேயும் நடந்ததே! இதைவிட வெட்கக்கேடு வேண்டுமா? ஆக, அவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, இதையெல்லாம் எடுத்துப் பேச வேண்டிய அவசியமில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அன்றைக்கு இருந்த சுயாட்சியிலே நீங்கள் பேசுகிறீர்கள். ஆனால், வெண்ணெய் ஒரு கண்ணிலும், சுண்ணாம்பு ஒரு கண்ணிலும் வைத்துப் பேசக் கூடாது. தலைமைச் செயலகத்திற்குள் CBI வரும்போது அதற்காக வாய்கூடக் திறக்காதவர் நீங்கள். ஆனால், மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி அதை எதிர்க்கும்போது அதற்கு மட்டும் நீங்கள் வாய்திறந்தது எந்த விதத்தில் நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திற்கு வந்து வருமான வரித் துறை சோதனை செய்த நேரத்தில், raid நடந்த நேரத்தில், அதை முதன்முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான்தான் கண்டித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் கண்டித்திருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு நிதியானாலும் வாங்கித் தருகிறோம், நாங்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று சொன்னார்கள். நீங்கள் ஆட்சிக்கு வருகிறீர்களா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். அது வேறு விஷயம். ஆனால், காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும்போது VAT-ல் 5,000 கோடி ரூபாய் வர வேண்டியது இன்னும் வரவில்லை. அது என்னவாயிற்று? ஆட்சியில் இருக்கும்போதே நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆட்சியில் இல்லாதபோது நீங்கள் பறக்கிறீர்கள்.

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

பிற்பகல் 12-25

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் VAT வரியிலிருந்து வரவேண்டிய நிதியைப் பெற்றுத் தாருங்கள் என்று சொல்கிறார்கள். நிதியைப் பெற்றுவரவேண்டிய பொறுப்பிலே நீங்கள் இருக்கிறீர்கள், நாங்கள் அல்ல. அரசினுடைய பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. நீங்கள் ஏன் கேட்கவில்லை? ஏன் அணுகவில்லை? அணுகாமல் இருந்துகொண்டு, காங்கிரஸ் ஆட்சி நடந்து எவ்வளவு நாளாகியிருக்கிறது, இப்பொழுது காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன பதில் சொல்வது?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குத் தேவையான நிதி, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்படவேண்டுமென்றால், அதை ஒரு அரசாங்கத்திடமிருந்து இன்னொரு அரசாங்கம் கேட்பதற்கு நடைமுறைகள் இருக்கின்றன. அந்த நடைமுறைகளின்படி பல்வேறு கடிதங்கள் மூலமாகவும், அமைச்சர்கள் மூலமாக நேரடியாகவும் சென்று மத்திய அரசாங்கத்திடம் பலமுறை கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் ஒவ்வொரு வருடமும் அரசாங்கம் என்ற முறையில் தெரிவிக்கிறோம். ரோட்டுச் சண்டைபோல் சண்டை போட்டுக்கொண்டிருக்க முடியாது. மத்தியில் முன்பிருந்த காங்கிரஸ் அரசிடமும் கேட்டிருக்கிறோம். தற்போது மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற பி.ஜே.பி. அரசாங்கத்திடமும் கேட்கவேண்டிய முறையில் சட்டரீதியான முறையில் அனைத்தையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, வேறு subject-க்குப் போங்கள்.



2019 பிப்ரவரி 13]

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேறு subject-க்குப் போகிறேன். நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான், நான் இல்லையென்று சொல்லவில்லை. நீங்கள் தெருவிலே நின்று அடித்துக்கொள்ளப் போவதில்லை. அது எனக்கு நன்றாகத் தெரியும். இன்னும் ஒரு மாதத்திற்குப் பிறகு உங்களுடைய நிலை என்ன என்பதை நாம் இங்கே பேசித் தெரிந்துகொள்வோம். (குறுக்கீடு) அந்த subject-ஐ விட்டுவிடுங்கள். வேறு subject-க்குப் போய்விடுவோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆட்சி அதிகாரத்திற்காக மட்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படவில்லை. நாங்கள் ஆளுங்கட்சியாகவும் இருந்திருக்கின்றோம், எதிர்க்கட்சியாகவும் இருந்திருக்கின்றோம். எதையும் சந்திப்பதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும். இந்திய நாட்டினுடைய பொறுப்பை கூடியவிரைவிலே காங்கிரஸ் கட்சி வகிக்கப்போகிறது. அப்பொழுது யார், யாரைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். இப்பொழுது அவசரப்பட வேண்டாம். இப்பொழுது அவசரமே வேண்டாம். அந்த subject வேண்டாம். இப்பொழுது வேறு subject-க்கு வந்துவிடுகிறேன். நான் வருவாய்க்கு வழி சொல்கிறேன் என்று உங்களிடம் சொன்னேன். இப்பொழுது சொல்கிறேன், இந்த அரசைப் பொறுத்தமட்டில் ஆற்று மணல் அள்ளுவதிலே இந்த அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது? எவ்வாறு நீங்கள் மணல் அள்ளுகிறீர்கள்? யார் மணல் அள்ளுகிறார்கள், அதனால் அரசுக்கு என்ன வருமானம் கிடைக்கிறது, ஒன்றுமே தெரியவில்லை. ஆற்று மணல் எங்கிருந்து எங்கு செல்கிறது? நீங்கள் இருந்த முறையை மாற்றுவதாகச் சொன்னீர்கள், அதனால் என்ன வருமானம் வந்திருக்கிறது? யாரோ அந்த இலாபத்தை அடைகிறார்கள் என்று நான் குற்றம்சாட்டுகிறேன். நான் சொல்வது. . .

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் பேசும்போது மத்திய அரசிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிதியை நீங்கள் கேட்கவில்லை, நீங்கள் கேட்கவில்லை, ஏன் வற்புறுத்தவில்லை என்று தொடர்ந்து அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார். நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். 2007-2009 ஆம் ஆண்டுகளில் ஒரு மிகப் பெரிய வெள்ளம் ஏற்பட்டது. அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சியில் இருந்தது. அப்பொழுது வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 342 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்க வேண்டும். இந்தத் தொகையை மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி, குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்தவர்தான் மத்தியில் நிதியமைச்சராக இருந்தார். ஆனால் நிதி வழங்கவில்லை. மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையை வழங்கலாம் என்று நிதித் துறைக்கு பரிந்துரை அனுப்பியும் நிதி வழங்கவில்லை. இதுதான் காங்கிரஸ் ஆட்சியில் இருந்துவருகிற வாடிக்கை, வழக்கம். இப்பொழுது அண்ணன் பேசுகிறார். கொஞ்சம் பின்னால் திரும்பிப் பாருங்கள். நீங்கள் ஏதோ சிக்கிக்கொண்டீர்கள், சிக்கிக்கொண்டீர்கள், சிக்கிக்கொண்டீர்கள் என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் ஒன்றும் சிக்கவில்லை. பின்னால் திரும்பிப் பார்த்தால், 1967 ஆம் ஆண்டு உங்களுக்கு ஏற்பட்ட சிக்கலை இன்னும் உங்களால் தீர்க்க முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 1967 ஆம் ஆண்டு அண்ணா போட்ட அடியால் இன்னும் எழுந்திருக்க முடியாத அளவிற்கு வீழ்ந்து கிடக்கிறீர்கள். அதற்குரிய காரணத்தை நீங்கள் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

*பிற்பகல் 12-30*

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இப்போது மணலைப் பற்றிப் பேசினால், அவர்கள் எங்கேயோ போகிறார்கள். அவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டுமெனக் கேட்கிறேன். ஆற்று மணல் அள்ளுவதை. . .



2019 பிப்ரவரி 13]

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசினால் அதற்குரிய விளக்கம் அதுவாகவே, தானாகவே உரிய முறையில் வந்து சேரும். ஆனால், அவர்கள் அரசியல் காரணங்களுக்காக, political damage செய்வதாக நினைத்துக்கொண்டு ஏதாவது பேசினால் அதற்குரிய பதிலும் வந்து சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நான் ஏற்கெனவே இதே அவையில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இப்போது மணலை மக்களுக்கு விநியோகம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசுதான் எடுத்து வருகிறது. தனியார் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் சில நேரங்களில் தடையாணை பெற்றுவிடுகிறார்கள். அதனால், தமிழகத்தின் ஆற்றுப் படுகைகளிலிருந்து மணல் அள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்வதற்கு டெண்டர் விடப்பட்டு, அந்தப் பணி நிறைவுபெற்று, தற்போது வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்யப்பட்டு, சென்னையிலே பொதுமக்களுக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைச் சுட்டிக் காட்டுகிறார்கள் என்று ஒன்றும் புரியவில்லை. தற்போது பொதுமக்களுக்குத் தேவையான மணலை அரசுதான் விநியோகம் செய்து வருகிறது. ஆனால், போதுமான அளவிற்கு மணல் குவாரிகளை அமைக்க முடியவில்லை. ஏனென்றால், பல பேர் பொது நல வழக்கு தாக்கல் செய்து, நீதிமன்றத்தில் தடையாணை பெற்றுவிடுகிறார்கள். அதனால் முழுமையாக மணலைக் கொடுக்க முடியவில்லை. இருந்தாலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து, மணல் தேவைப்படுபவர்களுக்கு முடிந்தளவிற்கு அரசால்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

மணல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மணல் கடத்தலில் ஈடுபடுபவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களது வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், வாகனங்களில் மணல் கடத்துபவர்கள்மீது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில், நீதிமன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. அதன்மூலமும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் பொத்தாம்பொதுவாகச் சொல்லக் கூடாது. எந்த இடத்தில் இத்தகைய பிரச்சினை நடைபெறுகிறது என்று சுட்டிக்காட்டினால், அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிவகங்கை மாவட்டத்தில் ஒரு load மணலினுடைய விலை சுமார் 30 ஆயிரம் ரூபாயிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. எந்தவொரு தவறான செய்தியையும் அவைக்கு நான் தரவில்லை. அதேநேரம், அரசு விற்கக்கூடிய மணலினுடைய விலை ரூ.1,200/-, ரூ.1,300/- என நான் எண்ணுகிறேன். ஆனால், ஒரு load மணல் 30 ஆயிரம் ரூபாயிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் வரை இன்றைக்கு விற்கப்படுகிறது. கட்டடங்கள் கட்ட முடியவில்லை. அதிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் வேலை செய்ய முடியவில்லை. நான் சிறிதளவுகூட உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லவில்லை. இதிலே அரசியல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனும் நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் விற்பனையில் எந்தப் பிரச்சினையும் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் அரசே இப்போது மணலை எடுத்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், நீதிமன்றத்தில்



2019 பிப்ரவரி 13] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

சில பொது நல வழக்குகள் தொடரப்படுகின்ற காரணத்தினால், நீதிமன்றம் மணல் அள்ளுவதற்கு தடை விதித்திருக்கிறது. இதற்கு அரசு என்ன செய்ய முடியும்? புதிய புதிய குவாரிகளைத் திறப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆனால், குவாரிகள் திறக்கப்பட்டவுடன், உடனடியாக நீதிமன்றத்திற்குச் சென்று, தடையாணை பெற்றுவிடுகிறார்கள். அதனால்தான், தற்போது மணல் விலை உயர்ந்திருக்கிறதேயொழிய, அரசினால் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசைப் பொறுத்தமட்டில், எங்கெங்கெல்லாம் மணல் குவாரிகளை அமைக்க வேண்டுமோ, அவ்விடங்களைப் பார்வையிட்டு, அதிகாரிகள் மூலமாக அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், பொது நல வழக்குகள் மூலமாக நீதிமன்றத்தில் தடையாணை பெறுகின்ற காரணத்தினால் முழுமையாக மணல் வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மாற்றாக, இன்றைக்கு M-sand உற்பத்தியை ஊக்கப்படுத்தி, கட்டடம் கட்டுபவர்கள், தேவையான அளவு M-sand மூலமாகக் கட்டடங்கள் கட்டுவதை பூர்த்தி செய்வதற்குண்டான நடவடிக்கையையும் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணல் பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று எண்ணினேன். அதன் முழு விவரத்தையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டேன். இதற்குப் பிறகு, மக்களுக்கு மணல் எளிதாகக் கிடைப்பதற்கு என்ன வழியோ அதைச் செய்து தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு தெளிவுபடுத்திவிட்டது. படிப்படியாக மணலின் தேவையைக் குறைத்து, M-sand-ஐப் பயன்படுத்தி கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று அரசால் அறிவிக்கப்பட்டுவிட்டது. படிப்படியாக

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

மணலினுடைய தேவையைக் குறைகின்ற சூழ்நிலையில் அரசு ஈடுபட்டிருக்கின்றது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், ஓடையில் இருக்கின்ற மணலையோ அல்லது ஆற்றில் இருக்கின்ற மணலையோ எடுக்கின்றபொழுது அங்கே நீராதாரம் குறைகின்றது. ஆக, இதையெல்லாம் கருத்திலேகொண்டுதான் அரசு மணல் அள்ளுவதை படிப்படியாகக் குறைத்து M-sand-ஐப் பயன்படுத்த வேண்டுமென்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகிறது. அதற்கு ஆதரவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செயல்படுவார்கள் என்று கருதுகின்றேன்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, உள்ளாட்சித் தேர்தல். உள்ளாட்சித் தேர்தல் தமிழ்நாட்டில் நடக்குமா, நடக்காதா என்று ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. உள்ளாட்சி என்பது நம்முடைய தமிழ்நாட்டிற்கு மிக மிக முக்கியமான ஒன்று. உள்ளாட்சிப் பிரதிநிதிகளே இல்லை, நீங்கள் எப்படி வேலை செய்யப்போகிறீர்கள் என்பது புரியவில்லை. உள்ளாட்சித் தேர்தலை நீங்கள் ஏன் நடத்தவில்லை? இதிலேயும், நான் அடுத்த வார்த்தை சொல்லப்போகிறேன்; அதையும் அரசியல் என்று சொல்வீர்கள், இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் தேர்தலைக் கண்டு அஞ்சுகிறீர்கள். தேர்தலிலே தோல்வி அடைந்துவிடுவீர்கள் என்ற காரணத்தால் நீங்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், பல தடவை இந்தப் பிரச்சினை பற்றி பேசிவிட்டார். இருந்தாலும் இதுபற்றித் திரும்பவும் பேசியிருக்கிறார். இந்த உள்ளாட்சித் தேர்தல் எதனால் நின்றது



2019 பிப்ரவரி 13] [திரு. எஸ்.பி. வேலுமணி]

என்று திரும்பவும் அதற்குள் போனால் நிறைய நேரமாகும். ஏன் நின்றது என்பது மக்களுக்கும் தெரியும், எல்லோருக்கும் தெரியும். அதாவது, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, வாக்கு எண்ணிக்கை தேதி அறிவிக்கப்பட்டு, எல்லாம் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் நின்றது என்று எல்லோருக்கும் தெரியும், சரி, அது ஒன்று. அது எதனால் வந்தது என்று நீங்களே முடிவு செய்யுங்கள். அதற்குப் பிறகு யார் நீதிமன்றத்திற்குப் போனார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அதற்குப் பின்னால் வார்டு வரையறை செய்வது குறித்த கோரிக்கை நீண்டகாலமாக இருந்து கொண்டிருந்தது. அது தி.மு.க. ஆட்சியிலும் சரி, அதற்கு முன்னால் இருந்த அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் சரி, அது செய்யப்படவில்லை. கடைசி நேரத்தில் அறிவித்ததால் அதை செய்யமுடியவில்லை. இந்த முறை வார்டு வரையறை இப்பொழுது முழுமையாக முடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது Communal rotation-ம் முடிந்தது. இப்போது நீதிமன்றத்தில் submit செய்திருக்கிறோம். எப்போது தேர்தல் நடத்துவோம் என்பதையும் நீதிமன்றத்தில் submit செய்திருக்கிறோம். கண்டிப்பாக தேர்தல் நடக்கும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக வெற்றி பெறும். அதில் எந்த மாற்றமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலத்திலேயும்—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் O.P.S. அவர்களும் தெளிவாக இருக்கிறார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தெளிவாக இருக்கிறார்கள், எப்போது தேர்தல் வைத்தாலும் நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அவரே, தொடர்ந்து அது விவாதப் பொருளாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, அதையே தொடர்ந்து அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் முறையாக வரன்முறைப்படுத்தப்படவில்லை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2019 பிப்ரவரி 13

என்று சொல்கிறார். அது தவறான தகவல். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வரன்முறைப்படுத்தப்பட்டுதான் உள்ளாட்சித் தேர்தல் முறையாக நடத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அதை வரன்முறைப்படுத்தி வார்டு வாரியாக, அதேபோல் மலைவாழ் சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மக்களுக்கு இட ஒதுக்கீடு, இதெல்லாம் முறையாகச் செய்யாமல் நீங்கள் உள்ளாட்சித் தேர்தலுக்கான தேதியை அறிவித்தீர்கள். ஆக, முறையாக முறைப்படுத்தப்பட்டு அந்த நிலையிலே தேர்தல் நடத்த வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்கள் கட்சியினுடைய நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். தேர்தலை நிறுத்த வேண்டும் என்பதற்கு அல்ல. தேர்தலை முறையாக நடத்த வேண்டுமென்றுதான் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அதற்குப் பிறகு தேதியை நிர்ணயித்து, இந்த மாதத்திற்குள், இந்தத் தேதிக்குள் நீங்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றம் பல முறை எச்சரிக்கை விடுத்திருக்கிறது. வாரண்ட் கூட அனுப்பியிருக்கிறது. ஆக, இதெல்லாம் நடந்தது உங்கள் ஆட்சியில். நீங்கள்தான் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு முன்வரவில்லை என்பது உண்மை. இது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும், தேர்தல் நடத்த வேண்டுமென்று நீதிமன்றத்திற்குப் போனதற்குப் பிறகு, தற்பொழுது மலைவாழ் மக்களுக்குரிய இட ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அதற்குப் பிறகு வந்த judgement-ல் அதைச் சரியாகச் செய்திருக்கிறோம் என்று நீதிமன்றத்திலேயே தீர்ப்பு வந்துவிட்டது. அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு நீங்கள்தான் போனீர்கள். இப்போது வார்டு வரையறையை நாம் இரண்டு ஆட்சிக் காலத்திலும் செய்யவில்லை. அது உங்களுக்குத் தெரியும். இப்போதுதான் வார்டு வரையறையை நாம் எடுத்திருக்கிறோம். அது ஒரு மிகப் பெரிய வேலை என்று தெரியும். முழுமையாக



2019 பிப்ரவரி 13] [திரு. எஸ்.பி. வேலுமணி]

அந்தப் பணி முடிவடைந்து, அடுத்தது, Communal Rotation-க்குப் போயிருக்கிறோம். கிட்டத்தட்ட நகர்ப்புறம் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் 1,19,270 வார்டுகளில் எல்லை மறுவரையறையை முன்பு செய்யவில்லை. இப்போது நாம் செய்திருக்கிறோம். 1,19,270 வார்டுகளுக்கு மறுவரையறை என்பது ஒரு மிகப் பெரிய process. அந்தப் பணியை இப்போது நாம் செய்து முடித்திருக்கிறோம். சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதுவும் தெரியும். ஆகவே, 14-12-2018 அன்று இறுதி அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதன்படி, 22 ஆண்டுகளுக்குப்பின், இந்த எல்லை மறுவரையறை பணி நடைபெற்றிருக்கிறது. அதற்கு முன்பு நடைபெறவில்லை. இதற்கு, மறுவரையறை செய்த வார்டின் அடிப்படையில் மகளிர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்பின்னர், வார்டுவாரியான உள்ளாட்சித் தேர்தல் வாக்காளர் பட்டியலை, சட்டமன்றத் தேர்தல் வாக்காளர் பட்டியலுடன், ஒப்பிட்டு சரிபார்த்து, புதிய வாக்குச் சாவடிகளை ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பின்னர், மாநில தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை துவங்கும். 7-1-2019-ல் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளுக்குரிய இட ஒதுக்கீடு, வாக்காளர் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளை முடித்து மே 2019 இறுதிக்குள் அறிக்கை வெளியிடுவதாக மாநில தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தில் அறிவித்திருக்கிறது. ஆகவே, அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், இதுபோன்ற வார்டு வரையறைகளை 22 ஆண்டுகளுக்குப் பிறகு செய்திருக்கிறோம். ஆகவே, இப்போது சரியாகப் போகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அம்மாவுடைய அரசு கண்டிப்பாக தேர்தலை நடத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வார்டு மறுவரையறை செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். இவ்வளவு விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதுகூட, எந்தத்

தேதிக்குள்ளே இந்தத் தேர்தலை நடத்துவீர்கள் என்று நீங்கள் சொல்லவில்லை. இப்போது நாம் பதவிக்கு வந்து 3 ஆண்டுகளை முடித்துவிட்டோம். இன்னும் 2 ஆண்டுகள்தான் இருக்கின்றன. 2 ஆண்டுகளுக்குள்ளேயாவது நீங்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, திருவாரூர் தேர்தல். திருவாரூர் தேர்தல் ஏன் தள்ளிச் சென்றது? (குறுக்கீடு) நான் பேசுகிறேன். என்னைப் பேச விடுங்கள். நம்முடைய தலைமைச் செயலாளர் தேர்தல் கமிஷனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார், மழை பெய்யப் போகிறது, தேர்தலைத் தள்ளி வையுங்கள் என்று. இங்கு உள்ளாட்சித் தேர்தல் தள்ளிப்போகிறது, சட்டமன்றத் தேர்தல் தள்ளிப் போகிறது. இப்போது நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலையும் தள்ளி வைக்க முடியாது. அதனால்தான் நாடாளுமன்றத் தேர்தல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர், தேர்தல் தள்ளிப் போனதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார். மழைக்காலங்களிலே ஏற்படுகின்ற பிரச்சினை குறித்துதான் இங்கே சுட்டிக்காட்டப்பட்டது. தேர்தல் அறிவித்த நேரத்தில் எல்லாக் கட்சிகளாலும் தேர்தலை தள்ளி வைக்க வேண்டுமென்று கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் புயலால் பாதிக்கப்படும்போது, புயல் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றெல்லாம் எழுதிக் கொடுத்திருக்கின்றார்கள். அதனால், தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக, இதையெல்லாம் ஏற்கெனவே, புயல் வருமென்று மத்திய அரசின் இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் அதைத் தலைமைச் செயலாளர் அவர்கள் தேர்தல் கமிஷனுக்குத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் தேர்தல் நிறுத்தப்பட்டது. அது உண்மை என்று நிரூபணமாகிவிட்டது. ஆகவே, புயல் வந்து, கடுமையாகப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டார்கள். அப்போது மீண்டும் தேர்தல்





அறிவிக்கின்றபோது, தேர்தல் ஆணையத்திற்கு அனைத்துக் கட்சிகளாலும் தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கடிதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*பிற்பகல் 12-45*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிகளும் என்று, திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்த்து சொல்லியிருக்கிறார். தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டுமென்று நாங்கள் எந்த நிலையிலும் கோரிக்கை வைக்கவில்லை. தேர்தலை தனியாக இதற்கு மட்டும் வைக்க வேண்டிய அவசியம் என்ன? ஏற்கெனவே திருப்பரங்குன்றம் தொகுதி காலியாக இருக்கிறது; ஏற்கெனவே 18 சட்டமன்றத் தொகுதிகள் காலியாக இருக்கின்றன. ஆக, அதோடு சேர்த்து வைக்க வேண்டிய நிலையில், இதைத் தனியாக வைக்க வேண்டிய அவசியம் என்ன? அதை யோசிக்க வேண்டுமென்றுதான் நாங்கள் கோரிக்கை வைத்தோமே தவிர, தள்ளி வைக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவாரூர் சட்டமன்றத் தொகுதியைக் குறிப்பிட்டுத்தான் சொன்னார்கள். திருவாரூர் சட்டமன்றத் தேர்தல் ஏன் தள்ளி வைக்கப்பட்டது என்று கேட்டார். அதற்கு நான் தெளிவுபடுத்தியிருக்கின்றேன். ஏன் நீங்கள் அஞ்சுகின்றீர்கள்? ஒரு தேர்தல் வந்தால் என்ன, எந்த தேர்தல் வந்தால் என்ன? நீங்கள்தான் வெற்றி பெறுவீர்கள் என்று சொல்கிறீர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அந்த ஒரு தேர்தல், திருவாரூர் சட்டமன்றத் தேர்தல் வருகின்றபோது, அதை ஏன் நீங்கள் தள்ளி வைக்க வேண்டும்? அது ஏன் என்பதைத்தான் கேட்கின்றேன். (குறுக்கீடுகள்) ஏன் அதில் என்ன இருக்கிறது? எந்தத் தேர்தல் வந்தாலும் நீங்கள் அதனைச் சந்திக்க வேண்டியதுதானே? (குறுக்கீடுகள்) ஏனென்றால், இந்த 18 சட்டமன்றத் தொகுதிகளுக்கான

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

தேர்தலைப் பொறுத்தவரைக்கும், வழக்கு இருக்கின்றது. இதில் அப்படியல்ல. உங்களுடைய தலைவர் மறைவின் காரணமாக இந்தத் தேர்தல் வரவிருக்கின்றது. ஆகவே, அதன் காரணமாக அவர் சுட்டிக்காட்டினார். திருவாரூர் சட்டமன்றத் தேர்தலை ஏன் தள்ளி வைத்தீர்கள் என்று அவர் கேள்வி கேட்டார். ஆகவே, அங்கே இருக்கின்ற பிரச்சினையையொட்டித்தான் அந்தத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் பதிலளிக்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 18 சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் நடத்தவில்லை என்று சொல்கிறார். இதில் வழக்கு இருக்கின்றது. இதில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால், தேர்தல் நடத்தவில்லை. நாங்கள் இதில் சொல்வதற்கு எதுவுமே இல்லை. தேர்தல் கமிஷன் தேர்தலை அறிவித்தால், நாங்கள் தேர்தலை சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* நாங்கள் தேர்தலை சந்திக்கவில்லை என்று ஒருபோதும் தெரிவிக்கவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றத்தில்கூட உங்கள் கட்சிக்காரர்தான் case போட்டு, நிறுத்தி வைத்திருக்கிறார். ஏன் அஞ்சுகிறீர்கள்? *(மேசையைத் தட்டும் ஒலி)* எந்தத் தேர்தல் வந்தாலும் வெற்றி பெறுவோம் என்று சொல்கிறீர்களே? ஆகவே, தேர்தலைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் மக்கள் பக்கம் இருக்கின்றது. எந்தக் காலத்தில் தேர்தல் வந்தாலும், எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும், நாங்கள் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* வெற்றியும் பெறுவோம் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.



2019 பிப்ரவரி 13]

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை இங்கே பதிவு செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். திருப்பரங்குன்றம் தொகுதியைப் பொறுத்தவரைக்கும், தேர்தல் நிறுத்தப்பட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிடவில்லை. Stay கொடுக்கவில்லை. வழக்கு இருக்கிறது என்பது உண்மை. ஆக, அது தவறான தகவல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு இருந்தாலே தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்துவதில்லை. நீங்கள் தேர்தல் ஆணையத்தைத்தான் கேட்க வேண்டும். அதற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. இதை மத்தியில் இருக்கின்ற தேர்தல் ஆணையம் முடிவெடுக்கின்றது. இது மாநில அரசு எடுக்கின்ற முடிவு அல்ல. அது உங்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, தேர்தல் எப்போது வந்தாலும், அதைச் சந்திப்பதற்கு எங்களுடைய தரப்பில் தயாராக இருக்கின்றோம் என்பதை மட்டும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப்போல, திருப்பரங்குன்றத்தில் தேர்தலை தள்ளி வைப்பதற்கு நாங்கள் வழக்கே போடவில்லை என்று ஒரு கோரிக்கை வைத்ததாகச் சொன்னார்கள். அது உண்மை. வழக்கு நிலுவையில் இருக்கின்றபோது, அந்த மனுதாரர் டாக்டர் சரவணன் அவர்கள் கூடுதலாக ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார். என்னவென்றால், 'நான் வெற்றி பெறுகின்றபட்சத்திலே, என்னை அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளராக அறிவிக்க வேண்டும்' என்று அவர் சொன்னதால், விசாரணை முடிந்து, இப்போது தீர்ப்பிற்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதால், அதன் முடிவு எப்படி வரும் என்று தெரியாது. அதனால்தான், தேர்தல் ஆணையம் அதிலே முடிவெடுக்கவில்லை. அதுதான் உண்மை. உங்களுடைய கட்சியைச் சார்ந்த, போட்டியிட்டு தோல்வியடைந்த

[திரு. சி.வி. சண்முகம்] [2019 பிப்ரவரி 13

உறுப்பினர், 'என்னை தேர்தலில் வெற்றிபெற்றவராக அறிவிக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்ததால்தான், அதில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** பொதுவாக தமிழகத்தில் நடைபெற வேண்டிய தேர்தல்கள் விரைவாக நடைபெற வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. 21 தொகுதிகளிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகத்திலே 21 சட்டமன்றத் தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அந்தத் தொகுதிகளினுடைய நிலைமையை எண்ணிப் பார்த்து, தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய நடவடிக்கையை நம்முடைய அரசு முனைப்போடு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், வேகமாக, ரொம்ப force ஆகப் பேசிக்கொண்டிருக்கிறார். உள்ளாட்சித் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் என எல்லாத் தேர்தல்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார். பாராளுமன்றத் தேர்தலை நிறுத்த முடியாது என்று கூறினார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எல்லாக் கட்சிகளும் பல்வேறு நேரங்களில் தனியாக நின்று தேர்தலைச் சந்தித்திருக்கின்றன. எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்கள் பேசினார்கள். அவர் பேசியதற்கு நீங்கள் பதிலே சொல்லவில்லை. வேறு subject-க்குப் போய்விட்டீர்கள். 1967-க்குப் பிறகு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி என்னவானது என்று கேட்டார்கள். நீங்கள் இனிமேல் எந்தத் தேர்தல் வந்தாலும் தனியாக, தனித்து காங்கிரஸ் கட்சி போட்டியிடுமா? காங்கிரஸ் கட்சி தனித்து நிற்குமா? தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனித்து



2019 பிப்ரவரி 13] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நிற்குமா? அப்படி தனித்து நின்றால்—பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-50

**திரு. கரி. இராமசாமி:** நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். இப்போது இருக்கக்கூடிய நிலைமையிலே, பா.ஜ.க. உங்களுடன் கூட்டணி வைத்தால் உங்களோடு எந்தக் கட்சியும் கூட்டணிக்கு வருவதற்குத் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், நான் சொல்கிறேன், பொறுங்கள். முதலிலே கூட்டணியே இல்லாமல் போட்டியிடுவதற்கு நீங்கள் தயாரா? (குறுக்கீடுகள்) உங்களுக்குத் திறன் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்ன சொல்லியிருக்கிறோம்? நாங்கள் நின்றிருக்கிறோம்; தி.மு.க. நின்றிருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே தனியாக நின்று சிங்கம் போன்ற எங்களுடைய தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் 37 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 39 தொகுதிகளில், 37 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறோம். அதெல்லாம் பிரச்சினையில்லை. 1967-க்குப் பின்னால் நீங்கள் எங்களுடன் கூட்டணியில் இருக்கிறீர்கள் அல்லது அவர்களுடன் கூட்டணியில் இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் இவ்வளவு தூரம் force-ஆகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தனித்து நின்று போட்டியிடுவதற்குத் தயாரா? அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். வேறு subject-க்குப் போகாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது தனித்து நின்று போட்டியிடுவதற்குத் துணிவு இருக்கிறதா என்று கேட்டார்கள். 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்திலே தனித்து நின்று வெற்றி பெற்ற இயக்கம் இந்த இயக்கம். அதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாற்றில் புரட்சித் தலைவரும் சரி, புரட்சித் தலைவி அம்மா அவர்களும் சரி, எவ்வளவோ பொதுத் தேர்தல்களில் தனித்து நின்ற வரலாறு உண்டு. ஆனால், நீங்கள் யார் முதுகிலாவது சவாரி செய்துகொண்டே இருக்கிறீர்கள் அதுதான் உங்களுடைய கதை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் தடவை நான் தேர்தலிலே போட்டியிட்டபோது தனித்துதான் காங்கிரஸ் கட்சி நின்றது. நான் தனியாக நின்றுதான் தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்றேன். (குறுக்கீடுகள்) கேளுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். உங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களுடைய செல்வாக்கிலே நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். அவர் இல்லாமல் நீங்கள் இன்னும் தேர்தலைச் சந்திக்கவேயில்லை. நீங்கள் தேர்தலைச் சந்தித்துப் பாருங்கள். அப்போது உங்கள் நிலை எவ்வாறு அமையப்போகிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாங்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தலைச் சந்தித்தோம். அனைத்திலும் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம், மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. கரி. இராமசாமி:** இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய செல்வாக்கிலேதான் வெற்றி பெற்றதாகச் சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், நீங்கள் எந்தச் செல்வாக்கிலே வெற்றி பெற்றீர்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கிலே வெற்றி பெற்றீர்களா? இல்லை, தன்னந்தனியாக உங்களுடைய செல்வாக்கிலே வெற்றி பெற்றீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினரிடம் அறிய விரும்புகிறேன்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே என்னைப் பற்றி இதுவரையில் நான் பேசியதே கிடையாது. தனிப்பட்ட முறையிலே என்னுடைய நிலை என்ன என்பதை நான் பேசியதே கிடையாது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைச் சொன்னதற்குப் பிறகு நான் சொல்ல வேண்டிய கடமையிலே இருக்கிறேன். என்னுடைய தகப்பனார் 4 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர்களும் காங்கிரஸ் கட்சியில் தான் நின்றார். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். நான் இப்போது 6-வது முறையாக ஒரே தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். ஒரே தொகுதியிலிருந்துதான் நான் சட்டமன்ற உறுப்பினருக்காகப் தேர்தலில் போட்டியிட்டு, இதுவரையில் வென்றிருக்கிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். எல்லாம் காங்கிரஸ் கட்சியிலிருந்துதான் நின்று வெற்றி பெற்றேன். தனியாகக் கிடையாது. (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சியிலிருந்துதான் நின்று வெற்றி பெற்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். நீங்கள் எங்களைப் பார்த்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செல்வாக்கிலே இங்கே

அமர்ந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். அது உண்மைதான். இல்லையென்று சொல்லவில்லை. நீங்களும் காங்கிரஸ் கட்சியின் தயவில்தான் வெற்றி பெற்று அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுடைய சொந்த செல்வாக்கிலே அல்ல; ஆகவே, எங்களைக் கேள்வி கேட்பதற்கு என்ன நிலை இருக்கிறது என்றே புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** நான் சொல்வது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் இருந்தபோதுதான் நீங்கள் தேர்தலைச் சந்தித்தீர்கள். அதற்குப் பிறகு நடந்த எந்தத் தேர்தலிலும் நீங்கள் வெற்றி பெறவில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். ஆர்.கே. நகர் தொகுதியிலும் நீங்கள் தோல்வியைத்தான் சந்தித்தீர்கள். அதனால் உங்களுடைய பலத்தை நீங்கள் நிரூபிக்க உடனடியாக தமிழகத்திலே ஒரு தேர்தலை நடத்துங்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்துங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் அவர்கள், அவரவர்களுடைய பலத்தை நிரூபிக்கச் சொன்னார்கள். அவரவர்களுடைய பலத்தை நிரூபியுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னால், நீங்கள் தனியாக ஏதாவது ஒரு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்திருக்கிறீர்களா? இல்லை. வெற்றி பெற்றிருக்கிறீர்களா? இல்லை. ஒன்று, எங்கள் தோள்மேல் ஏறிக்கொள்வீர்கள், இல்லையென்றால் தி.மு.க. தோளில் ஏறிக்கொண்டு இறங்கவே மாட்டீர்கள். இதுதான் நடந்தது. அதன் மூலமாகத்தான் நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு வரை தமிழகத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குச் சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும், தனித்தனியாக எந்தக் கூட்டணியும் இல்லாமல் நிற்கட்டும், நாங்களும் நிற்கத் தயார். தேர்தலிலே சந்திப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக நில்லுங்கள் என்று சொன்னார்கள். 10 ஆண்டு காலம் மத்தியிலே ஆட்சியில் இருந்தீர்கள். 2014 ஆம் ஆண்டு தனியாக தேர்தலில் நின்றீர்கள். மறைந்த வாழப்பாடியார் அவர்களுடைய மகன், ஒரு தொகுதியிலே நின்றார். வாங்கிய ஓட்டுகள் எவ்வளவு தெரியுமா? 2,719 ஓட்டுகள். உங்கள் கட்சியினுடைய ஓட்டு அவ்வளவுதான். 10 ஆண்டு காலம் மத்தியிலே ஆட்சியில் இருந்த, நீங்கள் தனித்து நிற்பதைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். இது அவையில் நடக்கின்ற சுவையான, கண்ணியமிக்க, இந்த அவைக்கு ஏற்ற விவாதமாக நான் கருதவில்லை. முடியுமானால், நான் இன்றைக்குப் பேசாமல் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய நேரம் இருக்கிறது.

**THIRU DURAIMURUGAN:** No, no. It is not a healthy discussion. What is going on here? (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு விவாதம்தான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கேட்கும்போது, பதில் சொல்ல வேண்டிய கடமையிலே இருக்கின்றோம். ஆகவே, யாரைக் கண்டும் எங்களுக்கு பயம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு ஒரு பிரச்சினை வருகின்றபோது பதில் சொல்கின்ற நிலையிலே நாங்கள் இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏன் கோபப்படுகின்றார்? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அவர் கேட்கின்ற கேள்விகளுக்கு முறையான பதிலை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தயவில்தான் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள் என்கிறார், ஆமாம், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதற்குத் தகுந்த பதில் நாங்கள் சொல்ல வேண்டுமல்லவா? நீங்கள் சொல்லக் கூடாது என்கிறீர்களா? அந்த உரிமை எங்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்களே, நீங்கள் பேசும்போது. . . (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் நான் முன்பே சொன்னேன். நிதிநிலை அறிக்கை பற்றிப் பேசுங்கள் அண்ணன், என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். நீங்கள் அதிலிருந்து வேறு, வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய்க் கொண்டேயிருக்கிறீர்கள். இப்பொழுது அண்ணன் துரைமுருகன் அவர்களிடம் ** பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** கொஞ்சம் பொறுங்கள், கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, அரசியல் போதும், நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள். போதும், நேரமாகிவிட்டது.

**திரு. கரி. இராமசாமி:** நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது ** என்று சொன்னார்கள். யாரிடம், யார் ** (குறுக்கீடு) யார்? ஏன், நீங்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள்? எவ்வளவு தவறான வார்த்தை? நாங்கள் ஏன் ** (குறுக்கீடுகள்) எங்களுக்கு என்ன தலையெழுத்தா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தையைகூட அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் அறிவுரையை ஏற்று, இனிமேலாவது நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** நான் தவறாகப் பேசவில்லையே? நான் தவறாகவே பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன கேட்டார் என்பதற்கு மட்டும் பதில் சொல்ல முடிந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால், இந்த விவாதத்தை மாற்றிக் கொண்டு, நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள்.

பிற்பகல் 1-00

**திரு. கரி. இராமசாமி:** சரி, நான் அடுத்த சப்ஜெக்ட்டிற்கு வருகிறேன். இப்பொழுது நீங்கள் பொங்கல் விழாவிற்காக 1,000 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அதேபோல், இப்போது ஏழை எளிய மக்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றீர்கள். அதை நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டியதுதான். அது செய்தது சரிதான். ஆனால், உங்கள் நிதிநிலை அறிக்கையினுடைய நிலை என்ன, நீங்கள் எவ்வாறு இதற்கு இவ்வளவு தொகையை ஒதுக்குகின்றீர்கள். ஒரு பழமொழி இருக்கின்றது. 'சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்று. சட்டியில் ஒன்றும் இல்லை, எப்படி அகப்பையில் முகந்து போடுவதற்கு நீங்கள் முயற்சி செய்கின்றீர்கள். பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை, ஆனால் நீங்கள் 2 ஆயிரம் ரூபாயை வழங்குவதாகச் சொல்லியிருக்கின்றீர்களே, இதனுடைய உள் நோக்கம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே நீங்களும் ஆட்சியில் இருந்தீர்கள். எவ்வளவு கடன் இந்தியா வாங்கியிருக்கிறது என்று

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

உங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருக்கின்றபோது, ஒரு பொது திட்டத்தை அறிவிக்கின்றபோது, அதைத் தவறு என்று சொல்கின்றீர்களா? இப்போதுகூட திரு. ராகுல் காந்தி அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவிக்கவிருப்பதாகச் சொல்கின்றார்கள். இந்திய நாட்டினுடைய கடன் எவ்வளவு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள். அப்படி அவர் அறிவிக்கின்றபோது அதைச் சரி என்று சொல்கின்றீர்கள், நாங்கள் ஏழை மக்களுக்குக் கொடுப்பதைத் தவறு என்று சொல்கின்றீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதைத் தவறு என்று நான் சொல்லவில்லை, நீங்கள் இதை இன்னும் அதிகப்படுத்திக் கொடுங்கள். 2 ஆயிரம் ரூபாய் போதாது, அதனை 5 ஆயிரம் ரூபாயாகக் கொடுங்கள் என்று சொல்கின்றேன். அதை நான் பாராட்டுகின்றேன். இதில் இரண்டாவது கருத்திற்கு இடம் இல்லை. சரி, அதை விட்டுவிடுங்கள். நான் நிலைமையைச் சொல்லிவிட்டேன், நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

அடுத்து, உயர் கல்வித் துறை. இந்தத் துறையில் ஏறத்தாழ 1,500 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று எனக்கு புள்ளிவிவரம் சொல்கின்றது. அதை ஏன் நீங்கள் தாமதப்படுத்துகின்றீர்கள்? உடனடியாக ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், உயர் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், துணை வேந்தர்கள் நியமனம் பற்றி தொடர்ந்து புகார்கள் வருகின்றன. புகாரை நீங்களோ, நானோ சொல்லவில்லை. மிகப் பெரிய பொறுப்பில் இருக்கும் ஒருவரே புகார் சொல்கிறார். அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அதையும் இந்த அரசாங்கம் தெளிவாக விளக்க வேண்டும். அவர் என்ன நோக்கத்தில் அந்த மாதிரி சொன்னார்? அதில் என்ன தவறு நடந்தது? இப்போது பல்கலைக்கழகங்களில் என்ன நடக்கின்றது என்றே தெரியவில்லை. காமராஜர் பல்கலைக்கழகத்தில் என்ன நடக்கிறது? சட்டமன்றத்தில் விவாதிக்க முடியாத, வாயால் சொல்ல முடியாத அளவிற்கு அங்கே பல பிரச்சினைகள் நடக்கின்றன. அதையெல்லாம் நீங்கள் ஏன் control செய்யாமல் இருக்கின்றீர்கள் என்றே எனக்குத் தெரியவில்லை.



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உயர் கல்வித் துறையில் பேராசிரியப் பெருமக்கள் நியமனம் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு, 2,334 உதவிப் பேராசிரியர்களை T.R.B. மூலமாகத் தேர்வு செய்வதற்காக அனுமதி பெறப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும் மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அண்ணாமலை பல்கலைக்கழகத்தினுடைய உபரி ஆசிரியர்களையெல்லாம் deputation மூலமாக அந்த இடங்களில் பணி நியமனம் செய்ததோடு மட்டுமல்லாமல், முதல் சுற்றில் 1,853 Guest Lecturers-ம் (கௌரவ விரிவுரையாளர்கள்) இன்றைக்கு பணியில் அமர்த்தப்பட்டு, அதன் மூலமாக நல்ல முறையில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அதேபோல் இரண்டாவது சுற்றில் 1,661 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், புதியதாக 2011-க்குப் பின்பாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்களின் கோரிக்கையினை ஏற்று அவர்கள் விரும்பிய பாடப் பிரிவுகள் அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக 1,555 புதிய பாடப் பிரிவுகளைத் தோற்றுவித்ததன் காரணமாக இன்னும் தேவைப்படக்கூடிய கௌரவ விரிவுரையாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடக்கக்கூடிய ஆட்சியில், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மேலும் 540 கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்க அனுமதி தந்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-05

மாணாக்கர்களுக்கு எந்தவிதத்திலும் கல்வி பாதிப்பு இல்லாத அளவிற்கு, துணை வேந்தர்களை நியமனம் செய்து, அனைத்து கல்லூரிகளிலுமே ஆசிரியர் பெருமக்களை நியமனம் செய்து நல்லமுறையிலே உயர் கல்வி கற்றுத் தந்ததன் காரணமாகத்தான், இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையிலே, தமிழகமானது அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக, மாணாக்கர்களுடைய சேர்க்கையிலே

முதலிடத்திலே இருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திய அளவில் மாணாக்கர்கள் சேர்க்கை 25.8 சதவிகிதமாக இருந்தபோதிலும், தமிழகம் 48.6 சதவிகிதம் என்ற அளவோடு மாணாக்கர் சேர்க்கையில் முதலிடத்தில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடுமட்டுமல்லாமல், உலக அளவிலே பார்க்கின்றபோது, மாணாக்கர்களுடைய சேர்க்கை 30 சதவிகிதமாக இருக்கிறது. இன்றைக்கு அதையும் தாண்டிதான் நம்முடைய தமிழகம் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, துணை வேந்தர்கள் நியமனத்திலே பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கூறப்படுவதாகச் சொன்னார்கள். துணை வேந்தர் ஒருவரை அறிவிக்கின்றபோது, அந்தப் பதவிக்கு 100 பேர், 120 பேர் போட்டியிடுகிறார்கள். அந்தப் போட்டியாளர்களில் ஒருவர்தான் தேர்வு செய்யப்படுகிறார். பலமுறை நான் சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் சொல்கிறேன். அரசு மூலமாக, Search Committee-லே ஒருவரை நியமனம் செய்வதைவிட Chancellor மூலமாக ஒருவரை நியமனம் செய்ய, Search Committee மூலம் தகுதியானவர்களைத் தேர்வு செய்து அதன் மூலமாக வேந்தர் அவர்கள் நியமனம் செய்கிறார். அது ஆரம்ப காலகட்டத்திலே காலதாமதமாக நியமனம் செய்யப்பட்டது. இன்றைக்கு ஒவ்வொரு துணை வேந்தரும் அவருடைய பதவிக் காலம் முடிகின்றபட்சத்தில் தொடர்ந்து அவர்கள் பொறுப்பு ஏற்கின்ற வகையிலே மதுரை காமராஜர் University-ஐப் பொறுத்தவரை துணை வேந்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோலதான், ஒவ்வொரு University-க்கும் அவர்களுடைய காலம் முடிகின்றபட்சத்திலே உடனே துணை வேந்தர்களை நியமிக்கின்ற வகையிலேதான் அரசானது அதற்குண்டான வழிவகைகளையெல்லாம் செய்து, தேர்வு செய்கின்ற பணியை வேந்தரிடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் முறையாக interview-ஐ நடத்தி, அதன் மூலமாகதான் தேர்வு செய்கிறார்கள். அதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை. குறிப்பிட்டு ஏதேனும் ஒன்றைச் சுட்டிக்காட்டினார் என்றால், அதற்கு விளக்கம் தருவதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால், துணை வேந்தர்களைப் பொறுத்தவரை, எந்தத் தேதியிலே பதவிக்காலம் முடிகிறதோ, அதற்கு முன்பாகவே அடுத்து





தகுதியான ஒருவர் நியமனம் செய்யப்பட்டு 2 நாட்கள், 3 நாட்களில் அவரும் பொறுப்பேற்றுவிடுகின்றார். அதனால் துணை வேந்தர்கள் நியமனத்தில் எந்தவிதமான காலதாமதமும் இல்லை என்பதையும், அதேநேரத்திலே அதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில், Tatkal system குறித்து சட்டமன்றத்தில் விவாதித்து, நிறைய பேர் பதிந்து வைத்திருக்கிறோம். ஆனால், இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. Tatkal system என்பது விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட தொகையை கட்டித்தான் பதிவு செய்கிறார்கள். அதிலே நிறைய கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வந்திருக்கும். உங்களிடம் அந்தப் பணம் இப்போது இருக்கிறது. வருடக்கணக்கில் அந்தப் பணத்தை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். ஆனால், எந்தவிதமான மின் இணைப்பும் நீங்கள் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடக்கணக்காக அல்ல, போன வருடம் தான் அந்த scheme-ஐ announce செய்தோம் வருடக் கணக்காக இல்லை. போன வருடம் அந்த scheme-ன்கீழ் பணம் கட்டிய அத்தனை பேருக்கும், அதாவது 10,000 பேருக்கும் முழுமையாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு மட்டும், கஜா புயல் வந்த காரணத்தினால், மூன்று மாதகாலமாக பணியாளர்கள் எல்லாம் நிவாரணப் பணிகளைக் கவனிக்க அங்கே சென்ற காரணத்தினால், மின் இணைப்பு வழங்கும் பணிகளில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டுவிட்டது. இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. முதலில் Transformer உள்ளவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக Transformer போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மட்டும்தான் சிறிது காலதாமதம் ஆகின்றது. கடந்த ஆண்டு

[திரு. பி. தங்கமணி] [2019 பிப்ரவரி 13

10,000 பேருக்கு முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால், அந்த முழுப் பட்டியலையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கொஞ்சம் விரைவாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். தூத்துக்குடி ஆலையைப் பொறுத்தமட்டில், இப்போது நீதிமன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு, அதாவது Judgement வரக்கூடிய நிலைமையிலே இருக்குமென்று நான் நினைக்கிறேன். அதைச் சரியாக அணுக வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு பத்திரிகைகளில்கூட என்ன செய்தி வந்திருக்கிறது என்றால், Judgement வரப்போகிறது, ஆயிரக்கணக்கான போலீஸார் தூத்துக்குடியில் குவிக்கப்பட்டு வருகிறார்கள் என்று வந்திருக்கிறது. அப்படியென்றால், அதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும். என்ன தீர்ப்பு வரும் என்று நமக்குத் தெரியாது. ஆனால், அங்கே நிலைமை பதற்றமாக இருக்கிறது. நீதிமன்றத்திலே சரியான வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்து பதற்றத்தைத் தடுப்பதற்கு என்ன வழியோ அதை இந்த அரசு அதிவிரைவாகச் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், வீடுகளுக்கு வரி விதிப்பதில், வீடு, இடம் உள்ளிட்டவற்றுக்கு, ஒரு புதிய system-ஐக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் 200 சதவிகிதம், 300 சதவிகிதம் அளவிற்கு வரியை அதிகமாக்கியிருக்கிறார்கள். இதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு இதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அடுத்ததாக, காரைக்குடியை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று தொடர்ந்து இந்த அரசிடம் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் அது நடக்கவில்லை. எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள்கூட இந்த விஷயத்தில் interested ஆக இருப்பார்கள் என்று நம்புகிறேன். எனவே, இது சம்பந்தமாக எங்களுக்காக அதை உடனடியாக அறிவிக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதனை உடனடியாக அறிவிக்க வேண்டும்.



2019 பிப்ரவரி 13] [திரு. கரி. இராமசாமி]

நீங்கள் அறிவிக்கவில்லையென்று வைத்துக்கொள்ளுங்கள்! நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும் இதே கோரிக்கையை வைக்கிறேன். இதே point-ஐ இங்கேயும் வைக்கிறேன். அதனை அறிவிக்க உங்களுக்கு எப்பொழுது வாய்ப்பு கிடைக்கிறதோ, அந்த வாய்ப்பு கிடைத்தவுடனே முதல் வேலையாக இதனை நீங்கள் செய்து தர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பாகவே செய்து கொடுத்துவிடுங்கள். அதற்கு முன்பாகவே இதனை இந்த அரசு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது அவசியம் வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். அதை செய்து கொடுங்கள்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தமட்டில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை இந்த அரசு உருவாக்கவில்லை. சமீபத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினீர்கள். எனக்குத் தெரியும்; ஒரு சிறிய முயற்சி செய்திருக்கிறீர்கள். ஆனால் இவ்வளவு நாளாக அதனால் தமிழகத்திற்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை; தமிழக இளைஞர்களுக்குக் கிடைக்கவில்லை. அந்த விஷயத்தில் அரசு மிகவும் மெத்தனமாக இருக்கிறது. அதை விரைவுபடுத்துங்கள்.

அடுத்ததாக, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை. அதில், எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதில், கோயில்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களே, நீங்கள் பேச ஆரம்பித்து 1 மணி நேரம் ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதோ உரையை முடித்துவிட்டேன். முடிக்கச் சொன்னால், உரையை முடித்துவிடுகிறேன். இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கோயில்களுக்கு சொத்துக்கள் நிறைய இருக்கின்றன. நிறைய இடங்களில் கோயில்களுடைய சொத்துக்களை தனியார் அனுபவித்து வருகிறார்கள். 80 சதவிகித கோயில் சொத்துக்கள் தனியாரிடம் இருக்கின்றன. அவற்றைக் கைப்பற்றுவதற்கு நீங்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எவ்வளவு கோயில் சொத்துக்களைக் கைப்பற்றியிருக்கிறீர்கள்? மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன? அந்தக் கணக்காவது உங்களிடத்தில் இருக்கிறதா? கணக்கே இல்லையென்றால், நாம் என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை.

[திரு. கரி. இராமசாமி] *[2019* பிப்ரவரி *13*

சிலைக் கடத்தல் பிரச்சினைக்கு நான் இப்பொழுது வரவில்லை. அது குறித்து நாம் பேசிவிட்டோம். அந்த விஷயத்தில் discussion எல்லாம் முடிந்துவிட்டது. கோயில் சொத்துக்களைக் கைப்பற்றுங்கள். ஆண்டவனுக்கு நீங்கள் பயந்தவர்கள் என்று எனக்குத் தெரியும். இது கடவுள் சொத்து. அதனைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை. அதிலும் நீங்கள் கோயில், கோயிலாகப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். எனக்குத் தெரியும். கோயில் சொத்தைக் காப்பாற்றவேண்டும். மிகப் பெரிய சொத்து, மிகப் பெரிய அளவில் வருமானம் எல்லாம் அதன்மூலம் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வருவது, இந்த ஆட்சியில் ஏதோ, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில், (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர் சொல்வதே தவறு. 'நாங்கள் பயப்படுவது, அவர்கள் பயப்படுவது' என்றெல்லாம் அவர் சொல்கிறார். அவர் பேசுவது என்னவென்றால், 'ஆண்டவர் விடமாட்டார்' என்று அவருடைய பேச்சின் தோரணையிலிருந்து தெரிகிறது. யார் கோயில் சொத்துக்களை வைத்திருந்தாலும் அதனை இந்த அரசு எடுக்காமல் இருக்காது. சட்ட ரீதியாக இந்த அரசைப் பொறுத்தளவுக்கு ஏற்கெனவே யாருடைய காலத்தில் வக்ஃபு வாரியச் சொத்துக்கள் மற்றும் அதுபோலுள்ள அறநிலையங்களின் சொத்துக்களெல்லாம் அபகரிக்கப்பட்டன என்பதற்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிக்கு வந்த பிறகு *2011*-ல், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள்.

பிற்பகல் *1-15*

யார் யாருடைய சொத்துகளை இதுபோன்று ஏற்புடை செய்தார்களோ, முறைகேடாக வாங்கியிருந்தார்களோ, அவற்றையெல்லாம் மீண்டும் பெறுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு வாய்ப்பினைக் கொடுத்தார்கள். அதன்படி பெறப்பட்ட அனைத்து மனுக்களையும் சீர்தூக்கிப் பார்த்து, ஏறத்தாழ *600* கோடி ரூபாய் வஃக்பு வாரிய சொத்துக்களை மீட்டிருக்கிறோம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில்



*2019* பிப்ரவரி *13]* [திரு. செல்லூர் கா. ராஜு]

எந்தத் தவறு இருந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அனைவருமே ஆண்டவனுக்குப் பயந்தவர்கள்தான். ஆண்டவனுக்கு மீறியவன் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் நீங்கள் சாமி கும்பிடுவீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் சாமி கும்பிடுவீர்களோ, கும்பிடவில்லையோ எங்களுக்கு அதைப் பற்றி கவலை இல்லை. இந்த அரசு தெளிவான அரசு. ஏழைபாழைகளின் சொத்தாக இருந்தாலும் சரி, அது ஆண்டவன் சொத்தாக இருந்தாலும் சரி, யாருடைய சொத்தையும் யாரையும் அபகரிக்கவிடாமல் செய்யும் அரசுதான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கோயில் நிலங்களுக்கெல்லாம் கணக்கு இருக்கிறதா என்று கேட்டார். அவர் ஏறத்தாழ *6* முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அனைத்துக் கோயில்களுக்குமே E.O. போட்டு, அவர்களிடம் அந்த கணக்கெடுப்பெல்லாம் இருக்கிறது. தற்போது ஒரு வாரத்திற்கு முன்பு கூட, நீங்கள் செய்தித்தாளில் பார்த்திருப்பீர்கள். மதுரையில் பறவையில் *120* கோடி ரூபாய் கோயில் சொத்தை மீட்ட அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. பத்திரிகையில் செய்தியெல்லாம் வந்துள்ளது. அதேபோல், நில ஆக்கிரமிப்பாளர்களிடம் உள்ள சொத்து, கோயிலுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அரசுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அதை மீட்டெடுப்பதில் முதன்மையான அரசாக புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு இருக்கிறதென்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். குத்தகைதாரர்கள் பல வழக்குகளை நீதிமன்றத்தில் போட்டிருக்கிறார்கள். உங்களுக்கும் அது தெரியும். சிவகங்கை மாவட்டத்தில் இருந்தாலும் சரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்தாலும் சரி, குத்தகைதாரர்கள் நீதிமன்றத்திற்குச்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2019 பிப்ரவரி 13

செல்கிறபோது, அந்த வழக்குகளை நாம் நீதிமன்றத்திற்குச் சென்று, முறையிட்டு, வாதாடிதான் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், கோயில் சொத்துகள் பறிபோய்விட்டன, அவற்றை மீட்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்ற ஒரு வினாவை எழுப்பினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது அரசில் கடந்த 7 ஆண்டுகளில் தனி நபர் பெயரில் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட 943 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 6,232.61 ஏக்கர் நிலங்கள் மீண்டும் திருக்கோயில் பெயருக்கே பட்டா மாற்றம் செய்யப்பட்டன. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் 2,607.56 ஏக்கர் நிலம், 533.0127 கிரௌண்டு மனைகள் மற்றும் 210 கிரௌண்டு கட்டடங்கள், சுமார் மூவாயிரத்து நூறு கோடியே எண்பத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் மீட்கப்பட்டன. தனி நபர் பெயர்களில் கணினி சிட்டாவில் தவறாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட 144 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 616 ஏக்கர் நிலங்கள் மீண்டும் திருக்கோயில்களின் பெயருக்கே பெயர் மாற்றம் செய்யப்பட்டன. நிலங்கள், கட்டடங்கள், மனைகள்மூலம் ஆண்டுக்கு ரூ.958 கோடி வருவாய் எனக் கணக்கிடப்பட்டு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை எப்போதும் விழிப்புணர்வோடு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள், உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிட்டேன். கடைசியாக விவசாயிகள் பற்றி நான் ஏதும் விவரமாகப் பேசவில்லை. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களும் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டாலே தெரியும் என்று நான் கருதுகிறேன். இன்னும்



2019 பிப்ரவரி 13] [திரு. கரி. இராமசாமி]

விவசாயிகளுக்கு insurance amount முழுமையாகக் கிடைக்கவில்லை. (குறுக்கீடு) அய்யா, நான் கொஞ்சம் சொல்லி முடித்துவிடுகிறேன், நான் முடித்த பிறகு பேசுங்கள். விவசாயிகளுக்கு அந்தத் தொகை முழுமையாகக் கிடைக்கவில்லை. அதற்குரிய ஏற்பாட்டைச் செய்து தாருங்கள். உடனடியாக அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லையென்று சொன்னார்கள். நான் சுருக்கமாகச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியபடி, அவர்களுடைய பெருமுயற்சியினால், அவர் கொண்டுவந்த சீரிய திட்டத்தினால், 2016-2017 ஆம் ஆண்டு காப்பீட்டு நிறுவனங்களால் 278 கோடியே 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை 80,416 விவசாயிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு, அத்தொகை முழுவதும் விடுவிக்கப்பட்டுள்ளது. 80,383 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 274 கோடியே 70 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, 2017-2018 ஆம் ஆண்டு காப்பீட்டு நிறுவனங்களால் 276 கோடியே 77 இலட்சம் ரூபாய் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகையாக 89 ஆயிரத்து 326 விவசாயிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு, அத்தொகை முழுவதும் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதம மந்திரி அவர்களின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், சிவகங்கை மாவட்டத்தில் 2016-2017 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 83,916 ஆகும். இவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 80,416 பயனாளிகளுக்கு ரூபாய் 278 கோடியே 7 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் மாண்புமிகு உறுப்பினரின் காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 27,628 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 26,078 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூபாய் 86 கோடியே 26 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2017-2018 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் 93,662 பேர். இவர்களில் 84,018 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூபாய் 215 கோடியே 52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதில் அவருடைய காரைக்குடி தொகுதியில் மட்டும் பதிவு செய்தவர்கள் 27,382 நபர்கள். இவர்களில் 26,235 பயனாளிகளுக்கு ரூ.61 கோடியே 54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதவிர, சிவகங்கை மாவட்டத்திற்கென கூடுதல் நிதியாக, 70 கோடி ரூபாய் பெறப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) எனக்கு ஒன்றும் இல்லை. ஐந்து நிமிடங்களில்கூட என் உரையை முடித்துவிட்டுப் போய்விடுவேன். எனக்கொன்றும் பிரச்சினையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் சில செய்திகளை மட்டும் சொல்கிறேன்.



2019 பிப்ரவரி 13] [திரு. துரைமுருகன்]

கச்சேரியில் கீர்த்தனை பாடுவதற்கு முன்னால் ராக ஆலாபனை செய்வார்கள். அப்போதுதான் ராகம், சுருதியெல்லாம் கூடிவரும். ஆகையால் ஒரு சிறிய ராக ஆலாபனை. அதாவது, எல்லோரும் தெரிவித்ததைப்போல, தமிழ்நாட்டிலே இந்த ஆண்டு பருவ மழை பொய்த்துப் போயிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற 33 வருவாய் மாவட்டங்களில், இரண்டு, மூன்றைத் தவிர அனைத்து மாவட்டங்களும் வறட்சியின் பிடியில் இருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டை வறட்சி மாநிலமாக அறிவித்து, விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கியிருக்கின்ற கடன்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கியிருக்கிற கடன்கள் மற்றும் எல்லாக் கடன்களையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்த அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, பிறகு 9-9-2018 அன்று அமைச்சரவை கூடி முடிவெடுத்து, மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஆளுநரிடமிருந்து தகவல் ஏதும் வரவில்லை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரிதப்படுத்தினால், நீண்ட காலமாக சிறையில் இருக்கும் அவர்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்ற என்னுடைய கருத்தையும் நான் பதிய வைக்கிறேன்.

மூன்றாவதாக, hydro-carbon திட்டத்திற்கு எதிராக திருவாரூர் தொகுதியில் உள்ள திருக்காரவாசல் என்ற இடத்தில் 15 நாட்களாகப் போராட்டம் நடக்கிறது. அதையும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்து, இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் ஒருவரை ஏதோ ஒரு வழக்கு சம்பந்தமாக துரதிருஷ்டவசமாக தண்டித்துவிட்டார்கள். இந்த அவையில் இருப்பவர்களுக்கு வருத்தம்தான். அவர் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார், வேறு வழியில்லை. ஆனால் அவருடைய M.L.A. பதவி என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. ராஜினாமா செய்துவிட்டாரா, நீக்கிவிட்டீர்களா? ஏன் அந்த இடத்தை நீங்கள் காலியான இடம் என்று அறிவிக்காமல் இருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிய நடவடிக்கை வரும். சட்டப்படி உரிய நடவடிக்கை வரும்.

**திரு. துரைமுருகன்:** சரி. அடுத்ததாக, 100 நாள் வேலைவாய்ப்பு என்பது ஏழையெளியவர்களுக்குத்தான். அத்திட்டத்தின் மூலமாக பலவிதமான பணிகளை பல ஊர்களிலே செய்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்து சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கிறார்கள். எந்தப் பணம் என்று கேட்டோம். (குறுக்கீடு) என்னுடைய தொகுதியிலேயே கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால், அந்தப் பணத்தில், சில பணிகளைச் செய்ய பல Collectors அனுமதி கொடுக்கமாட்டேன் என்கிறார்கள், சரியாக பணத்தைப் பட்டுவாடா செய்யமாட்டேன் என்கிறார்கள். அதையும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இரண்டு, மூன்று நாட்களாக ஒரு மகிழ்ச்சி, அதிர்ச்சி எல்லாம் வந்தது. என்னவென்று கேட்டால், சென்னை மாநகரம் வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு மாநகரம். இந்த மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக சுமார் 19 ஆயிரத்து 58 கோடி ரூபாய் செலவில் முதன்முறையாக மெட்ரோ இரயில் விடப்பட்டிருக்கிறது. இது வரலாற்று சாதனையிலே ஒன்று.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இப்போது கூறிய 19 ஆயிரத்து 58 கோடி ரூபாய் செலவில் 2009 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, இருவழித் தடங்களிலே 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு முதற்கட்டப் பணிகள் நல்லமுறையில் நடந்து முடிந்துவிட்டதால், இரண்டாவது கட்ட பணி செய்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது. இந்த வரலாற்றுச் சாதனையைக் கொண்டு வந்தவர் எங்கள் தலைவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர் இல்லாவிட்டாலும், அவர் துயில்கின்ற திக்கு நோக்கி, என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவிக்கின்றேன். துவக்கியவர் எங்கள் தலைவர் கலைஞர் என்றாலும், அதை இயக்கியவர் அன்றைய துணை முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், ஏன் நாளைய தமிழகத்து முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி





அவர்களுக்கும், நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதில் இன்னும் கொஞ்சம் இருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலேயே வேளச்சேரி-மவுண்ட் பறக்கும் இரயில் திட்டப் பணிகளை 12 ஆண்டுகளுக்கு முன்பாகத் துவக்கினார். இதில் 90 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. நில சொந்தக்காரர்கள் 4 பேர் case போட்டுள்ளார்கள். அதை நீங்கள் எப்படியாவது முயற்சி செய்தால், சரிசெய்துவிடலாம். ஏனென்றால், National Highways சார்பாக சாலை போடும்போது சிங்கபெருமாள்கோயிலில் சாலையின் நடுவில் அந்தக் கோயில் இருந்தது. நீண்ட நாட்களாக அதை எடுக்கமாட்டேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்களிடம் பேசி, கோயிலை எடுத்ததால்தான் இன்றைக்கு road வந்திருக்கிறது. எனவே, அதேபோல இந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் என்று நான் பார்த்தேன். அதுதான் குடிநீர்ப் பிரச்சினை. எங்களுடைய தலைவர் அவர்கள்கூட காலையில் சுட்டிக்காட்டினார்கள். காரணம், நான் இங்கே முதலிலே சொன்னதுபோல், தமிழ்நாட்டிலே பருவமழை பொய்த்துப்போய் இருக்கிறது. எங்கு போனாலும், இன்னும் ஒரு மாதம் கழித்தால், தொகுதிக்குள் போக முடியாது. தண்ணீர்ப் பிரச்சினை இப்போதே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இது பூதாகரமாக தமிழ்நாடு முழுவதும் வெடிக்கப்போகிறது. இது என்ன நிலைமை? தமிழ்நாடு மட்டுமல்ல, குறிப்பாக, சென்னை மாநகரம் எத்தகைய ஒரு பிரச்சினையைப் பார்க்கப் போகிறது என்பதற்கு 'இந்து' தமிழ் நாளேடு ஜனவரி 30 ஆம் தேதி ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அந்தத் தலையங்கத்தின் தலைப்பே 'குடிநீர்ப் பஞ்சத்தை இந்தக் கோடையில் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்' என்பதுதான். என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், '140 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை எதிர்கொள்ளப் போகும் மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சமாக இது இருக்கும் என்று அஞ்சப்படுகிறது' என்று எழுதியிருக்கிறார்கள். 'ஆனால், அதற்கான முன்னேற்பாடுகளைத் தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் தொடங்கிவிட்டதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது' என்று ஓர் அபாய சங்கை

[திரு. துரைமுருகன்] [2019 பிப்ரவரி 13

இந்து தமிழ் நாளேடு ஊதியிருக்கிறது. அந்த ஓசை உங்களுடைய காதில் விழுந்ததா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. சென்னைக்கு. . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காலையிலேயே 'Zero Hour'-ல் இதைப்பற்றி எழுப்பினார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் இதற்குத் தனது விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்கிறீர்கள். ஒரு நாளிதழில் வந்த தலையங்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். நான் இதற்குத் தெளிவாக விளக்கம் அளிக்கின்றேன்.

குடிநீர்ப் பிரச்சினை என்பது, இயற்கையினால் வந்த பிரச்சினை. வறட்சியால், இன்றைக்கு பல்வேறு இடங்களில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் பலமுறை உயர் அதிகாரிகளை அழைத்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. வறட்சியால், எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறதோ, அவற்றையெல்லாம் முன்கூட்டியே ஆய்வு செய்து, அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்குத் தேவையான நிதியையும் அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அந்தப் புள்ளிவிவரத்தையும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, ஊரகப் பகுதிகளில் அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்கிற முழு விவரத்தையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார் என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 பிப்ரவரி 13]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது எனக்கு அவ்வளவாகப் புரியவில்லை. இப்போது எனக்கு, நன்றாக, தெளிவாகப் புரிந்துவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதினால், அந்தக் குடிநீர்ப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுகிறேன். ஆனால், நிரந்தரமாக இந்தக் குடிநீர்ப் பிரிச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம்? இப்போது கிருஷ்ணா நீர் 2,000 cusecs வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 2,000 cusecs அங்கு விட்டிருந்தால் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். அது 'Hindu' பத்திரிகையில், "About 2,000 cusecs was discharged from the Kandaleru reservoir. But much of it will be used for irrigation in the neighbouring areas before it reaches Tamil Nadu" என்று செய்தி வந்திருக்கிறது. அதை வழியில் எடுத்துவிடுவார்கள். அது எனக்குத் தெரியும். Border-லிருந்து 25 கிலோ மீட்டர், இதிலேயே எல்லோரும் pumpset போட்டு எடுத்துவிடுவார்கள். ஆகவே, இதையும் கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பார்க்க வேண்டுமென்று நான் அவர்களிடத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, ஒரு பெரிய பிரச்சினை அதிர்ச்சி என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், இயற்கையினால் ஏற்படும் பாதிப்பிற்காக, யார்மீதும், எந்தக் கட்சிமீதும் பழிபோட முடியாது. அப்படி ஒரு பாதிப்பை சமீபத்தில், 'கஜா' புயல் ஏற்படுத்திவிட்டது. அந்தப் புயல் தஞ்சை மாவட்டத்தையே சூறையாடிவிட்டது. வளம் கொழிக்கிற தஞ்சை 'சகாரா பாலைவனம்' போல் ஆகிவிடுமோ என்று அஞ்சக்கூடிய நிலை இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், புயலே அறியாத பகுதிகளுக்கெல்லாம் சென்று, அரசு பல்வேறு பணிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறது. புயல் வீசுவதற்கு முன், அரசாங்கம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது, நான் இல்லையென்று சொல்லவில்லை. அமைச்சர்கள் எல்லோரும் போனீர்கள், செய்தீர்கள். நான் குறை ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், இன்னும் அந்தக் குறைபாடுகள் தீரவில்லையென்று சொல்கிறார்கள்.

ஆனந்த விகடன் என்ற ஒரு பத்திரிகை. அந்தப் பத்திரிகையின் தலையங்கத்தில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால், 'முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் திறம்பட கையாண்ட அரசு,

நிவாரணப் பணிகளைத் துரிதமாகச் செய்யவில்லையென்ற கோபம் மக்களைக் கொந்தளிக்க வைத்திருக்கிறது. வழக்கம்போல், பாதிப்பு ஏதுமில்லை என்பதை நிரூபிப்பதில் மட்டுமே மக்கள் பிரதிநிதிகள் குறிப்பாக இருப்பதுதான் மக்கள் கோபத்திற்குக் காரணம்' என்று அதில் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 'புயலுக்கு முன், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குக் காட்டிய வேகத்தையும், விவேகத்தையும், புயலுக்குப் பிறகு அரசு காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு எல்லாப் பகுதிகளிலும் அனல் அடிக்கிறது'. இதை நான் சொல்லவில்லை, அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால், புயலுக்கு முன் 'நீங்கள் வேகம் காட்டினீர்கள்' என்று எழுதியிருக்கிற 'ஆனந்த விகடன்' பத்திரிகை, புயலுக்குப் பிறகு 'மந்தமாகிவிட்டது' என்று எழுதியிருக்கிறது. அதுபோன்று இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். செய்திருந்தால், அதற்கு மகிழ்ச்சி. ஆனால், என் நெஞ்சைத் தொட்டது எதுவென்றால், "தங்களுக்கு உதவி செய்ய வந்த நண்பர்களின் வாகனங்களில், இளநீர்க் காய்களை அள்ளி நிரப்பி, அனுப்பி, தங்கள் அன்பைக் காட்டியிருக்கிறார்கள் அந்த காவேரி டெல்டா மாவட்டத்துக்காரர்கள்". நாமெல்லாம் அங்கு வாகனங்களில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தோமல்லவா, அந்த வாகனங்களெல்லாம் திரும்பி சும்மா போகக் கூடாது என்று இளநீர்க் காய்களை, அந்த வண்டிகளில் போட்டு அனுப்பினார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அது பாராட்டுக்குரிய ஒன்றுதான். அவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல, அங்கு நிலைமை எப்படியிருக்கிறது என்று எங்களுடைய தலைவர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைப் பற்றி இங்கு குறிப்பிட்டார்கள். புயலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். புயலால் பாதிக்கப்படாத சில நபர்கள், தங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுதான் இங்கே பிரச்சினை;





எல்லோருக்கும் நிவாரணப் பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். யார் யாரெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனக் கணக்கெடுக்கப்பட்டு, அந்த விவரம் அரசு அதிகாரிகள் மூலமாக அரசுக்கு வழங்கப்படுகிறது. அந்த விவரத்தின் அடிப்படையில்தான் நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனால், அங்கே சென்று நிவாரணப் பொருட்களை வழங்கும்போது, 'எங்கள் அனைவருக்கும் நிவாரணப் பொருட்களை வழங்க வேண்டும்' என்று அவர்கள் கேட்கின்ற காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறதேயொழிய, வேறொன்றுமில்லை. பாதிக்கப்பட்ட அனைவருக்குமே நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட அனைவருக்குமே நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கியிருந்தால் நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால், இன்னும் நிவாரணம் கிடைக்கப்பெறவில்லை என்று சொல்கிறார்கள். இப்போதுகூட எங்களுடைய தலைவர் அவர்களுக்குக் கடிதம் ஒன்று வந்திருக்கிறது. நிவாரணத் தொகை ரூபாய் 5 இலட்சம் வழங்குவதற்கு 15 ஆண்டுகளுக்கு முன், 2004 ஆம் ஆண்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது அரசு வழங்கும் நிவாரணத் தொகையில் engine கூட வாங்க முடியாத நிலையுள்ளதால் மேற்கண்ட நிவாரணத்தை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது மீனவர்கள் பிரச்சினை. இப்படி பிரச்சினைகள் வந்துகொண்டுதான் இருக்கும். ஆனால், வறட்சி ஏற்படுகிறபோதெல்லாம் நாமும் எவ்வளவோ செய்கிறோம். மத்திய அரசிடமிருந்தும் உதவி கேட்கிறோம். ஆனால், மத்திய அரசு நமக்குக் கொடுப்பதில்லை. காலையில் ஒரு பெரிய விவாதமே நடைபெற்றது. நான் ஒன்றை வெளிப்படையாகச் சொல்கிறேன். மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி; பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி; அல்லது வேறு எந்தக் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்தாலும் சரி, மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான்

நம்மிடம் நடந்துகொள்வார்கள். நமக்கு வேண்டியதை அவர்கள் கொடுக்க மாட்டார்கள். ஏன்? 2010 ஆம் ஆண்டு 'தானே' புயல் பாதிப்பு ஏற்பட்டபோது 5,748 கோடி ரூபாய் கேட்டார்களே, அது கிடைத்ததா? 2013 ஆம் ஆண்டு வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டபோது 19,665 கோடி ரூபாய் கேட்டார்களே, அது கிடைத்ததா? 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ள பாதிப்பின்போது 25,912 கோடி ரூபாய் கேட்டார்களே, அது கிடைத்ததா? 'வர்தா' புயலால் பாதிப்பு ஏற்பட்டபோது 22,637 கோடி ரூபாய் கேட்டார்களே, அது கிடைத்ததா? 2017 ஆம் ஆண்டு வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டபோது 39,565 கோடி ரூபாய் கேட்டார்களே, அது கிடைத்ததா? 'கஜா' புயல் பாதிப்பிற்கு தற்போது 15,000 கோடி ரூபாய் கேட்டார்களே, அது கிடைத்ததா? கிடைக்கவில்லை. சேதங்கள் ஏற்பட்டதற்கு நிவாரணத்திற்காக தமிழக அரசு கோரிய மொத்தத் தொகை 1,37,300 கோடி ரூபாய். ஆனால், கிடைத்தது 5,325 கோடி ரூபாய்தான்; 4 சதவிகித அளவிற்குகூட மத்திய அரசு வழங்கவில்லை. எனவே, அதற்கு இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களாகிய நாம் ஒற்றுமையாக இருந்து கேள்வி கேட்க வேண்டுமென்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. எனவே, புயல் சேதங்களைப் பொறுத்தவரையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மத்திய அரசிடம் நாங்கள் கோரிய தொகை கிடைக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது, 2007-2008 ஆம் ஆண்டு கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக, தற்காலிக நிவாரணத் தொகையாக 449 கோடி ரூபாயும், நீண்டகால சீரமைப்பிற்காக 689.87 கோடி ரூபாயும் என மொத்தமாக 1,139.87 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கோரப்பட்டது. மத்திய அரசு வழங்கிய தொகை 142.95 கோடி ரூபாய் மட்டும்தான். அப்போது, மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தார்கள்; மத்திய ஆட்சியிலும் அங்கம் வகித்தார்கள்; மத்திய ஆட்சியிலும் அங்கம் வகித்த அவர்களுக்கே கேட்ட நிதி கிடைக்கவில்லை.

அடுத்து, 2008-2009 ஆம் ஆண்டு 'நிஷா' புயலால் பாதிப்பு ஏற்பட்டபோதும், அவர்களுடைய கட்சி மத்தியில் ஆட்சியிலிருந்த





கட்சியுடன் கூட்டணியில் இருந்தது. அப்போது தற்காலிக நிவாரணத்திற்காக 2,105.71 கோடி ரூபாயும், நீண்டகால சீரமைப்பிற்காக 1,683.53 கோடி ரூபாயும், என மொத்தமாக 3,789 கோடி ரூபாய் கோரப்பட்டது. ஆனால், மத்திய அரசு விடுவித்த தொகை 570.17 கோடி ரூபாய் மட்டும்தான்.

மேலும், 2010-2011 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டபோது, மத்திய அரசிடம் அப்போது ஆட்சியிலிருந்த அவர்களுடைய அரசால் தற்காலிக நிவாரணத்திற்காகக் கோரப்பட்ட தொகை 2,125.82 கோடி ரூபாய்; நீண்டகால சீரமைப்பிற்காக தொகை எதுவும் கோரப்படவில்லை. மொத்தமாக 2,125.82 கோடி ரூபாய் கோரப்பட்டது. ஆனால் மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி 317.17 கோடி ரூபாய்தான். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதுபோல, யார் மத்தியில் ஆட்சியில் இருந்தாலும் சரி; அப்போது தமிழ்நாட்டில் ஆள்கின்றவர்கள் யாராக இருந்தாலும், கேட்கின்ற நிதியை மத்திய அரசு வழங்குவதில்லை.

மத்தியிலும், மாநிலத்திலும் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போதே கோரப்பட்ட தொகை கிடைக்கவில்லை. நாங்கள் மாநிலத்தில் மட்டும்தான் ஆட்சியில் இருக்கிறோம். மத்தியில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், தேவையான நிதியை பெறுவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. என்னென்ன தேவைகளுக்கு எவ்வளவு நிதி தேவை என்று கேட்டிருக்கின்றோமோ அதையெல்லாம் பெறுவதற்குண்டான முயற்சிகளைத் தொடர்ந்து நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'காலையிலேயே குடிதண்ணீர் பிரச்சினையைப் பற்றி பேசினார்கள்' என்று சொன்னார்கள். ஆனால், இவையெல்லாம் தற்காலிகமாக செய்யக்கூடியவை. சென்னை மாநகரத்திற்கு குடிதண்ணீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இத்தனை ஆண்டுக்காலத்தில் இந்த

ஆட்சி என்ன செய்திருக்கிறது என்றால், செய்திருக்கிறார்கள். அதை நான் இல்லையென்று சொல்லவில்லை.

*பிற்பகல் 1-40*

காரணம் இதே அவையில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையினைப் படித்தார்கள். சென்னை குடிநீர் பிரச்சினைக்காகவும், கிருஷ்ணா நதிநீரைத் தேக்கி வைப்பதற்காகவும், இரண்டு புதிய ஏரிகள் கட்டப்படும். அந்த ஏரிகள் ஒன்று திருக்கண்டலம், இராமஞ்சேரி. இரண்டு, கண்ணன்கோட்டை-தேர்வாய்க்கண்டிகை ஆகிய இடங்களில் அமைக்கப்படும் என்று முன்னாள் முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்கள். இரண்டு பிரச்சினைகள். மூன்று திட்டங்கள். இன்னொன்று அந்த அம்மையார் அவர்கள் தெரிவித்தது 150 MLD கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம். ஆக, இந்த ஆட்சியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் 3. அதில் ஒன்றை முதலமைச்சர் அவர்கள் இங்கே படித்தார்கள். கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்று, இரண்டாவது திருக்கண்டலம், இராமஞ்சேரியில் புதிய ஏரி கட்டுவது, மூன்றாவது கண்ணன்கோட்டை-தேர்வாய்க்கண்டிகை.

திருக்கண்டலம் என்பது, திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே திருக்கண்டலம் என்ற இடத்தில் 1 TMC தண்ணீர் சேமிப்பதற்குரிய கொள்ளளவுகொண்ட நீர்த்தேக்கம் கட்டுவது. இதற்கு அரசு 20-11-2011 அன்று அனுமதித்தது. இத்திட்டத்திற்கு 1,376 ஹெக்டேர் தனியார் நிலத்தினை acquire செய்ய வேண்டியதாகிவிட்டது. ஆனால், முடியவில்லை. எனவே, திட்டத்தினை மாற்றினார்கள். ஒரு TMC கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்கத்திற்குப் பதில், அந்தத் தனியார் நிலம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை நாமே நீர்த்தேக்கத்தினை தனியாகக் கட்டுவோம் என்று அந்தக் கொள்ளளவினைக் குறைத்து 1 TMC-க்குப் பதில் 0.26 TMC கொள்ளளவு கொண்ட சிறிய நீர்த்தேக்கத்தினைக் கட்டுவோம் என்று மாற்றிவிட்டார்கள். அதன்பிறகு இது மிகவும் சிறியதாகப் போய்விட்டது என்பதால் இங்கு ஏன் நீர்த்தேக்கம் கட்ட வேண்டும், அதற்குப் பதில் ஒரு தடுப்பணையாக, check dam கட்டலாம் என்று இந்தத் திட்டத்தினை மாற்றினார்கள். அங்கு நீரின் அளவு குறைந்துவிட்டது. எனவே, நீர்த்தேக்கத்திற்குப் பதில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டலாம் என்று இந்தத் திட்டத்தினை மாற்றினார்கள். நீர்த்தேக்கத்திற்குப் பதில் தடுப்பணை கட்ட வேண்டும். இந்தத் தடுப்பணையை எங்கு கட்ட வேண்டும்? ஆற்றின் குறுக்கே கட்ட வேண்டும். கொசஸ்தலை ஆற்றின் அகலம் எவ்வளவு? 470 மீட்டர். தடுப்பணை கட்டுவதற்கு அரசாங்கம் 2012-ல் ரூ.35 கோடி ஒதுக்கிக் கொடுத்துவிட்டார்கள். ஒரு Engineer வந்து பார்த்தார். வந்து பார்த்தவுடன் சொன்னார். 470 மீட்டர் தூரத்திற்கு ஏன் தடுப்பணையைக் கட்ட வேண்டும்? 170 மீட்டர் அளவிற்கு கட்டினால் போதும் என்று குறைத்துவிட்டு வந்துவிட்டார். ஆக, 470 மீட்டர் அகலமுள்ள ஆற்றில் 175 மீட்டர் அகலத்திற்கு தடுப்பணை கட்டினால் போதும் என்று சொல்லிவிட்டார். அப்படியென்றால் கொள்ளளவும் குறைந்துவிடும். 0.26-லிருந்து 0.16 என்று கொள்ளளவைக் கொண்டுவந்துவிட்டார்கள். ஆக, 1 TMC-யிலிருந்து 0.26-க்கு வந்து, அதற்குப்பிறகு 0.16 ஆக ஆகிவிட்டது. உடனே tender விட்டு வேலையை முடித்துவிட்டார்கள். 2015-ல் வெள்ளம் வந்தது. தடுப்பணையின் இடது பக்க சுவர் உடைந்தது. பாதிதானே கட்டியிருக்கிறார்கள். வெள்ளம் வந்து அடித்தது. தடுப்பணையின் முக்கியப் பகுதியான 32 மீட்டர் தூரமும் வெள்ளத்தில் முழுவதுமாக, complete ஆக மூழ்கிவிட்டது. அந்தத் திட்டமே முடிந்து போய்விட்டது. அந்தத் திட்டத்தை மறுபடியும் செம்மைப்படுத்துவதற்காக ரூ.28 கோடியை தற்போது அரசாங்கம் அனுமதித்துள்ளது. இதையாவது அந்த திருக்கண்டலத்தில் சரியாகச் செய்தால் போதும்.





கண்ணன்கோட்டையில் இன்னொரு திட்டத்தை அறிவித்தீர்கள். அங்கு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக ஒரு வரைபடத்தினைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். Engineer வந்து OK செய்துவிட்டார். OK செய்தவுடன் அத்திட்டத்திற்கு ரூ.330 கோடி நிருவாக அனுமதி கொடுத்துவிட்டார்கள். ஆனால், அங்கேயும் private land acquire செய்ய வேண்டும். ஆனால், அதை acquire செய்யாமல் அந்த வேலையை execute செய்துவிட்டார்கள். என்ன நிலைமை என்று கேட்டால், தேவையான நிலத்தை, பொறுப்புள்ள குடிநீர் அலுவலர் ஒப்படைக்காத வரையில் எந்தப் பணியையும் செய்யக் கூடாது என்பது பொதுப் பணித் துறை தொகுப்பு, விதி 180 கூறியிருக்கின்றது. ஆனால், இங்கு திட்டத்திற்கான நிலத்தை கையகப்படுத்துவதற்கு முன்பாகவே ரூ.145 கோடிக்கு டெண்டர் விட்டுவிட்டார்கள். ஆனாலும் பணி முடியாத காரணத்தினால் பாதியிலேயே வேலை நின்றுவிட்டது.

*பிற்பகல் 1-45*

எவ்வளவு செலவானது என்று கேட்டீர்களென்றால் 330 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டதில் 186 கோடி ரூபாய் செலவானது. ஆனால், திட்டம் நிறைவேறவில்லை. ஆக, 2 திட்டங்கள் போட்டார்கள். ஒரு திட்டத்தின்கீழ், நீர்த்தேக்கம் தடுப்பணையாக மாற்றப்பட்டு, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. இன்னொரு நீர்த்தேக்கத் திட்டம், நிலம் கையகப்படுத்தப்படாத காரணத்தால் நின்று போய்விட்டது. போட்ட திட்டம் இரண்டு. இரண்டும் நின்றுபோய்விட்டது. இது ஒன்று. அடுத்து, 3-வது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்ய முடியாத சூழ்நிலையால்தான் காலதாமதமாகிவிட்டது. நிலம் கையகப்படுத்தப்பட்டு, இப்பொழுது பணிகள் நிறைவடைகின்ற நிலையில் இருக்கின்றன. உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ளும்பொழுது உங்களுடைய ஆட்சியில்கூடத்தான், வேலூரில், ஏரியில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அந்தத் திட்டம் அப்படியே நின்று போய்விட்டது. நாம் ஒரு திட்டத்தை அறிவிக்கிறோம். திட்டத்தை அறிவித்த பிறகுதான் அத்திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்துகின்றோம். ஆகவே, நிலத்தை கையகப்படுத்தும்பொழுது, அந்த நிலத்தினுடைய உரிமையாளர்கள் மனமுவந்து கொடுத்துவிட்டால் பிரச்சினை கிடையாது. சில பேர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். நீதிமன்றத்திற்குச் செல்லும்போது காலதாமதமாகிவிடுகிறது. அவர்களை சமாதானப்படுத்தி, சமாதானக் கடிதம் பெற்று, நில இழப்பீட்டுத் தொகையைக் கொடுத்துதான் அந்த நிலத்தைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த அடிப்படையில் இப்பொழுது கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம் நிறைவடைகின்ற நிலையில் இருக்கின்றது. இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் அது நிறைவேறிவிடும். ஆகவே, அடுத்த பருவமழையின்போது அதில் தண்ணீர் தேக்கப்படும்.

இன்னோர் இடம் திருநின்றவூர் என்று சொன்னீர்கள். அதில், தனியார் நிலம் பக்கத்தில் இருந்தது. அங்கே செங்கல்





சூளை வைத்து, அதை அறுத்திருந்தார்கள். பல ஆண்டு காலமாக, உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் அந்த இடத்தில் அந்த செங்கல் சூளை இருந்தது. அப்பொழுது, ஆற்றின் கரையோரமாக ஆழப்படுத்திய காரணத்தினால் அதில் தண்ணீர் அதிகமாக வந்ததால், அதிகப்படியான தண்ணீர் அந்த ஆற்றின் கரையை உடைத்துக்கொண்டுபோய், இந்தப் பக்கம் இருக்கின்ற தடுப்பையும் உடைத்துக்கொண்டு போய்விட்டதே தவிர வேறு எதுவும் கிடையாது. ஆகவே, அது ஒரு தடுப்பணை. அதில் வெள்ளம் அதிகமாக வந்தபொழுது இப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட சம்பவம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, அங்கே ஒரு தடுப்பணை கட்டுவதற்கான நடவடிக்கையும் அரசால் எடுக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் இதைக் கற்பனையாகச் சொல்லவில்லை. இவை முழுவதும் Accountant General Report-ல் சொல்லப்பட்டுள்ளதால், அவர்கள் mistake மாதிரி ஆகிவிட்டது, இரண்டு திட்டமும் பாழாகிவிட்டது என்று அவர்கள் கொடுத்திருக்கும் report தான். மூன்றாவது திட்டம் (குறுக்கீடு) அது பரவாயில்லை, சிறிய திட்டம். செய்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில்கூட நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே சென்னையில் போரூரில் பாலம் கட்டப்படுமென்று அறிவித்தீர்கள். அடிக்கல் நாட்டினீர்கள். ஆனால், அதற்கான நிலத்தைக் கையகப்படுத்தாமல் போய்விட்டீர்கள். நிலத்தைக் கையகப்படுத்தாததால் அந்த நில உரிமையாளர்கள் எல்லோரும் நீதிமன்றத்திற்குச்

சென்றுவிட்டார்கள். வழக்கு நீதிமன்றத்தில் பல ஆண்டு காலமாக நிலுவையில் இருந்து, பின்னர் அதில் தீர்ப்பைப் பெற்று, அம்மாவுடைய அரசுதான் அந்தப் பாலத்தைக் கட்டி முடித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எல்லா ஆட்சியிலேயும் நிலம் எடுப்பது பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் பல திட்டங்களுக்கு நிலம் எடுக்க முடியாமலேயே இருக்கிறது. அதிலும் புறவழிச் சாலைகள் அமைப்பதற்கு நிலம் எடுக்கவே முடியவில்லை. அந்தத் திட்டங்களை அறிவித்திருக்கிறோமே தவிர, நிலம் கையகப்படுத்தவே முடியவில்லை. ஏன், 10,000 கோடி ரூபாய் செலவில் விரைவுச் சாலைகூடத்தான் அறிவித்தோம். மிகப் பெரிய திட்டம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக பல்வேறு சாலைகளை அமைத்தீர்கள். அப்பொழுதெல்லாம் இப்போது உள்ளதுபோன்ற விழிப்புணர்வு கிடையாது. இப்பொழுது ஏதாவது பேசினால், அடுத்த நொடியிலேயே ஊடகத்தில் வந்துவிடுகிறது. அப்பொழுது உங்களுக்கு அந்தப் பிரச்சினை இல்லாமல் இருந்தது. நீங்கள் நிலத்தை easy ஆக எடுக்க முடிந்தது. ஆனால், இப்பொழுது அப்படி இல்லை. ஆகவே, நிலத்தை எடுக்கின்றபொழுது அந்த நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றாலோ அல்லது பல போராட்டங்கள் செய்வதன் காரணமாகவோ, அரசு போடுகின்ற திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற முடியவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-வது திட்டத்தை நிரந்தரமாகப் போட்டிருக்கலாம். அதைப்பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். அதாவது 150 MLD கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம். இந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜெர்மன் நாட்டில் கடன் வாங்கியதாகச் சொன்னார்கள். சுமார் 1,450 கோடி ரூபாய் ஜெர்மன் நாட்டில் கடன் வாங்கியிருக்கிறார்கள். 10-11-2016-ல் Tender விட்டார்கள். Tender-ஐ 15-9-2017-ல் open செய்தார்கள். அப்பொழுது 3 பேர் வந்தார்கள். ஒருவர், 31 ஆம் தேதிக்குமேல் time extend செய்யமாட்டோம் என்று கூறியதால் அவர் சென்றுவிட்டார். மீதம் இருக்கின்ற 2 பேர்களில், அவர்கள்





பெயர் எல்லாம் வேண்டாம், சொல்ல முடியாது. A என்பவர் 1,671 கோடி ரூபாய் quote செய்திருந்தார். B என்பவர் 2,430 கோடி ரூபாய் quote செய்திருந்தார். 1,671 கோடி ரூபாய் quote செய்தவர் L1. 2,430 கோடி ரூபாய் quote செய்தவர் L2. நியாயமாகப் பார்த்தால் L2-க்கு கொடுக்க முடியாது. ஆனால், என்ன நடந்தது என்றால், 2,430 கோடி ரூபாய் quote செய்தவர் ஒரு case போட்டார். L1 influence செய்துவிட்டார் என்று வழக்கு தொடுத்தார். அந்த வழக்கையெல்லாம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று நீதிமன்றத்தில் சொல்லிவிட்டார்கள். உடனே நம்முடைய Advocate General-ஐக் கூப்பிட்டு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். Advocate General அவர்கள் Metro Water Board-ஐக் கேட்டு பதில் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று கேட்டால், Chennai Metropolitan Water Supply and Sewerage Board has submitted an affidavit to the Court saying that based on the current status, it will be awarded to L1. ஒன்று, Lower tender-க்கு கொடுத்துவிடுவோம் அல்லது re-tender-க்கு நாங்கள் project செய்வோம் என்று சொன்னார்கள். இதில், re-tender வருவதற்கே வாய்ப்பில்லை. நீதிமன்றத்தில், Lower tender-க்குதான் கொடுப்போம் என்று சொன்னார்கள். Lower tender-க்குதான் கொடுத்திருக்க வேண்டும், இல்லையென்றால் re-tender-க்கு விட்டுவிடுவோம் என்று அதில் இன்னொரு clause சேர்த்துவிட்டார்கள். உடனே அவர்கள் Chennai Metropolitan Water Supply and Sewerage Board-க்கு அனுமதி கொடுத்துவிட்டார்கள். அங்கே இருப்பவர்கள் என்ன செய்வார்கள்? அதற்குப் பிறகு நிறைய அதிகாரிகள் நிதித் துறையில் இருக்கிறார்கள். ஒன்றுக்கு பத்து பேர் அதிகாரிகள் இருக்கிறார்கள். அதற்குமேல் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு ஒரு circular அனுப்பியிருக்கிறார்கள். Circular-ல் whether they can accept A or B. அதாவது, lower tender-ஐ accept செய்யலாமா? அல்லது re-tender விடலாமா? என்று கேட்டிருக்கிறார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், யாருக்கு வேண்டுமானாலும் அனுமதி கொடுங்கள். ஏனென்றால், கடன் பெற்று இரண்டரை வருடங்களாகிவிட்டன. இதற்கு 4 சதவிகித வட்டி என்று கணக்கிட்டால்கூட, வட்டி மட்டும் சிறிது, சிறிதாகச் சேர்ந்து ரூ.15 கோடி கட்டியிருக்கிறோம். மீண்டும் ஒரு முறை ரூ.15 கோடி வட்டி கட்டி, மறுபடியும், மறுபடியும் வருவதைவிட, இந்தப் பணியை யாராவது ஒருவருக்குக் கொடுத்து, இந்த திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*[2019 பிப்ரவரி 13*

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையில் பேசுகின்றபோது இதுகுறித்து பதில் சொல்லியிருக்கிறேன். 150 MLD தண்ணீரைப் பொறுத்தவரையில், முழுமையாக KfW ஜெர்மன் அரசின் நிதியுதவித் திட்டத்தின் மூலமாக ரூ.700 கோடியைப் பெற்றிருக்கிறோம். மொத்தமாக அவர்களிடம் கடன் வாங்கவில்லை. இது, 2013-2014 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டமாகும். அதற்குப் பிறகு, திருத்திய நிருவாக அனுமதி அரசாணை எண் 79, நாள் 28-7-2017-ல் ரூ.1,259.38 கோடிக்கு வழங்கப்பட்டது. அதன்படி, ஜெர்மன் வங்கியிடமோ அல்லது ஜப்பான் பன்னாட்டு முகமையிடமோ கடன் கோரும்போது நிறைய process இருக்கிறது. முதலில் மத்திய அரசின் அனுமதி பெற்று, அதன் பிறகு அந்தத் தொகையைப் பெறுவதற்குள் அதிக time ஆகிவிடுகிறது. அதுபற்றி முக்கியமாக. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அதைத் தொடர்ந்து, KfW மூலமாக ரூ.700 கோடி கடன் வாங்கியிருக்கிறோம். அவ்வளவு தொகைதான் அந்த நிறுவனம் கடன் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு, AMRUT திட்டத்தின்கீழ் 2015-2016-ல் ரூ.505 கோடி வாங்கியிருக்கிறோம். அதேபோல, ரூ.954 கோடியில் மத்திய அரசின் பங்கு 33 சதவிகிதம்; மாநில அரசின் பங்கு 20 சதவிகிதம் மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் பங்கு 47 சதவிகிதம் என்று AMRUT திட்டத்தின்கீழ் இதுபோன்றுதான் தொகையைப் பிரித்தெடுத்திருக்கிறோம். நிலையக் கட்டுமானத்தைப் பற்றித்தான் பேசினார்கள். இதிலும், நிலையம் அமைக்கும் பணிக்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு, ஜெர்மன் நிதி நிறுவனத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. அதாவது, ஒவ்வொன்றுக்கும் கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டதற்கும் சரி, அதற்கான permission-க்கும் சரி, tender பெறப்பட்டது. Tender opening ஆகிய அனைத்துமே ஜெர்மன் நிதி நிறுவனத்தின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். தனியாக அரசுப் பொறியாளர்கள் எதுவுமே செய்ய முடியாது. அந்த நிறுவனம் நிதி தருவதால், அவர்களின் Rules-க்கேற்பதான் செயல்பட முடியும்.



*2019 பிப்ரவரி 13]* [திரு. எஸ்.பி. வேலுமணி]

அதேபோன்று, விலைப்புள்ளி 25-9-2018-ல்தான் திறக்கப்பட்டது. அது மதிப்பாய்வில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரியவர்கள் 18-9-2018 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு 28-9-2018 அன்று விசாரணைக்கு வந்து, நிலுவையில் இருக்கிறது. மற்றொரு வழக்கும் தொடுக்கப்பட்டு இன்றுவரை நிலுவையில் இருக்கிறது.

எப்பொழுதுமே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதைப்பற்றி சட்டமன்றத்தில் இந்த அளவிற்கு deep ஆகப் பேசியதில்லை. இன்றைக்கு நீங்கள் அந்த அளவிற்கு deep ஆகப் பேசியதால், நாங்கள் deep ஆகப் பதில் சொல்கிறோம். நாங்கள் எதுவுமே சொல்லவில்லை. ஆனால், நீங்கள் பேசினீர்கள். நீங்கள் பேசியதற்குத்தான் நாங்கள் பதில் சொல்கிறோம். ஆனால், 31-1-2019 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது 18-2-2019-க்கு ஒத்திவைக்கப்பட்டது. இருவருமே எப்படி வேண்டுமானாலும் argument செய்யலாம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், வேகமாகத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும், அதற்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு நிதியைப் பெற்றிருக்கிறோம். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தெல்லாம் கிடையாது.

அதேபோன்று, இந்நிலையத்தைச் செயல்படுத்த கடல்சார் ஒழுங்குமுறை ஆணையத்தின் தடையின்மைச் சான்றிதழை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ மாற்றத்திற்கான அமைச்சகத்தின் வாயிலாக 31-10-2018 அன்றுதான் பெற்றிருக்கிறோம். வழக்கின் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர்தான் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க இயலும்.

அதேபோன்று, நீங்கள் பேசுவது ஒரு part-தான். இன்னொரு part இருக்கிறது. குழாய் பதிக்கும் பணிக்காகப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நாள் 13-6-2018. இதையும் KfW-க்கு அனுப்புகிறோம். அதற்குப் பிறகு தொழில்நுட்பத் தகுதியையெல்லாம் பார்த்துவிட்டு, 2018-2019 ஆம் ஆண்டைய விலை நிலவரப்படி மறு மதிப்பீடு செய்யப்பட்டு, திருத்திய ஒப்பந்தப்புள்ளி மீண்டும் கோரப்பட்டு, ஜெர்மன் நிதி நிறுவனத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மீண்டும் 25-1-2019-ஐ இறுதி நாளாகக் கொண்டு மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, முதலில் 5 Contractors முன்வந்தார்கள்; பின்னர், 3 Contractors முன்வந்தார்கள். இதில், நீதிமன்றம் கருத்து

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 பிப்ரவரி 13

தெரிவித்ததற்குப் பிறகு வேறு எந்த மாற்றமும் கிடையாது. KfW-வின் அறிவுரைப்படிதான் நமது அரசு செயல்படுகிறது. நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி வேகமாகச் செயல்பட்டு கண்டிப்பாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்துவிடுவோம்.

*பிற்பகல் 1-55*

அதேபோல இன்று காலையிலே சொன்னேன். 100 மில்லியன் லிட்டர் தண்ணீர் திட்டத்திற்கு நீங்களும் நிதி பெற்றீர்கள். அதற்கும் நீங்கள் 17-3-2009 அன்று நிதி பெற்றீர்கள். அதற்குப் பின்னர் 22-10-2010, அதாவது கிட்டத்தட்ட 1 வருடம் 9 மாதங்கள் கழித்துதான் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். 1 வருடம் 9 மாதங்கள் ஆகியிருக்கின்றது. ஆகவே, பெரிய திட்டங்களைக் கொண்டுவரும்போது நாம் வேண்டுமென்றே delay செய்வது கிடையாது. நீதிமன்றத்திற்குப் போனாலோ அல்லது வங்கியில் கடன் பெற்றாலோ அவர்களுடைய அறிவுரைப்படிதான் நடக்க வேண்டியிருக்கிறது. அதேபோல வேலூர் மாவட்டத்தில், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நீங்கள் அறிவித்தீர்கள். அதில் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டமும் ஒன்று. டெண்டரே விடவில்லை, எதுவுமே செய்யவில்லை. நீங்களும், அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் அடிக்கல் நாட்டினீர்கள். அந்த 8 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் நிதியொதுக்கி டெண்டர் விட்டார்கள். ஆகவே, இதுகுறித்துப் பேசினால் பேசிக்கொண்டேயிருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்; இந்த 150 MLD குடிநீர்த் திட்டத்தை அம்மா அவர்கள் அறிவிக்கவில்லை. 400 MLD குடிநீர்த் திட்டத்தை அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு திட்டங்களையும் கூடியவிரைவில் நாங்கள் செயல்பாட்டுக்குக் கொண்டுவருவோம். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.



2019 பிப்ரவரி 13]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் சொன்னார்கள். நான் அதில் உள்ளே போகவில்லை. நான் கேட்கிற கேள்வி, low tender 1,600 கோடி ரூபாய்க்குக் கேட்ட L1 க்குக் கொடுக்கப் போகிறீர்களா, 2,400 கோடி ரூபாய் quote செய்திருக்கிறாரே அவருக்குக் கொடுக்கப் போகிறீர்களா? என்பதுதான். அதை நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுங்கள். Court, Metro Water-டம் கேட்டு வாருங்கள் என்று சொல்கிறது. Metro Water-க்கு circular அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் decide செய்யப் போகிறீர்கள். எதைச் செய்யப் போகிறீர்கள்? Either you are going to award the tender or go for retender?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் என்ன சொல்லப்போகிறது என்பது தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் Tender Act இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொன்றிற்கும் KfW சொல்கிற அறிவுரைப்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். Tender opening எதுவும் நாம் செய்ய முடியாது. எல்லா முடிவும் அவர்கள்தான் எடுக்கிறார்கள். இதில் அம்மாவின் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வேகமாக tender முடித்து திட்டத்தைத் துவங்க வேண்டும் என்பதுதான் நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகு நாம் பார்த்துக்கொள்ளலாம். அடுத்து, நமக்கு நிதி கொடுப்பது குறித்து பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்தார்கள். நாங்கள் அவர்களிடம் நிதி கேட்கும்போது, அவர்கள் காலதாமதம் செய்கிறார்கள். ஆனால், நமக்கு உரிமையானதைக் கொடுப்பதற்கு ஏன் காலதாமதம் செய்கிறார்கள்? 2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பல்வேறு இடங்களில் மத்திய அரசிடமிருந்து வரப்பெற வேண்டிய நிதி குறித்து மாண்புமிகு

[திரு. துரைமுருகன்] [2019 பிப்ரவரி 13

முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதில் பக்கம் 5-ல் GST-ல் 5,454 கோடி ரூபாய் நமக்கு வரவேண்டியதிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு இடத்தில் 455.16 கோடி ரூபாய் அளவிலான உறுதிசெய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையும் மத்திய அரசிடமிருந்து வரவேண்டியதிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 32 இல், உள்ளாட்சித் துறையில் 2017-2018 ஆம் ஆண்டிற்கான சிறப்பு செயல்பாட்டு நிதியுதவியாக வழங்கப்பட வேண்டியது ரூ.560 கோடி. அந்தத் தொகையும் இன்னும் வரவில்லை. 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொதுவான அடிப்படை நிதியுதவியாகவும் மற்றும் சிறப்பு செயல்பாட்டு நிதியுதவியாகவும் 3,852.17 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. பக்கம் 47-ல் பள்ளிக் கல்வி. 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' திட்டத்தின்கீழ் 2,109.08 கோடி ரூபாய். 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்' திட்டத்தின்கீழ் 1,092.22 கோடி ரூபாய். ஆக, மத்திய அரசு தமிழகத்திற்கு 13,552 கோடி ரூபாயை நமக்கு இப்பொழுது வழங்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், ஆதி திராவிட மாணவர்களுக்கு இன்னும் நிதி கொடுக்கவில்லை என்று அன்றுகூட சொன்னேன். அதில் 1,000 கோடி ரூபாய் இன்னும் கொடுக்கவில்லை. அதைக்கூடக் கொடுக்காததால் கொஞ்சம் வேகப்படுத்தி வாங்க வேண்டுமென்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குரிய post-matric scholarship நேற்று முன்தினம் 822 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து வந்து சேர்ந்துவிட்டது. ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள் அந்த நிதி வரவேண்டுமென்று கூற முற்பட்டபொழுது, நான் அந்தத் தொகை வந்துவிட்டது என்று பதில் சொன்னேன். உடனே அவரும் அந்தத் தொகை வந்துவிட்டது என்பதற்கு நன்றியையும் சொல்லிவிட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 பிப்ரவரி 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம். இது உங்களுடைய 2023 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டம்; உங்களுடைய கனவுத் திட்டம். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் என்ற ஒன்றினை உருவாக்குவோம் என்று 2011-2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பக்கம் 32-ல் கூறியிருக்கிறீர்கள்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். 2013-2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 15-ல், அடுத்த பத்தாண்டுகளில் 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான மொத்த முதலீடுகளைப் பெறுவதை, தொலைநோக்குத் திட்டம்-2023 இலக்காகக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறீர்கள். அதன்மூலம் வேளாண்மை மற்றும் பாசனத் துறைக்கு 1.27 இலட்சம் கோடி ரூபாய், நகர்ப்புற கட்டமைப்பிற்கு 2.59 இலட்சம் கோடி ரூபாய், போக்குவரத்து மற்றும் சாலைகளுக்கு 3.65 இலட்சம் கோடி ரூபாய், மனித ஆற்றல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 0.6 இலட்சம் கோடி ரூபாய். மேற்சொன்ன இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்த தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு, 2013-2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 2,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 2014-2015 மற்றும் 2015-2016 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை. மாறாக, 2016-2017 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 6-ல், மீண்டும் 2,200 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். 2017-2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 6-7-ல், திட்டம் தயாரிக்க மறுபடியும் 2,200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான ஆதாரங்களின் ஒரு பகுதியை தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி

மேலாண்மை கழகத்தின்மூலம் திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கூறியிருக்கிறீர்கள். 2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 6-ல், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகம் இதுவரையில் 1,925 கோடி ரூபாய் நிதியைத் திரட்டியுள்ளதுடன், நீர்மின் திட்டங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், வர்த்தக மையங்கள், சாலைகள் அமைத்தல், வாங்கும் திறனில் வீடுகள் கட்டுதல், பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க உள்ளது என்று கூறியிருக்கிறீர்கள். நிதியுதவி அளிக்க உள்ளது என்பதற்கே எட்டு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் இன்னும் கொடுக்கவில்லை. 2013-2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 5-ல், 10 ஆண்டுகளில் 15 இலட்சம் கோடி ரூபாய் இலக்கு என்று நீங்கள் சொன்னது எப்போது முடியும் என்றுதான் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதேபோன்று இன்னொரு திட்டமும் உள்ளது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் என்ற ஓர் அமைப்பினை இந்த அரசு, அமைக்கப்போவதாக 2011-2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தார்கள். 2011-2012 காலக்கட்டத்தில், வேலைக்காக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 68 இலட்சம் பேர் பதிவு செய்திருந்ததாகக் கூறப்படுகிறது. இந்திய தொழில் கூட்டமைப்பு, 2015 ஆம் ஆண்டில் 130 இலட்சம் முதல் 150 இலட்சம் வரை திறன்மிக்க பணியாளர்கள் தேவை எனக் கூறியிருந்தது. ஆக, 2015-2016 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 2023 ஆம் ஆண்டிற்குள் 2 கோடி நபர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நிதியை ஒதுக்கியிருக்கிறீர்கள். அதாவது, 2023 ஆம் ஆண்டிற்குள், 2 கோடி பேர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும் என்று 2015-2016 Financial Statement-ல் தெரிவித்திருக்கிறீர்கள். இதற்காக 2012-2013 ஆம் ஆண்டில் 75 கோடி ரூபாய், 2013-2014 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய், 2014-2015 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய், 2015-2016 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய், 2016-2017 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய், 2017-2018 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய், 2018-2019, 2019-2020 ஆம் ஆண்டுகளில் தலா 200 கோடி ரூபாய் என இதுவரை சுமார் 1,125 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் 2018-2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, பக்கம் 10-ல் இதுவரை





4.3 இலட்சம் பேருக்குத்தான் திறன் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறீர்கள்.

பிற்பகல் 2-05

8 ஆண்டுகளில், ஆண்டுக்கு 54 ஆயிரம் பேர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஆக, நீங்கள் பயிற்சி கொடுக்கப் போகிறோம் என்று சொல்வது 2 கோடி பேருக்கு. இந்த range-ல் போனால் 320 ஆண்டுகளாகும். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் ஏற்கெனவே 83 இலட்சமாகி விட்டார்கள். இத்துடன் மீண்டும் இந்தப் பணம் போதாது என்று, இந்த நிதிநிலை அறிக்கையிலே 51.6 கோடி ரூபாய் பிரதம மந்திரியிடம் கேட்கிறீர்கள். இது ஆமை வேகத்தில் நடக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்பொழுது வேலைவாய்ப்புப் பற்றிப் பேசினார்கள். அதாவது, 2 கோடி பேர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்படும் என்றும் கூறினார்கள். தமிழகத்தில் 87 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வோராண்டும் 1 இலட்சம் மாணவர்களுக்குமேல் திறன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தத் திறன் பயிற்சி அளித்த பிறகு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக Mega Job Mela நடத்தப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 23 தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டன. நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்தபிறகு 3 தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையங்களில் நம்முடைய இளைஞர்களுக்கு திறன் பயிற்சியளித்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

[2019 பிப்ரவரி 13

**திரு. துரைமுருகன்:** அடுத்து தொழில் துறை. இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நீங்கள் சமீபத்திலே நடத்தினீர்கள். அந்த மாநாட்டில் 3 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து, 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டோம். இதனால் வருங்காலத்தில் 10.45 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றெல்லாம் பிரகடனப் படுத்தியிருக்கிறீர்கள். இவையெல்லாம் நடந்தால் முதலில் மகிழ்ச்சியடைகிறவன் நான்தான். ஏனென்றால், நாட்டுக்கு அவ்வளவு பெரிய திட்டம் இது. ஆனால், உங்களையெல்லாம் உருவாக்கிய சர்வ வல்லமை படைத்த முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்கள், 2015 செப்டம்பரில் இதேபோல் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினார்கள். அப்பொழுது அம்மையார் என்ன சொன்னார்கள் என்றால், 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டதில் ரூ.2.45 இலட்சம் கோடிக்கு முதலீட்டை ஈர்த்திருக்கிறோம். இதனால் 4.7 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று முன்னாள் முதலமைச்சர் சொன்னார்களே, இதில் எத்தனை இலட்சம் பேருக்கு இப்பொழுது வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அடுத்து, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அம்மையார் காலத்திலே போடப்பட்டன. இதிலே எத்தனை * செயல்பாட்டில் இருக்கிறது என்பதை எங்களுடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் கேட்டார்கள். ஒரு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-10

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பல்வேறு முறை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன் GIM--Second Global Investors Meet 2019-ல் நடைபெறும்போது கூட, கடந்த 2015-ல் என்ன நடந்தது; அதில் 64 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. 28 நிறுவனங்கள் component உற்பத்தியை start செய்திருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2019 பிப்ரவரி 13] [திரு. எம்.சி. சம்பத்]

8 நிறுவனங்கள் yet to be started-ல் இருக்கின்றன. இன்னும் 6 நிறுவனங்கள் 50 சதவிகிதம் நடவடிக்கையில் இருக்கின்றன. 6 நிறுவனங்கள் மட்டும் pending-ல் இருக்கின்றன. Reason என்னவென்று கேட்டால், Oil Refinery Unit-Al Kharafi நிறுவனமும் கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்திருக்கிறது. அடுத்து NOCL 18 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு Refinery Unit-ல் முதலீடு செய்திருக்கிறது. இதன்மூலம் 1,17,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. மீதியிருக்கிற நிறுவனங்களை நிலுவையிலிருக்கிற புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஒப்பந்தம் போட்ட முதலீட்டாளர்களுடைய நிறுவனங்களை நமது முதன்மைச் செயலாளர் உட்பட, Industries Department மூலம் நாங்கள் track செய்துகொண்டே இருக்கிறோம். என்ன நிலைமை, எப்போது வருவீர்கள் என்று நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். இதற்கு ஏன் வெள்ளை அறிக்கை தேவை? அடிக்கடி வெள்ளை அறிக்கை கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். உங்களுடைய காலத்தில் Global Investors Meet நடைபெறவில்லை. ஒரு விஷயம் இருக்கிறது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2015-ல் Global Investors Meet-ஐ நடத்தினார்கள். வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. மேலும், 2019-ல் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள் Global Investors Meet-ஐ மிகப் பெரிய அளவில் நடத்தினார்கள். கடந்த முறை எங்களுக்குக் கிடைத்த அனுபவத்தின் காரணமாக மிகச் சிறப்பாக நடத்தியிருக்கிறோம். இது great success. மிகப் பெரிய வெற்றியடைந்திருக்கிறோம். 304 நிறுவனங்கள் வந்திருக்கின்றன. 3 இலட்சத்து 431 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் வந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, 10 இலட்சத்து 45 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதியளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு ஏன் நீங்கள் தொடர்ந்து வெள்ளை அறிக்கை வேண்டுமென்று கேட்கிறீர்கள்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட ரோட்டில் செல்பவர்களையெல்லாம் கூப்பிட்டு வந்து நடத்தினார்கள் என்று குறிப்பிட்டார். முதலீட்டாளர்களை இவ்வளவு தரக்குறைவாகப் பேசலாமா? மதிக்கப்படக்கூடியவர்கள் முதலீட்டாளர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இரண்டு நாட்களுக்கு முன்புகூட ரிலையன்ஸ் நிறுவனத்தினுடைய அதிபர் வந்து பார்த்திருக்கிறார். அப்போது அவர்கள் எப்படி? அதுமட்டுமல்ல, நமது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் முதலமைச்சர்

[திரு. எம்.சி. சம்பத்] [2019 பிப்ரவரி 13

கலைஞர் கருணாநிதி அவர்களின் மறைவிற்கு பல்வேறு முதலீட்டாளர்களைக் கொண்டு புகழஞ்சலி செலுத்தினீர்கள். அதில் கலந்துகொண்ட திரு. வேணு சீனிவாசன் அவர்கள், திரு. பழனி பெரியசாமி அவர்கள், திரு. கருமுத்து கண்ணன் அவர்கள் போன்ற பல்வேறு முதலீட்டாளர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அவர்களெல்லாம் யார்? அவர்கள் தொழில் முதலீட்டாளர்கள் அல்லவா? இதுபற்றி விவாதம் நடத்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்அவர்கள் தயாரா? நான் வரத் தயார். நாங்கள் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை போட்டிருக்கிறோம். உண்மையான முதலீட்டாளர், அதுமட்டுமல்ல; முதலீட்டாளர்களை கொச்சைப்படுத்தி, bank-ல் default ஆனவர்கள் என்றெல்லாம் சொல்கிறார். அது எந்தவிதத்தில் நியாயம்? 30 சதவிகிதம் equity-யை வைத்துக்கொண்டு, மீதி 70 சதவிகிதம் loan வாங்கித்தான் எந்த முதலீட்டாளரும் தொழில் தொடங்குவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய industrialists-ம் எங்களோடு தொடர்பில் இருக்கிறார்கள். கொச்சைப்படுத்துகிற வார்த்தையை ஏன் நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்பதை நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்ல, முதலீட்டாளர்களைப் பொறுத்தவரையில், ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கும், youngsters-க்கு வேலைவாய்ப்பு கொடுக்கவும் வருகின்றார்கள். நம்முடைய இளைஞர் சமுதாயத்திற்கு வேலைவாய்ப்புக் கொடுத்து, பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு வருகின்றார்கள். அவர்களை அதாவது, சாலையில் போகிறவர்களை coat போட்டு உட்கார வைத்திருக்கிறார்கள் என்று சொன்ன அந்த வார்த்தை எந்தளவுக்கு நியாயம் என்பதை நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இதெல்லாம் real. Global Investors Meet-ஐப் பொறுத்தவரைக்கும், உண்மையாக நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடு. இதன்மூலம் கிட்டத்தட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. Industries Department-ஐ பொறுத்தவரைக்கும், 146 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை போட்டிருக்கிறார்கள். திரு. வேணு சீனிவாசன் அவர்கள் 1,700 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறார். அவர் ரோட்டில் போகிறவரா? அதுமட்டுமல்ல, Hyundai நிறுவனம் 7,000 கோடி ரூபாய் அளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். CPCL நிறுவனம் 28 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது.



2019 பிப்ரவரி 13] [திரு. எம்.சி. சம்பத்]

அவர்களெல்லாம் ரோட்டில் செல்பவர்களா? Hanon ரூ.500 கோடி அளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. Mando 800 கோடி ரூபாய் அளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. Saint Gobain 720 கோடி ரூபாய் அளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. இதுமாதிரி பல்வேறு நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை போட்டிருக்கின்றன. ஜப்பான் நிறுவனமான Yanmar 500 கோடி ரூபாய் அளவுக்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. பின்லாந்து நிறுவனம் ஒப்பந்தம் போட்டிருக்கிறது. இவர்களெல்லாம் ரோட்டில் செல்பவர்களா? அவருடைய தகுதிக்கு இந்த வார்த்தை தேவையா என்பதைக் கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுகிறபோது ** என்று ஒரு வார்த்தையைச் சொன்னீர்கள். அந்த வார்த்தை கேட்பதற்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பில் வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** அதை நீங்கள் என்னிடம் கேட்கவே வேண்டாம் சார். You are entitled to expunge anything, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைக்குப் பதிலாக, ‘எவ்வளவு செயல்பாட்டில் இருக்கிறது?’ என்று மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நான் அதைச் சொல்லவே இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டார். நான் முதலிலே சொன்னேன். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்த பின்னர் நீங்கள் சொல்லுங்கள். அதாவது, இந்தத் திட்டமெல்லாம் நிறைவேறினால், அதுகுறித்து முதலிலே மகிழ்ச்சியடைகிறவன் துரைமுருகன்தான் என்று நான் சொன்னேன். காரணம், யார் ஆட்சி நடத்தினால் என்ன? நாட்டுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. துரைமுருகன்] [2019 பிப்ரவரி 13

நல்லது நடந்தால் பாராட்ட வேண்டும். ஆனால், நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? சினிமாவில், ‘அவர் வந்திருக்காரு, இவர் வந்திருக்காரு; வாம்மா மின்னல், உங்க அண்ணன் வந்திருக்காரு’ என்று சொல்வதைப்போன்று, (சிரிப்பு) அவர் வந்திருக்கிறார், இவர் வந்திருக்கிறார் என்று சொல்வது, என்ன சார் இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டு போன்று அதைச் சொன்ன காரணத்தினாலேதான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். வேறு எதுவும் சொல்லவில்லை. ஏனென்றால், 2015-ல் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினீர்கள். எவ்வளவு முதலீடுகள் வந்தன என்று கேட்டீர்கள். இப்போது 2019-ல் நடத்தினீர்கள், எவ்வளவு முதலீடு வந்திருக்கிறது என்று கேட்டீர்கள். அதற்குத்தான் அவர் பதில் சொன்னார்.

பிற்பகல் 2-15

ஆகவே, எந்தெந்த நிறுவனங்களின்மூலம், எவ்வளவு முதலீடுகள் தமிழகத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்ற தகவலைச் சொல்லியிருக்கின்றார். ஆகவே, யார் ஆட்சிக்கு வந்தாலும், தமிழகத்தில் புதிய தொழில்களைத் தொடங்க வேண்டுமென்பதுதான் அனைவருடைய விருப்பம். அந்த விருப்பத்தின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். நான் கேட்டது, அம்மையார் அவர்கள் இருந்த காலத்தில், 4 இலட்சம், 7 இலட்சம் பேர்களை வேலைக்கு எடுப்போம் என்று சொன்னார்களே, அது எவ்வளவு என்று கேட்டேன். 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் எத்தனை



2019 பிப்ரவரி 13] [திரு. துரைமுருகன்]

இன்றைக்கு * செயல்பாட்டில் இருக்கின்றன என்று கேட்டேன். அவ்வளவுதானே? அதற்குப் பதில் இருந்தால் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை; முடிந்து போய்விட்டது. (குறுக்கீடு) முடிந்துபோய்விட்டது என்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக Global Investors Meet-ஐப் பொறுத்தவரையில், பன்னாட்டு நிறுவனங்கள் கலந்துகொள்கின்ற ஒரு meeting ஆகும். அதில் தைவான், பிரான்ஸ், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களெல்லாம் வந்திருந்தார்கள். Global Investors Meet நடைபெறுகின்றபோது, நீங்கள் Road Roko செய்தீர்கள். அதுமட்டுமல்ல; இது எங்கள் கட்சிக் கூட்டமோ, உங்கள் கட்சிக் கூட்டமோ இல்லை. ஆதலால், simple ஆக ரோட்டில் செல்கின்றவர்களை அழைத்து வந்து, உட்கார வைப்பதாக, அந்த வார்த்தையைச் சொல்வது என்பது முதலீட்டாளர்களுடைய மனநிலையை புண்படுத்துகின்ற வார்த்தை என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இதோடு விடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் இதை objection செய்கிறேன். Road-ல் போகின்றவர்கள் என்ன கேவலமானவர்களா? ‘Road-ல் போகின்றவர்களை போன்று’ என்று சொல்கிறீர்களே? அதை நான் objection செய்கிறேன். (குறுக்கீடு) இதோடு விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திறமையானவர். அதை எப்படிச் சமாளிக்க முடியும் என்ற அத்துணை வித்தைகளுமே உங்களிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயம். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 13

சொல்லியிருக்கிறார். அதைத்தான், அவர் கோடிட்டுக் காட்டியிருக்கிறாரே தவிர, வேறொன்றும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். 2011-2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 43-ல், (1) ரூ.4,800 கோடி மதிப்பீட்டில் 800 மெகா வாட் உடன்குடி விரிவுத் திட்டம், (2) ரூ.9,600 கோடி செலவில் 1,600 மெகா வாட் உப்பூர் அனல் மின் திட்டம், (3) ரூ.3,600 கோடியில் 40 ஆண்டுகள் பழமை வாய்ந்த எண்ணூர் அனல் மின் இயந்திரத்திற்குப் பதிலாக 600 மெகா வாட் திறன் கொண்ட புதிய மின் இயந்திரம் நிறுவும் திட்டம், அடுத்து, நான்காவது, ரூ.4,800 கோடி செலவில் 800 மெகா வாட் தூத்துக்குடி நான்காம் நிலை உற்பத்தித் திட்டம் ஆகியவை தொடங்கப்படும். இதனால் ரூ.22,800 கோடி செலவில் 3,800 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று கூறியிருந்தீர்கள். நான் கேட்கிறேன், இந்தத் திட்டங்களில், எவை நடைமுறைக்கு வந்திருக்கின்றன? 3,800 மெகா வாட் குறித்து நீங்கள் 2011-ல் சொன்னது. இப்போது எவ்வளவு மெகா வாட் வந்திருக்கிறது? அதேபோல, 2011-2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் உடன்குடி மின் திட்டத்தை State Sector-ரே எடுத்து நடத்த முடிவு செய்து, எடுத்து நடத்தினீர்களே, அது என்ன நிலையில் உள்ளது? அது, 1,600 மெகா வாட் திறன். அதிலே உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது? இந்தத் திட்டத்தின்மூலம் ஐந்தாண்டுகளில் உற்பத்தி தொடங்கும் என்று கூறியிருந்தீர்களே? ஐந்தாண்டுகளில் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றதா? ஏதாவது ஒரு திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கின்றதா? (குறுக்கீடு) ஏனென்றால், அவர் பதில்சொல்லும் வகையில், நான் மொத்தமாகச் சொல்லிவிடுகிறேன்.

அடுத்து, 2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இரண்டு வருடங்களில் 151 நகரங்கள் மற்றும் மாநகரங்களில் நகராட்சி கழிவுகளைக் கொண்டு 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என 2011 ஆம் ஆண்டு அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். அது நடந்திருக்கிறதா? ஆக, இவற்றிற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும். ஆனால், இந்த ஆண்டு என்ன சொல்லியிருக்கிறீர்கள்?



2019 பிப்ரவரி 13] [திரு. துரைமுருகன்]

அதிகரித்து வரும் மின் தேவைக்கு ஏற்ப, 13,000 மெகா வாட் அளவிற்கு மாநிலத்தின் அனல் மின் திட்டங்களை 91,880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கூறியிருக்கிறீர்கள். ஏற்கெனவே சொன்னவை என்னவாயிற்று? இப்போது, மீண்டும் 91,880 கோடி ரூபாயில் நாங்கள் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாகச் சொல்கிறீர்களே, இவையெல்லாம் அறிவிப்பா அல்லது ஆக்கப்பூர்வமான பணியா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன அத்துணை திட்டங்களும் வரவிருக்கின்றன. சில காரணங்களினால் காலதாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 2-20

உப்பூரைப் பொறுத்தவரையில், உங்களுக்கும் தெரியும். மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோதுகூட சொன்னார்கள், மீனவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்; நீதிமன்றத்திலே தீர்ப்பு வரும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆக, ஒரு திட்டத்திற்குப் போகின்றபோது பல இடையூறுகள் வருகின்றன. நான் கடந்த முறைகூட சொன்னேன். குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அங்கே இடம் எடுக்கின்றபோது உங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர்தான் அங்கே ஒரு போராட்டத்தை நடத்தி, நான் வேண்டுமென்று சொல்லவில்லை. இதுபோன்று தடங்கல்கள் வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற திட்டங்கள் காலதாமதமாகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபோதுகூட, போரூர் பாலத்திற்காகச் சொல்கின்றபோது, 'நீங்கள் திட்டத்தைப் போட்டீர்கள்; நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் காலதாமதமாகிவிட்டன; மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில்தான் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டன' என்று சொன்னார்கள். இப்பொழுது, கிட்டத்தட்ட 2027-க்குள் 13,000 மெகா வாட் மின்சாரம் கொண்டு வருகின்ற அந்தத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு, வருகின்ற

[திரு. பி. தங்கமணி] [2019 பிப்ரவரி 13

டிசம்பருக்குள் வட சென்னையில் கிட்டத்தட்ட 800 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் பணிகளை நாம் துவங்கவிருக்கின்றோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக இந்தத் திட்டத்தைத் துவங்கவிருக்கின்றார்கள். அதற்கான பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்துணைப் பணிகளும், எந்தத் தேதியிலே, எந்த ஆண்டு முடியும் என்று வேண்டுமானால் தெளிவாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

எண்ணூரைப் பொறுத்தவரையில், அந்தப் பணியை எடுத்த M/s.Lanco Infra Tech Ltd. என்ற அந்த கம்பெனி loss ஆகிவிட்டது. அவர்கள் loss ஆகிவிட்ட காரணத்தினால் போய்விட்டார்கள். இப்பொழுது ஒரு புதிய டெண்டர் போடப்பட்டிருக்கின்றது. 25 சதவிகிதப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. புதிய ஒப்பந்ததாரர் வந்ததற்குப் பின்னால்தான் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும். அவர்கள் loss ஆன காரணத்தினால்தான் அது காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது.

உடன்குடியைப் பொறுத்தவரையில், இப்பொழுது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே, Coal jetty ஆரம்பிப்பதிலே மட்டும்தான் மீனவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் அவர்களை அழைத்துப் பேசியிருக்கின்றார்கள். ஆகவே, இதுபோன்று நிலம் கையகப்படுத்துவதிலோ, இல்லை, எங்காவது ஒரு திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், உடனே, ‘சாம்பல் வருகின்றது; அதற்காக நீங்கள் இங்கே போடக் கூடாது’ என்று ஒருசில பகுதிகளிலே எதிர்க்கிறார்கள். ஒருசில பகுதிகளிலே இடம் கையகப்படுத்துவதிலே பிரச்சினைகள் வருகின்றன. ஆக, இதையெல்லாம் எதிர்கொண்டுதான் நாம் இந்தப் புதிய திட்டங்களைக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. அது நீங்களாக இருந்தாலும், நாங்களாக இருந்தாலும் அதுதான். ஏனென்றால், தமிழ்நாட்டு மக்களுடைய நிலைமை இப்போது என்னவென்றால், எந்தத் திட்டம் வந்தாலும் நிலம் கையகப்படுத்தினோமென்று சொன்னால், அதை உடனடியாக எதிர்க்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கின்ற காரணத்தினால்தான் இந்தக் காலதாமதம் ஆகின்றது. இந்த 13,000 மெகா வாட் மின்சாரமும் 2027-க்குள் முழுமையாக வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 பிப்ரவரி 13] [திரு. பி. தங்கமணி]

இந்தப் புதிய திட்டங்கள் வருகிறவரைக்கும், இனிமேல் எதிர்காலத்தில் என்ன தேவை இருக்கின்றதோ, அவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோதே இந்தத் திட்டங்களையெல்லாம் அமைத்திருக்கின்றார்கள். தமிழகத்தில் இனிமேல் எப்பொழுதுமே மின் வெட்டு இல்லை என்ற நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலைமையை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணை தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் இந்தத் திட்டங்களெல்லாம் இன்னும் 5 ஆண்டுகளில் முடியும் என்று சொன்னீர்கள். அதனால்தான் நான் கேள்வி கேட்டேன். அதனால் ஒன்றுமில்லை. நீங்கள் மின் மிகை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறதென்று சொன்னீர்கள்; இருக்கலாம். என்ன செய்வது? வருமானம் போதவில்லையென்றால் கடன் வாங்கி எல்லா செலவும் செய்கிறோமல்லவா! அதுமாதிரிதான் நீங்கள் கடன் வாங்கி, மின்சாரம் வாங்கி, விலை கொடுத்து வாங்கிக் கொடுக்கிறீர்கள். அது குறித்து எனக்கு ஒன்றுமில்லை. நீங்கள் என்ன செய்தீர்கள்? அதைச் சொல்லுங்கள். கடன் வாங்கிச் செய்வது உங்கள் சாமர்த்தியம். நீங்கள் என்ன செய்தீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்த வாதத்திற்கு வந்ததினால் நான் இதை எடுத்து வைக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. 2001-லிருந்து 2006 வரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம். அப்பொழுது தமிழகத்தினுடைய மின் தேவை அதிகபட்சமாக 9,500 மெகா வாட் அளவுக்குத்தான் இருந்தது. ஆனால், நிறுவுதிறன் 10,011 மெகா வாட் இருந்தது. 2006 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தீர்கள். ஆட்சிக்கு வந்து, கடைசி வரை, அதாவது 2011 மார்ச் வரை அதிகபட்சத் தேவையென்று சொன்னால் 9,900 மெகா வாட்தான் இருந்தது. ஏன் 15 மணி நேரம் மின்வெட்டு வந்தது? அதற்கு என்ன காரணம்? அதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அப்பொழுது மின்சார வாரியத்தினுடைய கடன் வெறும் 9,000 கோடி ரூபாய். 2006-லிருந்து 2011 வரை 5 ஆண்டுக்காலம் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். புதிய திட்டங்கள்

கொண்டு வந்தீர்கள் என்று சொன்னீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் வாங்கிய கடன் கிட்டத்தட்ட 36,000 கோடி ரூபாய் கூடுதலாக வாங்கி 45,000 கோடி ரூபாய் கடனாகிவிட்டது. யார் கடன் வாங்கியது? நீங்கள் வாங்கினீர்களா? நாங்கள் வாங்கினோமா? தொடர்ந்து யாராக இருந்தாலும் புதிய திட்டங்களுக்கு கடன் வாங்கித்தான் அந்தத் திட்டத்தை நாம் செய்ய வேண்டும். அதற்குப் பின்னால்தான் அந்தக் கடனை அடைக்க வேண்டும். அதை நீங்களும்தான் வாங்கியிருக்கின்றீர்கள்; நாங்களும்தான் வாங்கியிருக்கின்றோம். ஆனால், 234 மெகா வாட் அளவுக்குத்தான் நீங்கள் அந்த 5 ஆண்டுக் காலத்தில் கொண்டு வந்த நிறுவுதிறன். மாண்புமிகு அம்மா அவர்கள் 5 ஆண்டுக்காலத்தில் கிட்டத்தட்ட 4,600 மெகா வாட் அளவிற்கு நிறுவுதிறனைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். புதியதாக, கூடுதலாக இணைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கடந்த முறைகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட மின் கோபுரம் அமைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அது உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், அப்பொழுது அந்த மின் கோபுரத்தை அமைப்பதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. புதிய அரசு வந்ததற்குப் பின்னால்தான் அதை அமைக்க ஆரம்பித்தார்கள். அதனால்தான் நாம் வட இந்தியாவிலிருந்து கொண்டு வரவேண்டிய மின்சாரத்தைக்கூட கொண்டு வர முடியாத சூழ்நிலை. அது உங்கள் தவறு என்று நான் சொல்லவில்லை. அங்கே கொண்டு வருவதற்கு அந்த மின் தொடரமைப்பு இல்லாத காரணத்தினால் அதுபோன்ற ஒரு சூழ்நிலை. இன்றையதினம், cable வேண்டும், cable வேண்டும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ் அவர்கள் கூட கேட்டார்கள். அந்தத் திட்டத்திற்காக இதை மேலே கொண்டு செல்கின்ற பாதையென்றால், ஒரு இலட்சம் ரூபாய் என்று சொன்னால், புதைவட தடமாக இருந்தால் 6 இலட்சம் ரூபாய், 7 இலட்சம் ரூபாய் ஆகின்றது. அதற்கெல்லாம் நிதியைப் பெற்றுத்தான் நாம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மக்களுடைய பாதுகாப்பு முக்கியம். அதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மரியாதைக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மின்சார வாரியக் கடனைப் பொறுத்தவரை, நாங்கள் வாங்கினோம் என்று சொல்வதைவிட, உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் அதிகமாக வாங்கினீர்கள்





என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கடன் வாங்கினோம் என்றால், capital expenditure செய்கின்றோம். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் செய்தது இல்லை. எண்ணூரில் இந்தத் திட்டங்களையெல்லாம் யார் போட்டது? நாங்கள்தான் போட்டோம். அதற்காக நாங்கள் கடன் வாங்கியிருக்கிறோம். ஆனால், ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நானும் மின்சாரத் துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். ஆட்சி வரும், போகும். ஆனால், மின் மிகை மாநிலம், மின் மிகை மாநிலம் என்று நான் சொல்லவில்லை. நாங்கள் deficit என்றுதான் சொன்னோம். திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் 'என்னாலேயே போய்விட்டது' என்று சொன்னார். ஆகவே, நாங்கள் அதை மறைக்கவில்லை. ஆனால், நீங்கள்தான் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இதைத்தான் கடன் வாங்கிக் கொடுத்துவிட்டு, பெரிதாகச் சொல்கிறீர்கள் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, "விஷன் 2023" உங்களுடைய இலட்சியக் கனவு என்று சொன்னேன். இந்த விஷன் 2023-ஐப்பற்றி முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் என்ன நினைத்தார்கள் என்று, 2012-2013 நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஓர் அருமையான கருத்தைச் சொன்னார்கள். "The Vision document aspires for a six fold growth in per-capita income over the next 10 years". இவர் சொல்லியிருக்கிறார். இதுதான் அம்மாவினுடைய இலட்சியம் என்று சொல்கிறார். என்ன இலட்சியம்? "The Vision document aspires for a six fold growth in per-capita income over the next 10 years".

அதாவது, அடுத்த பத்து ஆண்டுகளில் தனி நபர் வருமானம், ஆறு மடங்கு உயரும் என்று சொன்னார். அப்பொழுது பார்ப்போம். 2013 ஆம் ஆண்டு சொல்கிறார் அல்லவா? தனி நபர் வருமானம் ஆறு மடங்கு உயரும் என்று. அப்படியானால்,

[திரு. துரைமுருகன்] [2019 பிப்ரவரி 13

2012-2013 ஆம் ஆண்டில் தனி நபர் வருமானம் எவ்வளவு இருந்தது என்று கேட்டீர்களென்றால், 1 இலட்சத்து 3 ஆயிரத்து 600 ரூபாய். அதுதான் தனி நபர் வருமானம். இதை ஆறு மடங்கு உயர்த்தப் போகிறேன் என்று சொன்னார். அப்படி ஆறு மடங்கு உயர்த்தினால் எவ்வளவு வரும்? 6 இலட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபாயாக உயர்த்தியிருக்க வேண்டும். ஆனால், ஆறு ஆண்டுகள் கழித்து, அவர் சொல்லியிருக்கிறாரே, தனி நபர் வருமானம் என்னவென்று பார்ப்போமென்று பார்த்தால், 2017-2018 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 42 ஆயிரத்து 267 ரூபாயாகத்தான் உயர்ந்திருக்கிறது. இந்த விகிதாச்சாரத்தில் இன்னும் நான்கு ஆண்டுகளில் தனி நபர் வருமானம் எப்படி 6 இலட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபாயாக உயரும் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பதிலுரையிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இதோ முடிந்துபோய்விட்டது. உரையை முடித்துவிடுகிறேன்.

அடுத்து, இன்னொன்று, மதுரை. வெகு நாட்களாவே சொல்லிக் கொண்டிருக்கிறோம். நான் 2011 ஆம் ஆண்டிலிருந்து படித்துக்கொண்டேயிருக்கிறேன். எங்கள் period-லும் அதுகுறித்து சொல்லியிருக்கிறோம். நான் இல்லையென்று சொல்லவில்லை. 2013-2014 ஆம் ஆண்டில் மதுரை, தூத்துக்குடி தொழில் வழித்தடத்தை ஏற்படுத்திட இந்த அரசு ஆவன செய்யும் என்று சொன்னீர்கள். என்னவென்றால், அந்தமாதிரி வழித்தடத்தை ஏற்படுத்தினால், 4 வழி மண்டலங்கள், ஒரு வேளாண்மை வணிக மண்டலம், 2 வணிக முதலீட்டு மண்டலங்கள், 1 சிறப்பு சுற்றுலா மண்டலம், 1 கிராம சுற்றுப்புற மண்டலம், 1 அறிவுசார் மண்டலம் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். 10 ஆண்டுக் காலத்திற்குள் ஒரு இலட்சம் கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்க்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதே கருத்தை, 2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 32 ஆம் பக்கத்திலும்; 2015-2016 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 36 ஆம் பக்கத்திலும்; 2016-2017 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 33 ஆம் பக்கத்திலும், 2017-2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 44 ஆம் பக்கத்திலும், 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 43 ஆம் பக்கத்திலும், இத்தனை பக்கங்களிலும் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வந்தீர்கள். அவருக்கே அலுத்துப் போய்விட்டது. இதை எப்படி திரும்பத் திரும்பச் சொல்வது என்று? எனவே, இந்த ஆண்டு



2019 பிப்ரவரி 13] [திரு. துரைமுருகன்]

நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆகவே, இதைப்பற்றிச் சொல்ல வேண்டும்.

ஆக, இப்படி இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லாமல், இருப்பதையே சொல்லிக் கொண்டிருக்கும் நிதிநிலை அறிக்கையாக உள்ளது. அதனால், இந்த நிதிநிலை அறிக்கை பற்றி எல்லோரும் ஒன்று சொன்னார்கள். நான் எப்படிச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்று கேட்டால், எங்கள் தலைவரே, அதை ஒரு குப்பைக்கூளம் என்று சொல்லிவிட்டார். அதற்கே அவர்கள் கோபித்துக் கொண்டார்கள். நானும் அப்படி சொல்ல முடியவில்லை. எல்லோரும் நேருக்கு நேர் பார்த்து பழகிவிட்டோம். ஏதாவது சொன்னால், மனம் சங்கடப்படும் என்று பார்க்கிறேன். என்ன சொல்வது என்று தெரியவில்லை? But, I have an idea. Sir, I hope this is the last budget of the A.D.M.K. Government. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-2-2019) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-29 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

50. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

48. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை. (2018-2019)

49. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை. (2018-2019)

[2019 பிப்ரவரி 13

*50.* பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தைந்தாவது அறிக்கை. *(2018-2019)*

*51.* பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தாறாவது அறிக்கை. *(2018-2019)*

*52.* பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தி மூன்றாவது அறிக்கை. *(2018-2019)*

*53.* பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தி நான்காவது அறிக்கை. *(2018-2019)*

*54.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பதாவது அறிக்கை. *(2018-2019)*

*55.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை. *(2018-2019)*

*56.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்திரெண்டாவது அறிக்கை. *(2018-2019)*

*57.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை. *(2018-2019)*

*58.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை. *(2018-2019)*

*59.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை. *(2018-2019)*

*60.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. *(2018-2019)*

*61.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை. *(2018-2019)*

*62.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை. *(2018-2019)*

*63.* அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை. *(2018-2019)*



2019 பிப்ரவரி 13]

*64.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. *(2018-2019)*

*65.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2018-2019)*

*66.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. *(2018-2019)*

*67.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. *(2018-2019)*

*68.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. *(2018-2019)*

*69.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை. *(2018-2019)*

*70.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை. *(2018-2019)*

*71.* மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. *(2018-2019)*

*72.* மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கை. *(2018-2019)*

*73.* மனுக்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. *(2018-2019)*

*74.* மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கை. *(2018-2019)*

*75.* பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை. *(2018-2019)*

-----